
# நாம் தமிழர் கட்சி



# அடிப்படை அமைப்பு அரசியல் மாற்றம்!

## இது மாற்றத்திற்கான எளிய மக்களின் புரட்சி

## நாடாளுமன்றத் தேர்தல் வரைவு - 2024

நமது சின்னம்

ஒலிவாங்கி (மைக்)



தமிழ் மறையோன்

# திருவள்ளுவப் பெருமகனார்

# நாடாளுமன்றத் தேர்தல் வரைவு - 2024

## உள்ளடக்கம்


1. காங்கிரசும் பாஜகவும் வெவ்வேறல்ல! 06
2. மாநில உரிமைகளை அடகு வைத்த திமுக, அதிமுக 08
3. நாடாளுமன்றத்தில் நாம் தமிழர் 10
4. அடிப்படை அமைப்பு அரசியல் மாற்றம் 12
5. தன்னாட்சியும் கூட்டாட்சியும் 14
6. மக்களாட்சிக்கு எதிரானவை 15
   - குடியரசுத் தலைவர் 15
   - மாநிலங்களவைச் சீர்திருத்தம் 15
   - ஆளுநர் 16
   - சட்டப்பிரிவு 356 நீக்கம் 17
   - தொகுதி மறுசீரமைப்பு 17
7. தேர்தல் சீர்திருத்தம் 18
   - சின்னம் இல்லாத் தேர்தல் (Symbol-Less Election) 18
   - வாக்கு இயந்திரத்திற்குத் தடை 18
   - ஊழல் செய்பவர்களுக்குத் தேர்தலில் தடை 19
   - பரப்புரை முறைமைச் சீர்திருத்தம் 19
   - இரு தொகுதிகளில் போட்டியிடத் தடை 20
   - வாக்களிப்பது மக்களின் கடமை 20
   - அயல்நாடு வாழ் இந்தியக் குடிமக்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பு 21
   - சிறைக்கைதிகளுக்கு வாக்களிக்கும் வாய்ப்பு 21
   - இடைத்தேர்தல் முறையை ஒழிப்போம் 22
   - மற்ற கட்சிகளின் சின்னத்தில் போட்டியிடத் தடை 22
8. தொகுதி மேம்பாட்டு நிதியை வீணடிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 23
9. நீதித்துறைச் சீர்திருத்தம் 24
   - உயர்நீதிமன்றங்களும் உச்சநீதிமன்றமும் 24
   - ஒரே வழக்கிற்கு மாறுபட்ட தீர்ப்புகள் 24
   - மண்ணின் மைந்தர்களே நீதியரசர்கள் 24
   - தமிழே தமிழ்நாட்டின் வழக்காடு மொழி 25
   - அரசுப் பதவிகளில் ஓய்வு பெற்ற நீதியரசர்கள் 26
   - இந்தியத் தண்டனைச் சட்டப் பெயர்மாற்றம் 26

10. பொறுப்புடைமை உரிமை (Right to Accountability) 27

11. பெண்ணும் ஆணும் சமம் 28

- பாலியல் குற்றங்களுக்கு மரண தண்டனை 28
- மகளிர் இட ஒதுக்கீடு திருத்தச் சட்டம் 2023 29

12. மணிப்பூர் வன்முறை 31

13. தேசிய இனங்களுக்கு எதிரானவை 32

- காசுமீர் - பிரிவு 370 நீக்கம் 33
- கச்சத்தீவு 34
- வடமாநிலத்தவர் குடியேற்றம் 35

14. சாதி, மதவெறியைத் தூண்டும் வெறுப்பரசியல் 36

15. நாம் தமிழர் கட்சி எதிர்க்கும் சட்டங்கள் 38

- குடியுரிமைத் திருத்தச் சட்டம் (CAA), தேசிய மக்கள்தொகைப் பதிவேடு (NPR), தேசியக் குடியுரிமைப் பதிவேடு (NRC) 38
- தேசியப் புலனாய்வு முகமைத் (NIA) திருத்தச் சட்டம் 39
- முத்தலாக் தடைச் சட்டம் 40
- பொது உரிமையியல் சட்டம் (Uniform Civil Code) 41
- பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான இடஒதுக்கீடு (EWS) 41
- வேளாண் சட்டங்கள் 42
- கடலோர ஒழுங்குமுறை மண்டல (CRZ) விதிமுறை 42

16. நாம் தமிழர் கட்சி எதிர்க்கும் திட்டங்கள் 43

- தேர்தல் நன்கொடைத் தளை (Electoral Bonds) 43
- முதன்மை அமைச்சர் பேரிடர்க்கால நிதி (PM CARES Fund) 44
- அக்னிபாத் (Agnipath) 45

17. பணமதிப்பு நீக்கம் என்ற மோசடி 46

18. சரக்கு மற்றும் சேவை வரி 47

19. தனியார்மயம் தாராளமயம் உலகமயம் 48

- பாதுகாப்புத்துறையில் தனியார் மற்றும் அயலக முதலீடு 49

20. தற்சார்புப் பசுமைத் தாய்மைப் பொருளாதாரம் 50

- பொருளாதாரக் குற்றங்கள் 50
- பொருளாதாரக் குற்றங்களுக்கான தீர்வுகள் 51

21. நீர்வளப் பெருக்கம் 52

- நீர்ப் பங்கீட்டுக்கான தீர்வுகள் 53
- நீர் என்பது பொதுவுடைமை 54

22. மீனவர்கள் நலன் 55

23. வேளாண்துறையில் புரட்சி 57

- கால்நடை வளர்ப்பு 59

24. அறிவை வளர்க்கும் கல்வி 60
- கல்வி முறை மாற்றம் 61
- கல்வி - மாநில உரிமை 61
- நுழைவுத்தேர்வு முறை ஒழிப்பு 62
- ஆளுநர் வேந்தரன்று 64
- தேசியக் கல்விக் கொள்கை 64
- ஒன்றிய அரசு கல்விக்கு ஒதுக்கும் நிதி 65

25. மருத்துவத்துறையில் புரட்சி 66
- மரபு மருத்துவ முறைகள் 66
- சிற்றூர்களின் மருத்துவக் கட்டமைப்பு 67
- மருத்துவக் கழிவு மேலாண்மை 67

26. போக்குவரத்துத்துறையில் மாற்றம் 69
- சுங்கவரி நீக்கம் 69
- தமிழர்களுக்கே முன்னுரிமை 70
- நெய்தல் பாதுகாப்பு 71
- துறைமுகம் மற்றும் வானூர்தித் துறைகளில் மாநில அரசுகள் 71

27. மாற்று மின் பெருக்கம் 72

28. பேரழிவுத் திட்டங்கள் 74
- நீரகக்கரிமத் (Hydrocarbon) திட்டம் 75
- நரிமணம் எண்ணெய் தூய்மையாக்கல் (சுத்திகரிப்பு) நிலையம் 75
- பரந்தூர் வானூர்தி நிலையம் 75
- அதானி துறைமுக விரிவாக்கம் 76
- சாகர்மாலா திட்டம் 76
- கூடங்குளம் அணுமின் நிலையம் 76
- கல்பாக்கம் ஈனுலை 76
- எண்ணூர் அனல்மின் நிலையம் 77
- கேரள மருத்துவக் கழிவு 77
- கனிம வளக்கொள்ளை 77
- சேலம் - சென்னை எட்டு வழிச்சாலை 78
- இயற்கைப் பேரழிவுச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் 78

29. காலநிலை மாற்றம் 79

30. ஈழம் எங்கள் இனத்தின் தேசம் 80

31. விடுதலைப் புலிகள் - தடை நீக்கம் 81

32. எழுவருக்கான முழு விடுதலை 82

# காங்கிரசும் பாஜகவும் வெவ்வேறல்ல!

**“காங்கிரசு கதர் உடுத்திய பாஜக, பாஜக காவி உடுத்திய காங்கிரசு”**

**“காங்கிரசு தமிழினத்தின் எதிரி, பாஜக மனிதகுலத்தின் எதிரி”**

**- செந்தமிழன் சீமான்**



காங்கிரசு, பாஜக எனும் இந்தியத் தேசியக் கட்சிகளின் ஆட்சி முறையே இந்திய ஒன்றியம் எதிர்கொண்டிருக்கும் அத்தனை சிக்கல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முதன்மையான காரணமாகும். இதனால், இந்திய ஒன்றியத்தின் கூட்டாட்சிக் கோட்பாடு முற்றிலும் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது. அதிகாரக்குவிப்பு, அடக்குமுறை, ஒடுக்குமுறை, எதேச்சதிகாரப் போக்கு, மாநில உரிமைகள் பறிப்பு, மக்களுக்கு எதிரான செயல்பாடுகள், அதிகார அத்துமீறல், ஊழல், கையூட்டு (இலஞ்சம்), நிருவாகச்சீர்கேடு எனக் கடந்த காலத்தில் காங்கிரசு அரசுகள் செய்த கொடுங்கோன்மையையே வீரியமாக இன்றைக்கு பாஜக அரசு செய்து கொண்டிருக்கின்றது.


**கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு, உட்கட்டமைப்பு, மக்கள் நல்வாழ்வு, சூழலியல், மாநில உரிமைகள், மக்கள் நலன்கள் எனச் சுழல வேண்டிய நாட்டின் அரசியல், சாதி, மதத்துக்குள் சிக்கிக் கிடக்கின்றன.**


நடுவண் புலனாய்வுத்துறை, வருமான வரித்துறை, அமலாக்கத்துறை எனும் தன்னாட்சி அமைப்புகளைக் கையகப்படுத்தி, அவற்றின் மூலம் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது பாஜக அரசு. தேர்தல் ஆணையம், நீதிமன்றம் எனும் மக்களாட்சியைத் தாங்கி நிற்கும் தூண்களின் தன்னாட்சி உரிமையும், அதிகாரமும் பாஜக அரசின் தலையீட்டால் கேள்விக்குறியாகி இருக்கின்றன. பாஜக ஆளாத மாநிலங்களின் ஆட்சிகளுக்கு ஆளுநர் மூலம் பெரும் இடையூறு விளைவிக்கப்படுகின்றது. கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு, உட்கட்டமைப்பு, மக்கள் நல்வாழ்வு, சூழலியல், மாநில உரிமைகள், மக்கள் நலன்கள் எனச் சுழல வேண்டிய நாட்டின் அரசியலானது சாதி, மதத்துக்குள் சிக்கிக் கிடக்கின்றது. நடைபெறவிருக்கும் 2024ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தலில் கெடுவாய்ப்பாக பாஜக வெற்றி பெற்றுவிட்டால், இனியொரு முறை தேர்தல் நடக்குமா? இல்லை அதிகாரக்குவிப்பை அடிப்படையாகக் கொண்ட அதிபர் ஆட்சி முறையை நோக்கி நாடு செல்லுமா? எனும் கேள்வியும், அச்சமும் எழுந்திருக்கின்றது. இந்திய ஒன்றியம் இத்தகைய பேரவலத்தின்


விளிம்பில் நிற்கின்றது. காரணம், பாஜக. அதற்கு விதையிட்டது காங்கிரசு.

அடிப்படையில், காங்கிரசு, பாஜக எனும் இரு அரசியல் ஆற்றல்கள் இடையே கட்சி வேற்றுமை இருக்கிறதே ஒழிய, கோட்பாட்டு வேறுபாடு இல்லை. இரு கட்சிகளுமே தனியார் மயத்தை ஊக்குவிக்கும்; தனிப்பெரு முதலாளிகளுக்கான ஆட்சியை நடத்தும்; ஒற்றைமயத்தை ஆதரிக்கும்; இந்துத்துவத்தை ஊக்குவிக்கும். இன்றைக்கு பாஜக முன்வைக்கும், 'இராம இராஜ்ஜியம்' எனும் முழக்கத்திற்கு முன்னோடி காங்கிரசுதான். நரேந்திர மோடிக்கும் யோகி ஆதித்யநாத்துக்கும் முன்பாக அதனை முன்வைத்தவர் இராஜீவ் காந்தி. அன்றைக்கு அயோத்தியில் சங் பரிவார் கும்பலால் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது வேடிக்கைப் பார்த்தது காங்கிரசு. இன்றைக்கு அதே இடத்தில் இராமர் கோவிலுக்குத் திறப்பு விழா நடத்தியிருக்கிறது பாஜக. நீட் தேர்வைக் கொண்டு வந்தது காங்கிரசு. இன்றைக்கு அதனை வலிமையாகச் செயல்படுத்திக் கொண்டிருப்பது பாஜக. பண மதிப்பிழப்பைக் கொண்டு வர எண்ணியது காங்கிரசு; செயல்படுத்திக் காட்டியது பாஜக. சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்பு முறையை அறிமுகப்படுத்தியது காங்கிரசு; அதனை நடைமுறைப்படுத்தியது பாஜக. தேசியப் புலனாய்வு முகமையைக் கொண்டு வந்தது காங்கிரசு; அதனைத் திருத்தி, அதிகாரத்தை அதிகப்படுத்தியது பாஜக. மதத்தை அளவீடாகக் கொண்ட குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு விதையிட்டது காங்கிரசு; அதனை செயல்படுத்தியது பாஜக.

இவ்வாறாக, கல்விக் கொள்கை, மருத்துவக் கொள்கை, பொருளாதாரக் கொள்கை, வெளியுறவுக் கொள்கை என எதுவொன்றிலும் காங்கிரசுக்கும் பாஜகவுக்கும் இடையே வேறுபாடு இருந்தது இல்லை. அரை நூற்றாண்டுக் காலத்திற்கும் மேலாக நாட்டையாண்டு கெடுத்தது காங்கிரசு. அதனை இன்னும் 5 ஆண்டுகளில் செய்து முடிக்க எண்ணுகிறது பாஜக. எனவே தான், 'காங்கிரசு கதர் கட்டிய பாஜக, பாஜக காவி கட்டிய காங்கிரசு' என்கிறோம். ஆண்ட காங்கிரசுக்கு மாற்று பாஜகவும் இல்லை! ஆளும் பாஜகவுக்கு மாற்று காங்கிரசும் இல்லை. இரு கட்சிகளுமே ஒற்றை நாணயத்தின் இரட்டை முகங்கள் போன்றவை. இவ்விரு கட்சிகளையும் புறந்தள்ளி, மாநிலக் கட்சிகள் ஒருமித்து, ஒன்றியத்திலே ஒரு கூட்டாட்சியை அமைப்பது ஒன்றுதான் தேசிய இனங்கள் இடையேயான ஒருமைப்பாட்டிற்கும் மாநிலங்களின் நலன்களுக்கும் ஏற்றதாகும். அதனை நோக்கியே பயணிக்கிறது நாம் தமிழர் கட்சி.







# மாநில உரிமைகளை அடகு வைத்த திமுக - அதிமுக

> "திமுகவும் அதிமுகவும்
> ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்"
> - பெருந்தலைவர் காமராசர்



**மாநில உரிமை, மக்கள் நலன், மண்ணின் வளம் என்றெல்லாம் பேசி, அதிகாரத்திற்கு வந்த இரு பெரும் கட்சிகளும் கையூட்டு, ஊழலில் திளைத்து, மக்கள் நலனை முற்றாகத் தொலைத்துவிட்டன.**

திமுக, அதிமுக எனும் இரு பெரும் திராவிடக் கட்சிகளும் அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழ்நாட்டை மாறி மாறி ஆண்டு வருகின்றன. மாநில உரிமை, மக்கள் நலன், மண்ணின் வளம் என்றெல்லாம் பேசி, அதிகாரத்திற்கு வந்த இரு பெரும் கட்சிகளும் கையூட்டு (இலஞ்சம்), ஊழலில் திளைத்து, மக்கள் நலனை முற்றாகத் தொலைத்துவிட்டன. இத்துடன், எந்தத் தேசியக் கட்சிகளை எதிர்த்து அரசியலைத் தொடங்கினார்களோ, அதே கட்சிகளோடு கூட்டணி அமைத்து சமரசம் செய்து கொண்டார்கள். மாநில உரிமைகள் பறிபோயின; இந்தியும் மெல்ல மெல்ல உள்ளே நுழைந்தது. ஒன்றிய அமைச்சரவையில் திமுகவும், அதிமுகவும் பல ஆண்டுகள் பங்கேற்ற போதும் மாநில உரிமைகளை மீட்டெடுக்கவோ மாநிலத் தன்னாட்சியை நிலைநாட்டவோ எதுவொன்றும் செய்யவில்லை.

மாநிலத் தன்னாட்சியென்று முழங்கிய திமுக மட்டும் ஒன்றிய அமைச்சரவையில் 18 ஆண்டுகள் பங்கேற்றிருக்கின்றது. வி.பி.சிங், தேவகௌடா, ஐ.கே.குஜரால், வாஜ்பாய், மன்மோகன் சிங் எனப் பல்வேறு முதன்மை அமைச்சர்களின் அமைச்சரவையில் இருந்த திமுக, மாநிலத் தன்னாட்சியை மீட்க எதுவொன்றும் செய்யவில்லை என்பது வரலாற்று உண்மையாகும். குறிப்பாக, 2004 - 2009ஆம் ஆண்டுக் காலக்கட்டத்தில் பெரும்பான்மை காங்கிரசு அரசைத் தாங்கிப் பிடித்ததே அன்றைய திமுக கூட்டணியின் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான். அன்றைக்கு ஒன்றிய ஆட்சியின் நிருவாகத்தைத் தீர்மானிக்கிற உயரத்தில் இருந்தபோதும் பதவிகளைப் பெற்றுக் கொண்டதேயொழிய, மக்கள் நலனைத் துளியும் பொருட்படுத்தவில்லை. அக்காலக்கட்டத்தில் ஒன்றியத்தை





ஆண்ட காங்கிரசு அரசின் நேரடி விருப்பத்தால்தான் ஈழ இனப்படுகொலையே அரங்கேற்றப்பட்டது என்பதும் திமுகவின் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு மறுக்கவியலாச் சான்றாகும். ஒருகாலத்தில், திராவிட நாட்டை அடைவதாகச் சூளுரைத்த திமுக, காலப்போக்கில் தமிழ்நாட்டின் ஒரு நிலப்பகுதியான கச்சத்தீவைக் கூடத் தாரைவார்க்கத் துணை போனது என்பதுதான் ஏற்கவியலாப் பெருங்கொடுமையாகும்.

**‘அண்ணாயிசம்தான் எங்கள் கோட்பாடு’** என்று முழங்கிய அதிமுகவோ, மாநிலத் தன்னாட்சிக்கு எதிராக இந்திரா காந்தி நடைமுறைப்படுத்திய நெருக்கடி நிலையையே ஆதரித்தது. அதன் நீட்சியாக, மாநில உரிமைகளைக் காவு வாங்கும் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்புமுறை, தேசியப் புலனாய்வு முகமை, குடியுரிமைத் திருத்தச்சட்டம் வரை ஆதரித்துக் கொண்டிருக்கின்றது அதிமுக. தமிழ்நாட்டைத் தொடர்ச்சியாக ஆண்டு தமிழ் மக்களின் நலத்தையும், மண்ணின் வளத்தையும் கெடுத்ததோடு, ஒன்றியத்தை ஆளும் கட்சிகளோடு கூட்டணி வைத்து, மாநில உரிமைகளை அடகு வைத்து, பதவிகளைப் பெற்றுக் கொழுத்தன இரு பெரும் திராவிடக் கட்சிகளும். இவ்வாறாகத் தங்களுக்குக் கிடைக்கும் அதிகாரத்தைக் கொண்டு திமுகவும், அதிமுகவும் மக்களைச் சுரண்டிப் பிழைக்கின்றனவே தவிர, ஒருநாளும் மக்களுக்காக உழைக்க முன்வருவதில்லை என்பதே ஐம்பதாண்டுக் காலத்திற்கும் இக்கட்சிகளின் வரலாறு சொல்லும் பாடம்!

**தமிழ்நாட்டைத் தொடர்ச்சியாக ஆண்டு தமிழ் மக்களின் நலத்தையும், மண்ணின் வளத்தையும் கெடுத்ததோடு, ஒன்றியத்தை ஆளும் கட்சிகளோடு கூட்டணி வைத்து, மாநில உரிமைகளை அடகு வைத்து, பதவிகளைப் பெற்றுக் கொழுத்தன இரு பெரும் திராவிடக்கட்சிகளும்.**



# நாடாளுமன்றத்தில் நாம் தமிழர் கட்சி



கடந்த காங்கிரசின் ஆட்சிக்காலத்தில் மாநிலங்களின் அதிகாரங்கள் மெல்ல மெல்ல பறித்துக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில், தற்போது ஆளும் பாஜக அரசு மாநிலங்களை அதிகாரமற்ற ஒன்றியப் பகுதிகளாக மாற்ற முனைகிறது. ஒரே நாடு! ஒரே மக்கள்! ஒரே சட்டம்! ஒரே மொழி! ஒரே மதம்! ஒரே தேர்தல்! ஒரே தேர்வு! ஒரே உணவுச்சந்தை! ஒரே பொது வழங்கல் (விநியோகம்)! ஒரே முப்படைத்தளபதி! ஒரே கல்வித்திட்டம்! ஒரே வரலாறு! என அனைத்திலும் ஒற்றைமயத்தை உட்புகுத்தி, மாநிலங்களின் தன்னுரிமையையும், தேசிய இனங்களின் தனித்துவத்தையும் குலைக்க முனைகிறது. தேசிய இனங்களின் அடையாளங்களுக்கும், அவர்களது மரபுவழித் தாயகத்திற்கும் பெரும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள இக்காலத்தில், அவற்றை மீட்டுக் காக்க தேசிய இனங்கள் ஒன்றிணைந்து போராட வேண்டியது காலக்கடமையாகும்.

இதற்கு, உலகின் மிக மூத்த தேசிய இனங்களுள் ஒன்றாகவும் தனித்துவம் கொண்ட பேரினமாகவும் திகழும் தமிழினம் தனது மரபார்ந்த உரிமைகளையும் மாநிலத்தின் நலன்களையும் முன்னிறுத்தி நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் பொருட்டு, தனித்தே களம் காண்கிறது நாம் தமிழர் கட்சி. காங்கிரசு, பாஜக எனும் இரு கட்சிகளின் ஆட்சிகளுக்கு மாற்றாக, தேசிய இனங்களின் நலன்களைப் பேணும் ஒரு நல்லாட்சி ஒன்றியத்திலே அமைந்திட உழைக்கின்றது நாம் தமிழர் கட்சி!

தமிழ்நாட்டின் 39 தொகுதிகளில், கடந்த 2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பெருவாரியான வாக்குகளைப் பெற்று 37 இடங்களில் வெற்றி பெற்றது அதிமுக. 2019ஆம் ஆண்டு 38 இடங்களில் வெற்றி பெற்றது திமுக கூட்டணி. இப்படி பெருந்தொகையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பொழுதும் இவ்விரு கட்சிகளும் எந்த மாநில உரிமையையும் இதுவரை போராடிப் பெற்றுத் தரவில்லை. வென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக வீரியமாகக் குரல் கொடுத்துப் போராடவில்லை. திமுகவிற்கும் அதிமுகவிற்கும் தொடர்ச்சியாக வாக்களித்து ஏமாற்றம் அடைந்த தமிழ்நாட்டு மக்கள், ஒரு முறை மாற்றத்திற்காகத் தொடர்ச்சியாகத் தனித்துக் களம் காணும்

**ஆளும் பாஜக அரசு,
ஒரே நாடு!
ஒரே மக்கள்!
ஒரே சட்டம்!
ஒரே மொழி!
ஒரே மதம்!
ஒரே தேர்தல்!
ஒரே தேர்வு!
ஒரே உணவுச்சந்தை!
ஒரே பொது வழங்கல்!
ஒரே முப்படைத்தளபதி!
ஒரே கல்வித்திட்டம்!
ஒரே வரலாறு!
என அனைத்திலும் ஒற்றைமயத்தை உட்புகுத்தி, மாநிலங்களின் தன்னுரிமையையும், தேசிய இனங்களின் தனித்துவத்தையும் குலைக்க முனைகிறது.**



நாம் தமிழர் கட்சிக்கு வாக்குச் செலுத்தி நாடாளுமன்றத்திற்கு அனுப்பினால்தான், உண்மையில் தமிழ்நாட்டின் உரிமைக்கு நாடாளுமன்றத்தில் எப்படிக் குரல் கொடுக்க வேண்டுமென்றும், இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட திமுக - அதிமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்யத் தவறியதையும் கண்டுணர்ந்து அறிந்து கொள்ள முடியும்.


“அவரவர் நிலத்தை அவரவர் ஆள்வோம்! இந்தியாவைக் கூடிப் பேசி ஆள்வோம்” எனும் பெருமுழக்கத்துக்கேற்ப, தேசிய இனங்களின் தாயகங்களான மாநிலங்களை மண் மீதும், மக்கள் மீதும் பற்றுறுதி கொண்ட அந்தந்த மாநிலக் கட்சிகளே ஆள வேண்டும். இந்திய ஒன்றியத்தைத் தேசிய இனங்களின் நிகராளர்கள் (பிரதிநிதிகள்) ஒன்றுகூடி, கூட்டாட்சிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆள வேண்டும் என்பதே நாம் தமிழர் கட்சியின் பெருங்கனவு! இக்கனவு செயலாக்கம் பெறவே நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் களம் புகுகின்றது நாம் தமிழர் கட்சி!

**“அவரவர் நிலத்தை அவரவர் ஆள்வோம்! இந்தியாவைக் கூடிப் பேசி ஆள்வோம்” எனும் பெரும் முழக்கத்துக்கேற்ப, தேசிய இனங்களின் தாயகங்களான மாநிலங்களை மண் மீதும், மக்கள் மீதும் பற்றுறுதி கொண்ட அந்தந்த மாநிலக் கட்சிகளே ஆள வேண்டும்.**





# அடிப்படை அமைப்பு அரசியல் மாற்றம்!




**இந்திய ஒன்றியத்திலுள்ள எல்லா மொழிவழித் தேசிய இனங்களின் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, வரலாறு, வழிபாடு என அனைத்தையும் போற்றிப் பாதுகாக்க வேண்டியது இந்நாட்டின் தலையாய கடமையாகும். அப்போதுதான் இந்திய நாட்டின் ஒற்றுமையும், பன்முகத்தன்மையும் பாதுகாக்கப்படும்.**

இந்தியா என்பது பல்வேறு மொழிவழித் தேசிய இனத் தாயகங்களின் கூட்டமைப்பு; ஒன்றியம். இதைத்தான், இந்திய ஒன்றியத்தின் அரசமைப்புச் சட்டம், “இந்தியா, மாநிலங்களின் ஒன்றியம்” என்று குறிப்பிடுகின்றது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முதல் பிரிவினைத் தனக்கேற்றவாறு பொருள் கொண்டு, இந்திய ஒன்றியத்தின் பெயரை ‘பாரத்’ என்று முற்றிலுமாக மாற்றியமைக்க முயலும் ஒன்றிய அரசின் போக்கினை நாம் தமிழர் கட்சி கடுமையாக எதிர்க்கிறது.

இந்திய ஒன்றியத்திலுள்ள எல்லா மொழிவழித் தேசிய இனங்களின் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, வரலாறு, வழிபாடு என அனைத்தையும் போற்றிப் பாதுகாக்க வேண்டியது இந்நாட்டின் தலையாய கடமையாகும். அப்போதுதான் இந்திய நாட்டின் ஒற்றுமையும், பன்முகத்தன்மையும் பாதுகாக்கப்படும். அதற்கு ஒற்றைக்கட்சி ஆட்சி முறையை முழுமையாக ஒழிக்க வேண்டுமென வலியுறுத்துகின்றது நாம் தமிழர் கட்சி. அதற்கு இந்தியத் தேசியக் கட்சிகள் நாட்டையாளும் முறையைத் தகர்த்து, மொழிவழித் தேசிய இனங்களை நிகராளுமை செய்யும் (பிரநிதித்துவப்படுத்தும்) மாநிலக் கட்சிகள் ஒன்றுகூடி, இந்திய ஒன்றியத்தை ஆள்வதே கூட்டாட்சித் தத்துவத்தைப் பேணும் வகையிலிருக்கும். அதாவது, ஒவ்வொரு மாநிலத்தையும் அந்தந்த மாநிலத்தின் கட்சிகளே ஆளுகை செய்வதும், ஒன்றியத்தை ஆள்வதற்கு அனைத்து மாநில ஆட்சிகளின் நிகராளர்கள் (பிரதிநிதிகள்) கூடிப் பேசி ஒன்றிணைந்து ஆள்வதும்தான் சரியான கூட்டாட்சி.

இந்திய ஒன்றியம் குடியரசு அமைப்பாக உருவாக்கப்பட்டு, தனக்கான வரையறுக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத்தினைக் கொண்டு முக்கால் நூற்றாண்டைக் கடந்தும் தேசிய இனங்களுக்கான உரிய நிகராளுமை (Representation - பிரதிநிதித்துவம்) இன்றளவிலும் வழங்கப்படவில்லை என்பதே கசப்பான உண்மையாகும். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிராத மற்ற தேசிய இனங்கள் இரண்டாம் தரக் குடிமக்களாகவே அரசமைப்புச் சட்டத்தினாலும், ஒன்றியத்தை ஆளும் ஆட்சியாளர்களாலும், அதிகார நிறுவனங்களாலும் நடத்தப்பட்டு வருகின்றனர். குறிப்பாக, பன்னெடுங்காலமாக மாநிலத் தன்னாட்சியை வலியுறுத்தி வரும் தமிழ்நாடு, ஒவ்வொரு இடரின் போதும் உரிமைக்காக இந்திய ஒன்றிய



அரசிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சம வாய்ப்பும், சம உரிமையும் வழங்கப்படுவதற்குச் சில அடிப்படைக் கூறுகளைக் கொண்டிருக்கும்படி அமைப்பு மாற்றம் தேவைப்படுகின்றது. இதுவரையில் இந்தியாவின் முதன்மை அமைச்சர் (பிரதமர்) பதவியில் வட இந்தியாவைச் சேர்ந்தவர்களே பெரும்பான் மையாக இந்தியத் தேசியக் கட்சிகளால் அமர்த்தப்பட்டுள்ளனர். இதனால், தமிழ்நாடு, கேரளம் போன்ற தென்னிந்திய மாநிலங்களுக்கும், வடகிழக்கு மாநிலங்களுக்கும் இதுவரை முதன்மை அமைச்சர் பதவி கிடைக்கப்பெறவில்லை. இது இந்தியக் கூட்டாட்சி முறையிலுள்ள பெரும் குறைபாடாகும். நாட்டின் குடி ஒருவன் ஆளவே வாய்ப்பில்லாத ஒரு நாட்டை, எப்படி தன் நாடாகக் கருத முடியும்? ஆகவே, முதன்மை அமைச்சர் பதவியானது இந்திய ஒன்றியத்தின் பகுதிகளாக இருக்கும் அனைத்துத் தேசிய இனங்களும் நிகராளுமை செலுத்தும் வண்ணம், சுழற்சி முறையில் அமைந்திடும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான முயற்சிகளை அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் ஒன்றிணைந்து நாம் தமிழர் கட்சி முன்னெடுக்கும்.

**இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிராத மற்ற தேசிய இனங்கள் இரண்டாம் தரக் குடிமக்களாகவே அரசமைப்புச் சட்டத்தினாலும், ஒன்றியத்தை ஆளும் ஆட்சியாளர்களாலும், அதிகார நிறுவனங்களாலும் நடத்தப்பட்டு வருகின்றனர்.**



# தன்னாட்சியும் கூட்டாட்சியும்



**நாட்டின் பாதுகாப்பு, பணம் அச்சிடுதல் மற்றும் வெளியுறவுத்துறை ஆகியவற்றை ஒன்றியக் கட்டுப்பாட்டில் இருக்கச் செய்துவிட்டு, ஏனைய அதிகாரங்கள் யாவற்றையும் மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்க இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தேவையான மாற்றம் கொண்டுவர நடவடிக்கை.**

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சிக் கொள்கை என்பது பெயரளவிலேயே உள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது பட்டியலில் உள்ள சட்டமியற்றுகின்ற முறையில், ஒன்றிய அரசு 97 தலைப்புகளில் (Subjects) சட்டமியற்றும் அதிகாரத்தையும், மாநில அரசு 66 தலைப்புகளில் சட்டமியற்றும் அதிகாரத்தையும் பெற்றிருக்கின்றன. இத்தோடு, பொதுப் பட்டியலிலுள்ள தலைப்புகளிலும் ஒன்றிய அரசே இறுதி முடிவை எடுக்கும் எனும் வல்லாட்சிப் (எதேச்சாதிகார) போக்கு நிலவுவதால், பொதுப் பட்டியல் முழுமையாக நீக்கப்பட்டு அதன் அனைத்து அதிகாரங்களும் மாநிலப் பட்டியலில் சேர்க்கப்படுவதே சரியாக இருக்கும்.

நாட்டின் பாதுகாப்பு, பணம் அச்சிடுதல் மற்றும் வெளியுறவுத் துறை ஆகியவற்றை ஒன்றியக் கட்டுப்பாட்டில் இருக்கச் செய்துவிட்டு, ஏனைய அதிகாரங்கள் யாவற்றையும் மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்க இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தேவையான மாற்றம் கொண்டுவர தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி தொடர் நடவடிக்கையில் ஈடுபடும்.

# மக்களாட்சிக்கு எதிரானவை




## குடியரசுத் தலைவர்


இந்திய ஒன்றியம் என்பது ஒரு குடியரசு நாடு. ஆனால், இந்நாட்டின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவரையே குடிமக்களால் நேரடியாகத் தேர்வு செய்ய முடியாதெனும் அமைப்புமுறை, குடியாட்சிக் கோட்பாட்டிற்கு நேரெதிரானதாகும். அனைத்துச் சட்டங்களும் குடியரசுத் தலைவரின் கையொப்பத்தினாலேயே செயலாக்கம் பெறுகின்றன. மக்களால் தேர்வு செய்யப்படக்கூடிய ஒருவர் மீண்டும் மக்களைச் சந்தித்துத்தான் வெற்றிபெற வேண்டும் என்ற தேவை இருக்கின்ற வரையில்தான், அவர் மக்களின் நலனுக்காகச் செயலாற்றுவார். எனவே, குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்தலின் வழியே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது நாம் தமிழர் கட்சியின் கொள்கை முடிவாகும்.

**மக்களால் தேர்வு செய்யப்படக்கூடிய ஒருவர் மீண்டும் மக்களைச் சந்தித்துத்தான் வெற்றிபெற வேண்டும் என்ற தேவை இருக்கின்ற வரையில்தான், அவர் மக்களின் நலனுக்காகச் செயலாற்றுவார். எனவே, குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்தலின் வழியே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.**

## மாநிலங்களவைச் சீர்திருத்தம்

மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டால் தோற்றுவிடுவோமெனக் கருதுபவர்கள், தான் சார்ந்த கட்சிக்குத் தனது மாநிலத்திலோ பிற மாநிலங்களிலோ இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கொண்டு, மாநிலங்களவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறைமை நடைமுறையில் உள்ளது. அவ்வாறு மாநிலங்களவை உறுப்பினர்களானவர்கள் ஒருபோதும் இந்திய ஒன்றிய அமைச்சரவையிலும், மக்கள் மீது நேரடியாக ஆளுகை செலுத்தும் எந்தப் பதவியிலும் பொறுப்பமர்த்தப்படக் கூடாது என்பது நாம் தமிழர் கட்சியின் கொள்கை முடிவாகும்.









மக்களைச் சந்தித்து வாக்குகளைப் பெற்று, மக்களின் நம்பிக்கையைப் பெறாதவர்கள் மக்கள் மீது அதிகாரத்தைச் செலுத்தும் அமைச்சரவையில் இடம்பெறுவது மக்களாட்சி மாண்புக்கு எதிரானது. ஆகவே, மாநிலங்களவை உறுப்பினர்கள் அமைச்சராவதைத் தடுக்கும் வகையில் அமைப்பு மாற்றம் கொண்டு வருவதற்குரிய செயல்பாடுகளை நாம் தமிழர் கட்சி முன்னெடுக்கும்.

மக்களைச் சந்தித்து வாக்குகளைப் பெற்று, மக்களின் நம்பிக்கையைப் பெறாதவர்கள் மக்கள் மீது அதிகாரத்தைச் செலுத்தும் அமைச்சரவையில் இடம்பெறுவது மக்களாட்சி மாண்புக்கு எதிரானது. ஆகவே, மாநிலங்களவை உறுப்பினர்கள் அமைச்சராவதைத் தடுக்கும் வகையில் அமைப்பு மாற்றம் கொண்டு வருவதற்குரிய செயல்பாடுகளை நாம் தமிழர் கட்சி முன்னெடுக்கும்.

## ஆளுநர்

> **ஒன்றிய அரசு அதிகாரத்தில் இருக்கும் கட்சி ஆளாத மாநிலங்களில், அவர்களின் ஒற்றராகப் பணியமர்த்தப்படுபவர்தான் ஆளுநர்**
>
> **– செந்தமிழன் சீமான்**

ஆளுநர் எனும் பதவியானது மாநிலங்களைக் கண்காணிப்பதற்காக வெள்ளையர் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட கங்காணிப் பதவியாகும். மக்களால் தேர்வு செய்யப்படாது, இந்திய ஒன்றிய அரசால் பணியமர்த்தப்படுவதன் மூலம் அதிகாரத்தைப் பெற்று, மக்களின் வரிப்பணத்தில் ஊதியத்தைப் பெறும் ஆளுநர்கள், மக்களின் நம்பிக்கையைப் பெற்ற மாநில அமைச்சரவையின் செயல்பாட்டை முடக்குவதும், சட்டமன்றத்தில் இயற்றப்படும் சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் தராது காலம் தாழ்த்துவதும் அப்பட்டமான மக்களாட்சிப் படுகொலைகளாகும்.

மாநில அரசின் ஆளுகைக்கு இடையூறாக விளங்கும் ஆளுநர் பதவியானது இந்திய ஒன்றியத்தின் எந்தவொரு மாநிலத்திற்கும் தேவையில்லை எனும் நிலையே மாநிலத் தன்னாட்சியைப் பேணுவதற்கு வழிவகுக்கும். எனவே, ஆளுநர் பதவியை முழுமையாக நீக்கம் செய்ய ஏதுவாகச் சட்டத் திருத்தம் மேற்கொள்வதற்கான செயல்பாடுகளை நாம் தமிழர் கட்சி முன்னெடுக்கும்.

## சட்டப்பிரிவு 356 நீக்கம்


தினமணி
தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்
# தி.மு.க. அரசு நீக்கப்பட்டது
சட்டப்பேரவை கலைப்பு
'ஆட்சி கலைப்பு: மக்களுக்கு விடுத்த அறைகூவல்'
இரண்டாம் முறையாக ஆட்சியை இழந்த திமுக அரசு

ஒரு மாநிலத்தின் ஆட்சி நிருவாகம் குறித்து அம்மாநில ஆளுநரிடமிருந்து அறிக்கையைப் பெற்று, 356ஆவது சட்டப்பிரிவைப் பயன்படுத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசைக் குடியரசுத் தலைவரால் கலைத்துவிட முடியும் என்பது மக்களாட்சிக்கு எதிரானது. கர்நாடகத்தின் முதல்வராக இருந்த சோ.இரா.பொம்மையின் (S.R.Bommai) ஆட்சிக் கலைப்புக் குறித்தான வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புக்குப் பிறகு, ஆளுநரின் அறிக்கையைக் கொண்டு மாநிலங்களின் ஆட்சியைக் கலைப்பது அரிதினும் அரிதான ஒன்றாக மாறிவிட்டாலும், சட்டப்பிரிவு 356 எனும் சட்டப்பிரிவானது மாநிலங்களின் இறையாண்மைக்கும் தன்னாட்சி உரிமைக்கும் எதிரானதாகும். எனவே, அச்சட்டப்பிரிவை நீக்குவதற்கான முயற்சியை அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும்.

## தொகுதி மறுசீரமைப்பு

நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை மாநிலங்களிலுள்ள மக்கள்தொகையின் அடிப்படையில் உயர்த்தும் முடிவை நாம் தமிழர் கட்சி கடுமையாக எதிர்க்கின்றது. ஏனென்றால், 'மக்கள் தொகைக் கட்டுப்பாடு' என இந்திய ஒன்றியம் முழுமைக்கும் முன்வைத்த முடிவை ஏற்று, அதனைப் பின்பற்றிய தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் இதன்மூலம் பெருமளவில் பாதிப்படையும். அதேநேரம், மக்கள்தொகைக் கட்டுப்பாட்டைப் பின்பற்றாததன் விளைவினால் மிகுதியான மக்கள்தொகையைக் கொண்டுள்ள உத்திரப்பிரதேசம், பீகார், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் தற்பொழுது இருப்பதைவிட அதிகளவிலான மக்களவை இடங்களைப் பெற்று, மேலும் ஆதிக்கம் மிகுந்தவைகளாக மாறும். இதன்மூலம், இந்திய ஒன்றியத்தின் ஆட்சியைப் பிடிக்க எண்ணும் தேசியக் கட்சிகள் வடமாநிலங்களில் பெறும் இடங்களைக் கொண்டே ஒட்டுமொத்த ஒன்றியத்தையும் ஆட்சிசெய்யும். அதனால், சட்டதிட்டங்கள், நிதிப்பகிர்வு என அனைத்திலும் தென்னிந்திய மாநில மக்களின் விருப்பு வெறுப்பிற்குத் துளியும் மதிப்பளிக்காத நிலை உருவாகி, அவர்களின் நலன்கள் முற்றிலும் புறந்தள்ளப்படும் பேராபத்து நிகழும். இது இந்தியாவின் கூட்டாட்சிக் கோட்பாட்டினை முழுமையாக அழித்துவிடும்.

"முப்பது கோடி முகமுடையாள்.." என்று இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாடினார் பெரும்பாவலர் பாரதி. ஏனென்றால், அப்போது நாட்டின் மக்கள்தொகை 30 கோடியாக இருந்தது. அக்காலக்கட்டத்தில், நாட்டு விடுதலைக்குப் பிறகு அம்மக்கள் தொகையின் அடிப்படையில், நாடாளுமன்றத் தொகுதிகள் 489ஆகப் பிரிக்கப்பட்டன. ஆனால், இந்தியாவின் தற்போதைய மக்கள்தொகை 130 கோடியைத் தாண்டியுள்ள நிலையிலும், நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை 543ஆகவே இருப்பதென்பது துளியும் பொருத்தமற்றது. இது சரியான நிகராளுமையாகவும் இல்லை. இதனைச் சரிசெய்யும் பொருட்டு, தற்பொழுதுள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு நாடாளுமன்றத் தொகுதி என்பதனை, 3 சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு நாடாளுமன்றத் தொகுதி என்று திருத்தியமைக்க நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது.

# தேர்தல் சீர்திருத்தம்

## சின்னம் இல்லாத் தேர்தல் (Symbol-Less Election)

**நீண்ட காலமாக ஒரே சின்னத்தில் தேர்தலைச் சந்திக்கும் கட்சிகளுக்கும், புதிதாகச் சின்னத்தைப் பெற்று தேர்தலில் போட்டியிடும் கட்சி அல்லது கட்சிசாராத் தன்னிச்சை வேட்பாளருக்கும் இடையேயான போட்டி சரியான சமமான போட்டியாக இல்லை. இது மக்களாட்சி முறைக்கு நேரெதிரானது.**

தற்பொழுதைய தேர்தல் நடைமுறையில், நீண்ட காலமாக ஒரே சின்னத்தில் தேர்தலைச் சந்திக்கும் கட்சிகளுக்கும், புதிதாகச் சின்னத்தைப் பெற்று தேர்தலில் போட்டியிடும் கட்சி அல்லது கட்சிசாராத் தன்னிச்சை வேட்பாளருக்கும் இடையேயான போட்டி சரியான சமமான போட்டியாக இல்லை. இது மக்களாட்சி முறைக்கு நேரெதிரானது. இந்தச் சமமற்ற தேர்தல் போட்டி முறையை மாற்றியமைக்க ஒவ்வொரு தேர்தலிலும் அனைத்துக் கட்சிகளுக்கும் புதிய சின்னங்களை ஒதுக்கிப் போட்டியிடச் செய்யும் முறையை நாம் தமிழர் கட்சி முன்மொழிகின்றது. இல்லையெனில், அமெரிக்காவைப் போல், அனைத்துக் கட்சிகளுக்கும், வேட்பாளர்களுக்கும் அடையாள எண்களை (Number) மட்டும் ஒதுக்கி சின்னமற்ற முறையில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது.

## வாக்கு இயந்திரத்திற்குத் தடை

தேர்தலில் வாக்குகளைப் பதிவு செய்யப் பயன்படுத்தப்படும் வாக்கு இயந்திரத்தில் முறைகேடு செய்ய வாய்ப்பிருப்பதாலும், அதன் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகி இருப்பதாலும், அது முழுமையாகத் தடைசெய்யப்பட்டு, பழையபடி வாக்குச்சீட்டு முறையையே நடைமுறைப்படுத்த வேண்டும். வாக்கு இயந்திரத்தில் ஊடுருவல் (Hack) செய்து, முறைகேடு செய்வதற்குரிய வாய்ப்புகள் அதிகமிருப்பதாக நாட்டு மக்கள் ஐயம் கொள்ளும் நிலையில், அதனைப் பயன்படுத்தி தேர்தலை நடத்துவதென்பது முறையன்று. தொழில்நுட்பத்தில் வளர்ந்த அமெரிக்கா போன்ற நாடுகளே வாக்குச்சீட்டு முறைக்குத் திரும்பிவிட்ட பிறகு, இந்திய ஒன்றியத் தேர்தல் ஆணையம், வாக்கு இயந்திரத்தையே விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பது ஏற்புடையதன்று. எனவே, மீண்டும் வாக்குச்சீட்டு முறைக்கே இந்திய ஒன்றியம் திரும்புவதற்குரிய தேர்தல் சீர்திருத்தங்களை நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது.





## ஊழல் செய்பவர்களுக்குத் தேர்தலில் தடை

"சில இரொட்டித் துண்டுகளுக்காக மதிப்புமிக்க உரிமையை விற்பது இழிசெயல்"
- புரட்சியாளர் அம்பேத்கர்

"தங்கத்தை யாராவது தவிட்டிற்கு விற்பார்களா?"
- அறிஞர் அண்ணா

"வாக்குக்குப் பணம் கொடுப்பவன் பாவி! பணத்தைப் பெற்றுக்கொண்டு வாக்களிப்பவன் தேசத்துரோகி!"
- பெருந்தமிழர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்

வாக்குக்குப் பணம் கொடுப்பதில்தான் ஊழல், கையூட்டிற்கான விதை ஊன்றப்படுகின்றது. தேர்தல்களில் வாக்குக்குப் பணம் கொடுத்து வெற்றி பெறும் வேட்பாளர், அவ்வெற்றியினால் கிடைக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி பன்மடங்கு மக்களின் வரிப்பணத்தைக் கொள்ளை அடிப்பதோடு மக்களையும் அதற்கு இரையாக்கி, அவ்வூழலில் கூட்டாளியாக்குகின்றார். வாக்கினை விற்கும்போது மக்கள் தங்களது உரிமையையும், ஆட்சியாளர்களைக் கேள்வி கேட்கும் தகுதியையும் இழந்து விடுகின்றார்கள். எனவே, வாக்குக்குப் பணம் கொடுப்பதும், வாங்குவதும் பெரும் குற்றமெனக் கருதப்பட்டு, அதில் ஈடுபடுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படும். அந்த வகையில், ஒரு வேட்பாளர் வாக்குக்குப் பணம் கொடுப்பது உறுதி செய்யப்பட்டால், பத்தாண்டுக்காலம் தேர்தலில் நிற்பதற்குத் தடைவிதிக்கப்பட்டு, வேட்பாளருக்கு ஈராண்டுச் சிறைத் தண்டனையும், வாக்குக்குப் பணம் கொடுப்போருக்கும், பெறுவோருக்கும் ஓராண்டுச் சிறைத் தண்டனையும் விதிக்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

## பரப்புரை முறைமைச் சீர்திருத்தம்

வீடுகளுக்கு நேரிடையாகச் சென்று வாக்கு சேகரிக்கும் முறைமையால் வீட்டில் இருக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கையைக் கண்டறிந்து, பணம் கொடுத்து வாக்கைப் பறிக்கின்ற போக்குத் தொடர்வது கெடுவாய்ப்பானதாகும். பல கோடிகளைத் தேர்தலில் முதலீடு செய்து வாக்குகளைப் பெற்று வெற்றியை ஈட்டுபவர், மக்கள் நலனை முழுவதுமாகப் புறந்தள்ளி, தான் முதலீடு செய்ததைவிடப் பன்மடங்கு முறைகேடாக ஆதாயம் பெறும் நோக்கிலேயே செயல்படுவர். எனவே, தேர்தல் சீர்திருத்தத்தின் செயல்வடிவமாக அமெரிக்கா போன்ற நாடுகளில் இருப்பதைப் போல, தேர்தல் ஆணையமே பரப்புரை நடவடிக்கைகளை ஏற்று நடத்த வழிவகை செய்ய வேண்டும். தொகுதி அளவில் அனைத்து வேட்பாளர்களுக்கும், மாநில அளவில் தலைவர் அல்லது முதல்வர் வேட்பாளருக்கும் ஒரே பொதுமேடையில் பரப்புரை செய்து கருத்தாடலில் ஈடுபட வாய்ப்பளிக்கும் வகையிலான செயல்வடிவங்களைக் கொண்டுவர நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது.

**தொகுதி அளவில் அனைத்து வேட்பாளர்களுக்கும், மாநில அளவில் தலைவர் அல்லது முதல்வர் வேட்பாளருக்கும் ஒரே பொது மேடையில் பரப்புரை செய்து கருத்தாடலில் ஈடுபட வாய்ப்பளிக்கும் வகையிலான செயல்வடிவங்களைக் கொண்டுவர நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது.**

## இரு தொகுதிகளில் போட்டியிடத் தடை

தேர்தலில் ஒரு வேட்பாளர் இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு, இரண்டிலும் வெற்றி பெற்றால், அதில் ஒரு தொகுதியில் பதவி விலக வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. இதுபோல, சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் நாடாளுமன்றத்திற்கோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர் சட்டமன்றத்திற்கோ போட்டியிட்டு வெற்றி பெற்றால், அதில் ஒரு பதவியைத் துறக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. இதனால் அவ்வுறுப்பினர் விலகிய பதவிக்கு மறுதேர்தல் நடத்தவேண்டிய சூழல் ஏற்படுகின்றது. மக்களின் வரிப்பணம் தேவையின்றி வீணாகின்றது. மேலும் மற்ற வேட்பாளர்களும் கட்சிகளும் தேர்தல் பணியில் மீண்டும் ஈடுபட வேண்டிய சூழல் எழுகின்றது. இரண்டு தொகுதிகளில் போட்டியிடும் முறையையும், ஒரு பதவியில் இருக்கும் பொழுது இன்னொரு அவைக்குப் போட்டியிடும் முறையையும் நாம் தமிழர் கட்சி எதிர்க்கின்றது.

மேலும், இதுபோன்ற நிகழ்வுகளால் மறுதேர்தல் நடத்தும் சூழல் எழுந்தால், அத்தேர்தலுக்கான செலவுகளை முழுவதுமாகப் பதவி விலகியவரே ஏற்கும் வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ள நாம் தமிழர் கட்சி நடவடிக்கை எடுக்கும்.



## வாக்களிப்பது மக்களின் கடமை

மக்களாட்சியில் அளிக்கப்படும் ஆகப்பெரும் உரிமையான வாக்களிப்பதென்பது குடிமக்களின் தலையாய கடமையாகும். எனவே, அதனை மக்களின் கட்டாயக் கடமையாக்க நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது.

பொதுவாக, 60-70 விழுக்காட்டு மக்கள்தான் தேர்தல்களில் வாக்களிக்கின்றனர். மூன்றில் ஒரு பங்கு மக்களின் கருத்தே இல்லாமல் ஒன்றிய அளவிலும் மாநிலங்களிலும் ஆட்சிகள் அமைகின்றன. இதனால், ஆட்சி அதிகாரம் தகுதி இல்லாதவர்களிடம் செல்லும் நிலை ஏற்படுகின்றது. போராடிப்பெற்ற வாக்குரிமை எனும் மகத்தான உரிமையின் மதிப்பறியாது, வாக்கு செலுத்தாமல் இருக்கும் போக்கைக் குற்றமென நாம் தமிழர் கட்சி கருதுகின்றது. எனவே, வாக்கு செலுத்துவோரின் எண்ணிக்கையை உயர்த்தி 100 விழுக்காட்டு இலக்கை அடைவதே உண்மையான மக்களாட்சியைப் பேணுவதற்கு வழிவகுக்கும்.

குடிமக்கள் வாக்கு செலுத்தியதை உறுதிசெய்யும் பொருட்டு, வாக்கு செலுத்தியவர்களுக்கு உறுதிச்சீட்டு வழங்கப்படும். இம்முறையில் உறுதிச்சீட்டின் மொத்த எண்ணிக்கையும், வாக்குச்சீட்டின் எண்ணிக்கையும் சரிபார்க்கப்படுவதன் வாயிலாக, வாக்களித்தோரின் எண்ணிக்கையைத் தெரிந்து கொள்வதோடு, போலி வாக்குகள் பதிவாவதைத் தடுக்கவியலும். வாக்காளர் அடையாள அட்டையைவிட வாக்கு செலுத்தியதற்கான உறுதிச்சீட்டே மதிப்புமிக்கதாகக் கருதப்படும். வாக்கு செலுத்தியதற்கான உறுதிச்சீட்டைச் சான்றாகக் கொண்டே குடும்ப அட்டை, மின் இணைப்பு, ஓட்டுநர் உரிமம் போன்றவை கோரப்படும். உரிய சான்றுகளோடு அளிக்கப்படும், தவிர்க்கவே இயலாத, முதன்மையான காரணங்களுக்கே இதிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.





## அயல்நாடு வாழ் இந்தியக் குடிமக்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பு

பணி செய்வதற்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் அயல் நாடுகளில் வாழ்கின்ற அனைத்துத் தேசிய இனங்களைச் சேர்ந்த இந்தியக் குடிமக்களுக்கும் அஞ்சல் வழியிலோ, இணைய வழியிலோ வாக்களிக்கும் வாய்ப்புகளைப் பெற்றுத்தர நாம் தமிழர் கட்சி முயற்சிகளை முன்னெடுக்கும்.

## சிறைக்கைதிகளுக்கு வாக்களிக்கும் வாய்ப்பு

சிறையில் இருக்கக்கூடிய கைதிகள் திருந்துவதற்கான வாய்ப்பாகத் தண்டனையைக் கருதும் நீதித்துறை, அவர்களுக்கான அடிப்படை உரிமைகளை உறுதி செய்ய பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. குறிப்பாகப் போராட்டங்களில் ஈடுபட்டதாலும், மக்கள் சிக்கல்களுக்காகக் குரல் கொடுத்ததாலும் பலர் மீது வழக்குகள் பதியப்படுவது அறிந்ததே. சிறைக்கைதிகளுக்காக மேற்கொள்ளப்படும் மனித உரிமை நடவடிக்கைகளின் நீட்சியாக, சிறைக் கைதிகள் சிறையிலிருந்தபடி வாக்களிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தர நாம் தமிழர் கட்சி முயற்சிகள் மேற்கொள்ளும்.

> **வாக்காளர் அடையாள அட்டையைவிட வாக்கு செலுத்தியதற்கான உறுதிச்சீட்டே மதிப்புமிக்கதாகக் கருதப்படும். வாக்கு செலுத்தியதற்கான உறுதிச்சீட்டையே சான்றாகக் கொண்டே குடும்ப அட்டை, மின் இணைப்பு, ஓட்டுநர் உரிமம் போன்றவை அளிக்கப்படும்.**

# இடைத்தேர்தல் முறையை ஒழிப்போம்




ஒரு சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் கட்சி மாறினால் கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் மூலம் அவரது பதவி பறிக்கப்பட்டு, அவரது தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்தப்படுகின்றது. சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் மரணமடைந்தாலும் அவரது தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்தப்படுகின்றது. அத்தகைய இடைத் தேர்தல்களில் ஆளுங் கட்சியினர் தங்களது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி வெல்வது மக்களாட்சிக் கொள்கைக்கு எதிரானது. இந்த நிலையை மாற்றவும் இடைத்தேர்தல் முறைகேடுகளைத் தவிர்க்கவும் பொதுமக்கள், அரசியல் கட்சிகள், அரசு ஊழியர்கள் மற்றும் தேர்தல் ஆணையத்தின் நேரம் மற்றும் பொருள் இழப்பைத் தவிர்க்கவும் இடைத் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவர நாம் தமிழர் கட்சி முனைகின்றது. ஒலிம்பிக் போன்ற பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர் போதைப்பொருள் பயன்பாடு போன்ற காரணிகளால் தகுதி நீக்கம் செய்யப்பட்டால், அப்போட்டிகளில் இரண்டாம் இடம் பிடித்தவர் வெற்றியாளராக அறிவிக்கப்படுகின்றார். இம்முறையைப் பின்பற்றி, சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் மரணித்தாலோ, பதவியை இழந்தாலோ, தேர்தலில் இரண்டாம் இடம்பெற்ற வேட்பாளர் அப்பதவிக்குத் தகுதி பெறும் நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது.

# மற்ற கட்சிகளின் சின்னத்தில் போட்டியிடத் தடை

ஒரு கட்சியின் தலைவர், பொறுப்பாளர் அல்லது உறுப்பினர் தாங்கள் கூட்டணி வைத்த இன்னொரு கட்சியின் உறுப்பினராகி, அக்கட்சியின் சின்னத்தில் போட்டியிடும் முறையானது இங்கு நடைமுறையில் உள்ளது. நீண்ட காலமாக ஒரே சின்னத்தைக் கொண்டிருக்கும் கட்சியின் சின்னத்தில் போட்டியிடுகிற பொழுது, மக்களால் நன்கு அறியப்பட்ட அச்சின்னம் தேர்தல் வெற்றிக்குரிய ஓர் எளிய வழியாகப் பார்க்கப்படுகிறது. இது மக்களை ஏமாற்றும் முறைகேடாகும். எனவே இம்முறைக்கு முற்றிலும் அனுமதி மறுக்கும் வகையில், தேர்தல் நெறிகள் மாற்றியமைக்கப்படும்.

# தொகுதி மேம்பாட்டு நிதியை வீணடிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியின் வளர்ச்சிக்குச் செலவு செய்ய ஒவ்வொரு நிதி ஆண்டிலும் தொகுதி மேம்பாட்டு நிதி வழங்கப்படுகின்றது. 2022-23ஆம் நிதி ஆண்டில் உருபாய் 3,965 கோடி பணம் இந்திய ஒன்றியம் முழுமைக்கும் தொகுதி மேம்பாட்டு நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட உருபாய் 285 கோடி தொகுதி மேம்பாட்டு நிதியில் உருபாய் 111 கோடி மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. அதாவது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட 61 விழுக்காட்டு நிதியை மக்களுக்காகச் செலவு செய்யாமல் வீணடித்துள்ளனர் தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள். இது ஒவ்வொரு ஆண்டுமே நிகழ்கின்றது.

ஒன்றியத்தில் எந்தக் கட்சியின் ஆட்சி நடைபெற்றாலும் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படுகின்ற தொகுதி மேம்பாட்டு நிதியை மக்களுக்காகச் செலவு செய்ய எந்தச் சிக்கலும் இல்லை, எனினும், அக்கறையின்மையாலும் தொலைநோக்குப் பார்வையில்லாததாலும் மக்களுக்கு வழங்கிய கோடிக்கணக்கான நிதி கிடப்பில் போடப்படுகின்றது. நாம் தமிழர் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களிடம் குறை கேட்டு, அவர்களின் தேவையறிந்து, திட்டங்கள் வகுத்து, தங்களுக்கு வழங்கப்பட்ட தொகுதி மேம்பாட்டு நிதியை முழுமையாக மக்களுக்காகச் செலவு செய்வதோடு, அந்தக் கணக்கையும் வெளிப்படையாக மக்களுக்குத் தெரிவிப்பார்கள் என்கின்ற உறுதியை நாம் தமிழர் கட்சி அளிக்கின்றது.



**தொகுதி மேம்பாட்டு நிதியை மக்களுக்காகச் செலவு செய்ய எந்தச் சிக்கலும் இல்லை, எனினும், அக்கறையின்மையாலும் தொலைநோக்குப் பார்வையில்லாததாலும் மக்களுக்கு வழங்கிய கோடிக்கணக்கான நிதி கிடப்பில் போடப்படுகின்றது.**

# நீதித்துறைச் சீர்திருத்தம்





## உயர்நீதிமன்றங்களும் உச்சநீதிமன்றமும்

தற்பொழுது நடைமுறையிலுள்ள நீதிமன்றச் செயல்பாடுகளில் உச்ச நீதிமன்றத்தின் ஆதிக்கம் அதிகமாக இருக்கின்றது. அரசமைப்புச் சட்டச் சிக்கல்கள் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உரிமை சார்ந்த சிக்கல்கள் போன்ற முதன்மைத்துவம் வாய்ந்த வழக்குகளில் மட்டுமே உச்சநீதிமன்றம் தலையிட வேண்டும். மற்றபடி, அந்தந்த மாநிலங்களுக்குட்பட்ட வழக்குகளைக் கையாள அந்தந்த மாநிலங்களின் தலைமை நீதிமன்றங்களே உச்ச அதிகாரம் பெற்ற நீதிமன்றங்களாகச் செயல்படுவதற்குரிய சட்டத் திருத்தத்தை அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து இந்திய அரசமைப்பில் நாம் தமிழர் கட்சி ஏற்படுத்தும்.

## ஒரே வழக்கிற்கு மாறுபட்ட தீர்ப்புகள்

கீழமை நீதிமன்றங்களில் ஒரு குற்ற வழக்கு ஆராயப்படுகின்றது. அதற்கு தண்டனை வழங்கப்படுகிறது. அங்கிருந்து மேல்முறையீட்டில் உயர் நீதிமன்றதிற்கு வரும்பொழுது, குற்றவாளியாக அறிவிக்கப்பட்டவர் விடுதலை பெறுகிறார். மீண்டும் மேல்முறையீட்டிற்கு உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லும் பொழுது, சில நேரங்களில் மீண்டும் தண்டித்துத் தீர்ப்பளிக்கப்படுகின்றது. இப்படி ஒரு குற்ற வழக்கில் மூன்று தீர்ப்புகள் வருகின்றன. அப்படியானால் தவறான தீர்ப்பளித்த நீதிபதிக்கு என்ன தண்டனை? உச்சநீதிமன்றம் சொல்வதுதான் இறுதித் தீர்ப்பு என்றால் நாடெங்கிலும் உச்சநீதிமன்றத்தின் கிளைகளைத் திறந்துவிட வேண்டியது தானே? என்ற கேள்வி எழுகின்றது.

**நீதிபதிகளாக இருந்து ஓய்வு பெறுபவர்கள் ஒன்றிய அரசின் பதவிகளிலும், ஆளுநராகவும் பணியமர்த்தப்படும் தற்பொழுதைய அரசியல் சூழல், இந்திய ஒன்றியத்தின் நீதிமன்ற அமைப்பு மீதே மக்கள் மனதில் பெரும் நம்பிக்கையின்மையை ஏற்படுத்துகின்றது.**

## மண்ணின் மைந்தர்களே நீதியரசர்கள்

மாநில உயர்நீதிமன்றங்களில் நீதியரசர்களாக வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் பணியமர்த்தப்படுவதை நாம் தமிழர் கட்சி வன்மையாக எதிர்க்கின்றது. மாநிலங்களில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து முடிவெடுக்க, பிற மாநிலங்களில் இருந்து வருகின்ற தலைமை நீதியரசர்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்புக் குறைவு. அம்மாநிலத்தின் மொழி, பண்பாடு, வரலாறு, வாழ்வியல் உள்ளிட்டவை குறித்த போதிய



பட்டறிவு அந்நீதியரசர்களுக்கு இருப்பது கடினம். எனவே, அந்தந்த மாநில அரசின் தலைமை நீதியரசர்களாக அந்தந்த மண்ணின் மைந்தர்களைப் பணியமர்த்தும் வகையிலான சட்டத் திருத்தத்தை ஏற்படுத்த நாம் தமிழர் கட்சி பாடுபடும்.

## தமிழே தமிழ்நாட்டின் வழக்காடு மொழி


நீதிமன்றத்தின் செயல்பாடுகள் எளிய மக்கள் அணுகும் வகையிலும் புரிந்துகொள்ளும் வகையிலும் இருக்க வேண்டும். அனைத்து நாடுகளிலும் நீதிமன்றங்கள் அவரவர் தாய்மொழியில்தான் செயல்படுகின்றன. எனவே, தமிழ்நாட்டு உயர்நீதிமன்றத்தில், மாநிலத்தின் தாய்மொழியான தமிழை வழக்காடு மொழியாகவும், அலுவல் மொழியாகவும் நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மொழிவழித் தேசிய இனங்களின் தாயகமான மாநிலங்களின் வரிப்பணம் வேண்டும், மொழி வேண்டாமா என்கின்ற கேள்வி மக்கள் மனத்தில் பன்னெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. இந்திய ஒன்றியத்தின் அரசமைப்புப் பட்டியல் மொழிகள் அனைத்தும் உச்சநீதிமன்றத்தின் வழக்காடு மொழியாகவும், அலுவல் மொழியாகவும் உடனடியாக ஆக்கப்பட வேண்டுமென்று நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது.

**இந்திய ஒன்றியத்தின் அரசமைப்புப் பட்டியல் மொழிகள் அனைத்தும் உச்சநீதிமன்றத்தின் வழக்காடு மொழியாகவும், அலுவல் மொழியாகவும் உடனடியாக ஆக்கப்பட வேண்டுமென்று நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது.**

## அரசுப் பதவிகளில் ஓய்வுபெற்ற நீதியரசர்கள்

நீதிபதிகளாக இருந்து ஓய்வுபெறுபவர்கள் ஒன்றிய அரசின் பதவிகளிலும் ஆளுநராகவும் பணியமர்த்தப்படும் தற்பொழுதைய அரசியல் சூழல், இந்திய ஒன்றியத்தின் நீதிமன்ற அமைப்பு மீதே மக்கள் மனதில் பெரும் நம்பிக்கையின்மையை ஏற்படுத்துகின்றது. எனவே, நீதிபதிகளாக இருந்து ஓய்வுபெறுபவர்கள் அரசுப் பதவிகளிலோ, ஆளுநராகவோ, அரசியல் கட்சியிலோ செயல்படுபவதை அனுமதிக்காத வகையில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது.

## இந்தியத் தண்டனைச் சட்டப் பெயர்மாற்றம்




இதுவரை நடைமுறையில் இருந்த குற்றவியல் சட்டங்களுக்கு மாற்றாகப் புதிய மூன்று சட்டங்கள் ஒன்றிய அரசால் இரு அவைகளிலும் இயற்றப்பட்டுள்ளன. அவை 2024ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் நடைமுறைக்கு வரவிருப்பது பல்வேறு குழப்பங்களையும் தேவையற்ற குளறுபடிகளையும் ஏற்படுத்தும். குறிப்பாக இந்தியத் தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்தியச் சான்றுச் சட்டம் ஆகிய மூன்று சட்டங்களுக்கும் பாரதிய நியாய சம்கித்தா, பாரதிய நாகரிக் சுரக்ச சம்கித்தா, பாரதிய சாக்சிய அதினியம் (Indian Penal Code - Bhartiya Nyaya Sanhita, Criminal Procedure Code - Bhartiya Nagarik Suraksha Sanhita, Indian Evidence Act - Bhartiya Sakshya Adhiniyam) என்று இந்தியில் பெயர் சூட்டப்பட்டுள்ளது ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பு முயற்சியின் நீட்சியாகவே வெளிப்படுகிறது. இந்திய அமைப்பு முறையின் அனைத்துத் தளங்களையும் இந்தி மயமாக்குவது, இந்தி பேசாத பிற தேசிய இனங்களை வஞ்சிப்பதாகும்.

**இந்திய அமைப்பு முறையின் அனைத்துத் தளங்களிலும் இந்தி மயமாக்குவது, இந்தி பேசாத பிற தேசிய இனங்களை வஞ்சிப்பதாகும்.**

மேலும் இச்சட்டங்கள் நடைமுறைக்கு வரும் நிலையில் இதுவரை கொடுக்கப்பட்ட தீர்ப்புகளின் பயன்பாடு கேள்விக்குள்ளாகும். நடப்பில் இருக்கக்கூடிய வழக்குகளின் போக்கும் தடைபடும். குற்றவியல் வழக்குகள் பல ஆண்டுகள் நடைபெறும் சூழலில், ஏற்கெனவே இருக்கும் வழக்குகளும், புதிதாக வரக்கூடிய வழக்குகளும் இரு வேறு சட்டங்களைப் பின்பற்றி நடப்பதென்பது நீதித்துறையில் பெரும் சிக்கல்களுக்கு வழிவகுக்கும். எனவே, இந்தச் சட்டங்களை உடனடியாகத் திரும்பப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும்.

# பொறுப்புடைமை உரிமை

## (Right to Accountability)




நாட்டின் குடிமக்கள் அரசின் திட்டங்களையும், துறைசார் சேவைகளையும் உரிய நேரத்தில் பெற்றுப் பயனடையும் வகையில், அதனைக் கையாளும் அரசு அதிகாரிகள் மக்களிடத்தில் நேரடியாகப் பொறுப்புடைமை கொண்டிருக்க வேண்டியதைக் கடமையாக மாற்றிட வேண்டும். பொதுமக்கள் அரசிடத்தில் விண்ணப்பிக்கும் சேவைகளுக்குக் குறித்த காலத்திற்குள் தீர்வு எட்டுகின்ற முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வழியே பொதுத் தகவல் அதிகாரியிடம் தகவல்களைக் கேட்டுப் பெறுவதுப் போல, ஒரு சேவையின் நிலையையும் அதற்குக் குறித்த காலத்திற்குள் தீர்வு காண அதிகாரிகளே பொறுப்புரிமை கொண்டிருக்கும் வகையில், உரிய காலத்திற்குள் தீர்வு காணும் உறுதியை விண்ணப்பித்த மக்களே பெற வழிவகை செய்ய முடியும்.

அவ்வாறு குறித்த காலத்திற்குள் சேவையினை அரசு அதிகாரிகள் வழங்காத நிலையில், அவர்கள் நேரடியாகக் குறிப்பிட்டவருக்குப் பொறுப்பாகும் முறை இதன்மூலம் நடைமுறைப்படுத்தப்படும். இந்தப் பொறுப்புரிமை கடமையை அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பாக இணைப்பதற்கான முயற்சிகளை நாம் தமிழர் கட்சி முன்னெடுக்கும்

**ஒரு சேவையின் நிலையை அதற்குக் குறித்த காலத்திற்குள் தீர்வு காண அதிகாரிகளே பொறுப்புக்கூறும் வகையில், உரிய காலத்திற்குள் தீர்வு காணும் உறுதியை விண்ணப்பித்த மக்களே பெற வழிவகை செய்ய முடியும்.**

# பெண்ணும் ஆணும் சமம்

ஆணுக்குப் பெண் சமம் அல்ல; பெண்ணும் ஆணும் சமம்.
– செந்தமிழன் சீமான்

உயர்கல்வி, அரசு மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்பு, ஆட்சி அதிகாரம் உள்ளிட்ட அனைத்துத் தளங்களிலும், பெண்களுக்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு. அளிக்கப்படுவதோடு, திருநங்கையர்க்கும் திருநம்பியர்க்குமுரிய உள் இடஒதுக்கீடு.

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**
**அறிவி லோங்கி, இவ் வையம் தழைக்குமாம்"** என்றார் பாரதி.


இந்திய ஒன்றிய மக்களாட்சிக் கட்டமைப்பின் சட்ட திட்டங்கள், வளர்ச்சிக் கொள்கைகள் பெண்களின் முன்னேற்றத்திற்கான கூறுகளைக் கொண்டிருந்தாலும், இன்றளவும் இலக்கை அடையவில்லை. உயர்கல்வி, அரசு மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்பு, ஆட்சி அதிகாரம் உள்ளிட்ட அனைத்துத் தளங்களிலும், பெண்களுக்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப்படுவதோடு, திருநங்கையர்க்கும் திருநம்பியர்க்கும் உரிய உள் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பது நாம் தமிழர் கட்சியின் கொள்கை.

2019 நாடாளுமன்றத் தேர்தலிலும், 2021 சட்டமன்றத் தேர்தலிலும், தற்போது 2024 நாடாளுமன்றத் தேர்தலிலும் நாம் தமிழர் கட்சி சரிபாதி இடங்களில் பெண் வேட்பாளர்களுக்கு வாய்ப்பளிக்கின்றது. இந்திய அளவில் வேறு எந்த அரசியல் கட்சியும் இதுவரை செய்யத் துணியாத பாலினச் சமத்துவப் புரட்சியை நாம் தமிழர் கட்சி தொடர்ச்சியாகச் செய்து வருகின்றது.

## பாலியல் குற்றங்களுக்கு மரண தண்டனை

எந்தக் குற்றத்திற்கும் மரண தண்டனை கூடாது; ஆனால், பாலியல் குற்றங்களுக்கு மட்டும் மரண தண்டனையைத் தவிர வேறு தீர்வில்லை என்பது நாம் தமிழர் கட்சியின் கொள்கை. கடந்த 10 ஆண்டுகளில் தில்லியில் நிர்பயா, காசுமீரில் ஆசிபா, தற்பொழுது புதுச்சேரியில் ஆர்த்தி என்று பிஞ்சுகள் முதல் மூதாட்டிகள் வரை பாலியல் வன்புணர்வு என்பது தொடர்கதையாகி வருகின்றது. இத்தகைய பாலியல் குற்றங்களைத் தடுக்க ஒரே வழி, பெண்களைப் பாலியல் வன்புணர்வு செய்தால் உயிர் பறிக்கப்படும் என்பதுதான். எனவே, பாலியல் குற்றங்களுக்கு மரண தண்டனை எனும் தனிச்சட்டத்தை இயற்றி, பாலியல் வழக்குகளைக் கையாள தனிச் சிறப்பு நீதிமன்றம் அமைக்க சட்டத்திருத்தம் செய்ய அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

# மகளிர் இட ஒதுக்கீடு திருத்தச் சட்டம் 2023





**மகளிருக்கான அரசியல் அதிகாரப் பகிர்வு எனும் திட்டத்தைத் தமிழர்கள் உள்ளிட்ட தேசிய இனங்களின் உரிமையை அடியோடு மறுக்கின்ற, தொகுதி மறுசீரமைப்புடன் இணைப்பது அப்பட்டமான ஏமாற்று முன்னெடுப்பாகும்.**

1996ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்ட மகளிர் இடஒதுக்கீடு சட்ட முன்வரைவு, மக்களவையில் பலமுறை தோல்வியடைந்து, 2023ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டம் வரவேற்கப்பட வேண்டியது என்றாலும், அதை நடைமுறைப்படுத்தும் முறையில் பல்வேறு குழப்பங்கள் நிலவுகின்றன. 2026ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டு, 2029ஆம் ஆண்டில்தான் மகளிர் இடஒதுக்கீடு வழங்கப்படும் என்பது பெருத்த ஏமாற்றாகும்.

மகளிருக்கான அரசியல் அதிகாரப் பகிர்வு எனும் திட்டத்தைத் தமிழர்கள் உள்ளிட்ட தேசிய இனங்களின், குறிப்பாகத் தென்னிந்தியத் தேசிய இனங்களின் உரிமையை அடியோடு மறுக்கின்ற, தொகுதி மறுசீரமைப்புடன் இணைப்பது அப்பட்டமான ஏமாற்று முன்னெடுப்பாகும். இருக்கின்ற தொகுதி எண்ணிக்கையின் அடிப்படையிலேயே மகளிருக்குச் சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் இடஒதுக்கீடு






**மகளிருக்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு தருவதற்கு இந்திய ஒன்றிய அரசிற்கு எவ்விதத் தடையும் இல்லை. அதனைச் செய்யாமல் காலம் தாழ்த்துவது இந்திய ஒன்றியத்தின் மக்கள்தொகையில் சரிபாதியான பெண்களுக்கு இழைக்கப்படும் அறத்திற்குப் புறம்பான கொடுஞ்செயலாகும்.**

கொடுப்பதற்கும், மக்கள்தொகையில் சரிபாதியாக இருக்கும் மகளிருக்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு தருவதற்கும் இந்திய ஒன்றிய அரசிற்கு எவ்விதத் தடையும் இல்லை. அதனைச் செய்யாமல் காலம் தாழ்த்துவது இந்திய ஒன்றியத்தின் மக்கள்தொகையில் சரிபாதியான பெண்களுக்கு இழைக்கப்படும் அறத்திற்குப் புறம்பான கொடுஞ்செயலாகும்.

பட்டியலினப் பிரிவினருக்கு ஒதுக்கப்படும் தொகுதிகளிலும் மகளிர் இடஒதுக்கீடு செயல்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருந்தாலும் இன்ன பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களின் இடஒதுக்கீட்டின் நிலை என்ன என்பது குறித்துத் தெளிவான விளக்கங்கள் இல்லாதது, ஏனைய தொகுதிகளில் வழங்கப்படும் மகளிர் இடஒதுக்கீட்டில் ஒரு சில வகுப்பினர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படும் கெடுவாய்ப்பை ஏற்படுத்துகின்றது. இசுலாம், கிறித்தவம் என்று மத அடிப்படையிலான உரிய இடஒதுக்கீடு குறித்தும் தெளிவாக வரையறைகள் குறிப்பிடப்படவில்லை. தற்பொழுது நிலவும் இடஒதுக்கீட்டு முறையிலேயே அனைத்து நிலையிலும் 50 விழுக்காடு நிகராளுமை பெண்களுக்கு வழங்கும்படி இச்சட்டத்தின் வரையறைகளை மாற்றி அமைத்து உடனடியாக நடைமுறைப்படுத்த அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

# மணிப்பூர் வன்முறை



மணிப்பூரில் மெய்தி இன மக்கள் பழங்குடிகளாக அறிவிக்கப்பட்டதால் தங்கள் வாழ்விடங்களில் அவர்கள் குடியேறும் அச்சம் குக்கி இன மக்களுக்கு ஏற்பட்டது. இதில் தலையிட்டு இரு இன மக்களிடமும் அமைதியை நிலைநாட்டவேண்டிய அரசு, அமைதி காத்து மக்களிடையே வன்முறை மூள வழிவகுத்தது.

மணிப்பூர் மாநிலத்தின் சமூக நல்லிணக்கத்தைச் சீரழித்து, குக்கி - மெய்தி மக்களிடையே ஏற்பட்ட பகைச்சூழலைக் கண்டும்காணாத இந்திய ஒன்றிய மற்றும் மணிப்பூர் மாநில பாஜக அரசுகள் இக்கோரச் செயலுக்கான பொறுப்பேற்றுப் பொது மன்னிப்புக் கேட்க வேண்டும்.

குறிப்பாக இரண்டு குக்கி பழங்குடி இனப் பெண்கள் நிர்வாணமாக்கி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டது உலகளவில் அதிர்வுகளை ஏற்படுத்தியது. இம்மோதலுக்குப் பிறகு நாட்டின் முதன்மை அமைச்சர் மோடி மணிப்பூருக்குச் சென்று மக்களைச் சந்திக்காதது, பாஜக மனித குலத்திற்கே எதிரி எனும் கூற்றை மேலுமொருமுறை உறுதிப்படுத்துகின்றது.

வன்முறையில் ஈடுபட்டு, குக்கி இனப் பெண்களைப் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கிய கயவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். குக்கி - மெய்தி இன மக்களிடையேயான சிக்கலுக்கு இரு இன மக்களின் மண்ணுரிமையும் பாதிக்காத வகையில் தீர்வு எட்டப்பட அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி நடவடிக்கை மேற்கொள்ளும்.

# தேசிய இனங்களுக்கு எதிரானவை

> பல மொழிகள் என்றால் இந்தியா ஒரே நாடாக இருக்கும், ஒரே மொழி என்றால் இங்கு பல நாடுகள் பிறக்கும்.
>
> – செந்தமிழன் சீமான்



**இந்தியாவின் தேசிய மொழி போல இந்தியை முன்னிறுத்துவதும், சமற்கிருதத்தைத் தூக்கிப் பிடிப்பதுமான போக்குகள் ஏற்புடையதல்ல.**

'ஒரே நாடு! ஒரே மொழி! ஒரே மதம்' எனும் ஆளும் அரசின் ஒற்றைமயப் போக்கினால் இந்திய ஒன்றியம் தனக்கென உருவாக்கிக் கொண்ட இறையாண்மையும் நாட்டு மக்களால் ஏற்படுத்தப்பட்ட ஒருமைப்பாடும் கேள்விக்குறியாகின்றது. இந்தியாவின் தேசிய மொழி போல இந்தியை முன்னிறுத்துவதும், சமற்கிருதத்தைத் தூக்கிப் பிடிப்பதுமான போக்குகள் ஏற்புடையதல்ல. எனவே, இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையிலுள்ள 22 மொழிகளுக்கும் சரிசமமான முதன்மைத்துவமும், நிதிப்பங்கீடும் தருவதற்குரிய ஏற்பாடுகளை நாம் தமிழர் கட்சி முன்னெடுக்கும்.

இந்தித் திணிப்பிற்கு வழிவகை செய்யக்கூடிய அரசமைப்பின் சட்டப்பிரிவு 351ஐயும், அதிகாரக் கூறுகளையும் நாம் தமிழர் கட்சி முழுமையாகத் திருத்தியமைக்க வேண்டுமென்று வலியுறுத்துக்கின்றது. இம்மாற்றங்களை மேற்கொள்ள அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சிகளை முன்னெடுக்கும்.

# காசுமீர் - பிரிவு 370 நீக்கம்




காசுமீர் மாநிலத்திற்குச் சிறப்பு அதிகாரத்தை வழங்கிய இந்திய அரசமைப்புச் சட்டப்பிரிவு 370, ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசால் நீக்கப்பட்டதை நாம் தமிழர் கட்சி கடுமையாக எதிர்க்கின்றது. காசுமீரில் இருந்தவர்களைப் பிரிவினையாளர்களாகச் சித்தரித்துவிட்டு, அம்மாநிலத்தின் சிறப்பு அதிகாரத்தைப் பறித்து, அம்மாநிலத்தை இரண்டு ஒன்றியப் பகுதிகளாகத் துண்டாடியிருப்பது பெரும் நகைமுரணாகும்.


அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 370ஐ நீக்கியதோடு குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறையில் இருந்த காலத்தில், காசுமீரை இரண்டு ஒன்றிய பகுதிகளாகப் பிரித்ததை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில், பிரிவு 370ஐ நீக்கியது சரிதான் என்று உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் காரணிகளுடன் நாம் தமிழர் கட்சி உடன்படவில்லை. பிரிவு 370ஐ 'தற்காலிக ஏற்பாடு' என்ற நீதிமன்றத்தின் கருத்து ஏற்புடையதல்ல. காசுமீர மக்களின் கருத்து கேட்கப்படாமலேயே அவர்களுக்கான உரிமையின் தன்மை இதுதான் என்று முடிவெடுப்பது முறையல்ல. மேலும், மாநிலத்தின் சட்டமன்றம் இருந்திருந்தால் ஒப்புதல் அளிக்காமல் மறுத்திருக்கக்கூடிய ஒரு நடவடிக்கையை, நெருக்கடி நிலையைக் காரணம் காட்டி குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவந்து அவரின் ஒப்புதல் வழியே நடைமுறைப்படுத்துவது அரசமைப்பு விதிகளைத் தன்னிச்சைப் போக்குடன் பயன்படுத்தும் செயல்பாடாகும். இதனைக் கருத்தில் கொள்ளாமல் உச்சநீதிமன்றம் அளித்தது தீர்ப்பே தவிர, நீதியல்ல.

> **“இந்தியாவை ஒன்றாக்குவோம் என்றவர்கள் காசுமீரைத் துண்டாக்கினார்கள்"**
>
> **– செந்தமிழன் சீமான்**

காசுமீர் மாநிலத்திற்குப் பிரிவு 370ஐ மீண்டும் வழங்குவதோடு, தேசிய இனங்கள் அனைத்திற்கும் அவற்றின் மாநில உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, கூட்டாட்சிக்கொள்கை நிலைநிறுத்தப்படும் வகையில் சிறப்பு நிலைகள் வழங்கப்படுவதே சரியான தீர்வாக அமையும். சிறப்பு நிலை என்பது மாநிலங்களின் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டுவதாகும். பொதுப்பட்டியலிலும், மாநிலப்பட்டியலிலும் ஒன்றிய அரசின் அதிகாரத்தலையீடும், அத்துமீறலும் இல்லாதிருக்க, பிரிவு 370 போன்ற சிறப்பு நிலை இன்றியமையாததாகும். அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சிறப்பு நிலை வழங்கும்படி இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தியமைக்கப்பட நாம் தமிழர் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

# கச்சத்தீவு

**இந்திய ஒன்றிய அரசினால் தமிழர்களின் ஒப்புதலின்றி இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட தமிழரின் நிலம்தான் கச்சத்தீவு.**




ஒரு ஒரு மாநிலத்தின் எல்லைகளை, நிலப்பரப்பை நினைத்த நேரத்தில் மாற்றியமைக்கவும், பிற நாடுகளுக்கு விட்டுக்கொடுக்கவும், மாநிலத்தின் பெயரை மாற்றவுமென வரம்பற்ற அதிகாரத்தை இந்திய ஒன்றிய அரசு பெற்றுள்ளது கூட்டாட்சிக் கோட்பாட்டிற்கு எதிரானதாகும். இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்திய ஒன்றிய அரசினால் தமிழர்களின் ஒப்புதலின்றி இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட தமிழரின் நிலம்தான் கச்சத்தீவு. தாரைவார்க்கும் பொழுது தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த திமுக அரசு அதனைக் கடுமையாக எதிர்த்துப் போராடவில்லை. 18 ஆண்டுகள் இந்திய ஒன்றிய ஆட்சியில் பங்கெடுத்த பொழுதிலும் கச்சத்தீவை மீட்க திமுக எந்த முன்னெடுப்புகளையும் செய்யவில்லை. ஆனால், இன்றுவரை, கச்சத்தீவைத் தாரை வார்த்த காங்கிரசு கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டு, கச்சத்தீவை மீட்போம் என்று தேர்தல் வாக்குறுதியும் கொடுத்துத் தமிழர்களை ஏமாற்றி வருகின்றது திமுக கட்சி.

இந்நிலையை மாற்றி, கச்சத்தீவு ஒப்பந்தத்தை நீக்கம் செய்து, தமிழ்நாட்டின் நிலவுரிமையையும், மீனவர்களின் மீன்பிடி உரிமையையும் நிலைநாட்ட அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

மாநிலத்தின் நிலப்பரப்பு மீது இந்திய ஒன்றிய அரசிற்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை முற்றிலும் நீக்கும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவர அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

# வடமாநிலத்தவர் குடியேற்றம்

இந்தி பேசும் மாநிலங்களில் நிலவும் மிகுதியான வேலை வாய்ப்பின்மையால், வேலை தேடி ஆயிரக்கணக்கான வடமாநிலத்தவர்கள் நாள்தோறும் தமிழ்நாட்டுக்குப் படையெடுத்த வண்ணம் உள்ளனர். 2022ஆம் ஆண்டில் அரசு வெளியிட்ட தரவுகளின்படி 34.87 இலட்சம் வடஇந்தியத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் பணிபுரிவதாகத் தெரிய வருகிறது. ஆனால், இந்த எண்ணிக்கை உண்மையில் இன்னும் மிகக் கூடுதலாக இருக்குமென அஞ்சப்படுகின்றது. இவ்வாறு மிதமிஞ்சிய அளவில் நடைபெறும் வடமாநிலத்தவர்களின் அதிகப்படியான வருகையால் தமிழ்நாடு கலப்பினத் தாயகமாக மாறும் பெருங்கேடு இருக்கின்றது. எனவே, தமிழர் தாயகத்தைத் தற்காக்கும் பொருட்டு, அருணாச்சலபிரதேசம், நாகாலாந்து, மிசோரம் மற்றும் மணிப்பூர் ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் இருப்பது போல, உள்நுழைவு அனுமதிச்சீட்டு முறையை நடைமுறைப்படுத்த நாம் தமிழர் கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதன்மூலம், வடமாநிலத்தவர் ஒருவர் தமிழ்நாட்டிற்குள் நுழையும்பொழுது அவரின் பெயர், அடையாளம், கல்வித்தகுதி, பணி, அவரின் தங்கும் இடம், பணிக்காலம், அவருக்கான முகவரி என அனைத்து அடிப்படைத் தரவுகளும் சேகரிக்கப்பட்டு, அரசிடம் ஆவணமாகப் பாதுகாக்கப்படும். இத்தரவுகளின் அடிப்படையில் அவருடைய செயல்பாடுகள் முறைப்படுத்தப்படுவதோடு, கண்காணிக்கப்பட்டு, பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும்.

> **இந்தியைத் திணித்தார்கள் எதிர்த்தோம். இப்பொழுது இந்திக்காரர்களையே திணிக்கிறார்கள்.**
>
> **- செந்தமிழன் சீமான்**

வட மாநிலத்தவர்கள் அடிப்படை வாழ்வாதாரத்திற்காக இங்கு வேலை செய்வதை நாம் தமிழர் கட்சி எதிர்க்கவில்லை. ஆனால், வடமாநிலத்தவர்கள் அளவுக்கதிகமாக வருகைபுரிந்து தமிழர்களின் பொருளியல் வாய்ப்புகளைத் தட்டிப் பறிப்பதையும் இம்மண்ணின் அரசியலைத் தீர்மானிக்கும் அதிகாரமான வாக்குரிமையைத் தமிழ் நாட்டிற்குள் பெறுவதையும் நாம் தமிழர் கட்சி எதிர்க்கின்றது.





# சாதி, மதவெறியைத் தூண்டும் வெறுப்பரசியல்

சாதி, மத உணர்வுகள் என்பது மனிதர்களுக்கு மட்டுமானது. ஆனால் அரசியல் என்பது அனைத்து உயிர்களுக்குமானது. அனைத்து உயிர்களுக்குமான தேவையும் அதை நிறைவேற்றுகின்ற சேவையும்தான் அரசியல். பறவைகளும் விலங்குகளும் அழிந்து போனால் நாமும் அழிந்து போவோம். "தேனீக்கள் அழிந்தால் அடுத்த நான்கு ஆண்டுகளில் மனித இனமே அழியும்" என்கிறார் அறிவியலாளர் ஐன்சுடீன். அவ்வகையில் அரசியல் என்பது அனைத்து உயிர்களுக்குமானதாக இருக்க வேண்டும்.

> **இங்கே மக்கள் வணங்க கோடிக்கணக்கான சாமிகள் இருக்கின்றது; ஆனால் வாழ்வதற்கு ஒரே ஒரு பூமிதான் இருக்கின்றது.**
> **– செந்தமிழன் சீமான்**

> **வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்.**
> **-வள்ளலார்**

தமிழர்கள் மானுடநேயர்கள் மட்டும் அல்லர்; உயிர்மநேயர்கள் என்பதனையே மேற்காணும் கூற்றுகளின் மூலம் அறிந்து கொள்ளலாம். தமிழர்கள் சாதி, மதங்களைப் பார்க்காமல் அதைக் கடந்து, உயர்ந்த மானுடத்தைப் பேணுபவர்கள். காரணம் தமிழர்கள் உயிர்மநேயர்கள். இந்து மதத்திலுள்ள சாதியக்கொடுமைகள் தாளாது அல்லது விருப்பம் கொண்டு இசுலாம், கிறித்துவம் ஆகிய மதங்களைத் தழுவிக்கொள்வது என்பது அவரவர் தனிப்பட்ட உரிமையாகும். அவ்வாறு மதத்தைத்



> **காக்கைக் குருவி எங்கள் சாதி – நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்.**
> **– பெரும்பாவலர் பாரதி**



“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்” – தமிழ்மறை 972
“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை” – தமிழ்மறை 322

– தமிழ் மறையோன்
வள்ளுவப்பெருமகனார்



**“நாங்கள் சாதி பார்ப்பவர்கள் அல்ல; எதையாவது சாதிக்கப் பார்ப்பவர்கள். மதத்தைப் பார்க்காமல் அதைக் கடந்து உயர்ந்த மானுடத்தைப் பேணுபவர்கள்.”**

**– செந்தமிழன் சீமான்**

தழுவி நிற்பவர்களை, ‘சிறுபான்மையினர்’ என்று அடையாளப்படுத்துவது உள்நோக்கம் கொண்டதாகும். பெரும்பான்மைத் தேசிய இனத்தின் மக்களாய் விளங்குபவர்களை ஒரு மதத்தினைக் கொண்டு, ‘சிறுபான்மையினர்’ என அளவிடுவதும், அவர்களைப் பாதுகாப்பின்மை உணர்வுக்குள்ளும் அச்சுறுத்தலுக்குள்ளும் தள்ளுவதும் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டியவையாகும்.

பத்தாண்டுக் காலத்தில் நாட்டை ஆண்ட பாஜக தலைமையிலான ஆட்சியில், நாட்டு மக்களிடம் வெறுப்பரசியலையும், மத வெறியையும் தூண்டி, சாதி, மத மோதல்களை உருவாக்கியுள்ளனர். தேசிய இனங்களை ஒடுக்குவது ஒருபுறமென்றால், மதத்தால் நாட்டு மக்களைத் துண்டாடுவது மறுபுறமெனக் கொடுங்கோன்மையை முழுவதுமாகக் கட்டவிழ்த்துவிட்டு, தனது பிரித்தாளும் சூழ்ச்சி அரசியலை செய்து வருகின்றனர். குறிப்பாக, குடியுரிமைத் திருத்தச் சட்டம் (CAA), தேசியப் புலனாய்வு முகமை (NIA) சட்டத் திருத்தம், இராமர் கோயில் திறப்பு, முக்காட்டுடை (Hijab) தடை, பசுவதை எனும் பெயரில் நடத்தப்படும் படுகொலைகள் என்று தொடர்ச்சியாக மத வெறியைத் தூண்டும் வகையிலான ஆட்சியை ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசு நடத்தி வருகின்றது. வருகின்ற தேர்தலில் மதவெறுப்பரசியலை முறியடிப்பதன் வழியே, தமிழரின் அடிப்படை மாண்பான அனைத்து உயிர்களுக்கான அரசியல் முன்னெடுக்கப்படும். சாதி, மதத்தின் அடிப்படையிலான குற்றங்களைத் தடுக்கும் வகையில் சிறப்புச் சட்டம் இயற்றப்பட்டுக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.




# நாம் தமிழர் கட்சி எதிர்க்கும் சட்டங்கள்

## குடியுரிமைத் திருத்தச் சட்டம் (CAA), தேசிய மக்கள் தொகைப் பதிவேடு (NPR), தேசியக் குடியுரிமைப் பதிவேடு (NRC)

குடியுரிமை எனும் குடிமக்களின் அடிப்படை உரிமையை வழங்குவதற்கு மதத்தை அளவீடாகக் கொள்ளும் இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசின் செயல்பாடு அரசமைப்புச் சட்டத்திற்கே எதிரானதாகும். பாகிசுதான், வங்கதேசம், ஆப்கானிசுதான் ஆகிய நாடுகளிலிருந்து வந்த இசுலாமியர் அல்லாதவர்களுக்கு மட்டும் குடியுரிமை வழங்கப்படும் வகையில் மேற்கொள்ளப்பட்ட குடியுரிமைத் திருத்தச் சட்டத்தினை நாம் தமிழர் கட்சி மிகக் கடுமையாக எதிர்க்கின்றது. இதனுடன் தேசிய மக்கள்தொகைப் பதிவேட்டையும் (NPR), தேசியக் குடியுரிமைப் பதிவேட்டையும் (NRC) கொண்டு வந்திருப்பது இசுலாமிய மக்களை நாடற்ற ஏதிலிகளாக மாற்றும் நோக்கோடே! ஜெர்மன் நாட்டில் இட்லர் யூதர்களை இனஒதுக்கல் செய்து அழித்தொழிக்க மேற்கொண்ட அதே வழிமுறையைத்தான் இந்திய ஒன்றியத்தை ஆளும் நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசும் மேற்கொண்டிருக்கின்றது.

> **எதைக் கொண்டு வந்தாலும் எதிர்ப்பதாக கூறுகிறார்கள். நாங்கள் எதிர்ப்பது போலவே அனைத்தையும் நீங்கள் கொண்டுவந்தால் நாங்கள் என்ன செய்வது?**
>
> **- செந்தமிழன் சீமான்**

> **பசுமாடு, பாகிசுதான் பக்கத்து நாடு, ஜெய் ஸ்ரீராம் முழக்கம். இதைவிட்டால் பாஜகவிற்கு வேறு அரசியல் இல்லை.**
>
> **- செந்தமிழன் சீமான்**

முதலில், குடும்ப அட்டை கொடுக்கப்பட்டது, பிறகு, வாக்காளர் அடையாள அட்டை கொடுக்கப்பட்டது. அதுவே அடையாளம் என்றார்கள். பிறகு, ஆதார் கொண்டு வரப்பட்டது. ஆதார்தான் அனைத்தும் என்றார்கள். தற்போது, குடியுரிமைக்குச் சான்று கேட்கிறார்கள். பாகிசுதான், வங்கதேசம், ஆப்கானிசுதான் போன்ற நாடுகளில் இருந்து வந்த பௌத்தர்கள், இந்துக்கள், சீக்கியர்கள் போன்றவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும்

என்றால், இலங்கையில் இருந்து வந்த தமிழர்களுக்கு ஏன் குடியுரிமை கிடையாது? அப்படி என்றால் தமிழர்கள் இந்துக்கள் இல்லை என்கிறார்களா?

1969ஆம் ஆண்டில் தான் பிறப்பு இறப்பு பதிவு செய்யும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. எனவே, அதற்கு முந்தைய காலகட்டத்தில் பிறந்தவர்களுக்குப் பிறப்புச் சான்றிதழ் கிடையாது. அப்படிப் பிறப்புச் சான்றிதழ் காண்பிக்க முடியவில்லை எனும் நிலையில் குடியுரிமைச் சான்றிதழ் செல்லாமல் போகும் நிலை ஏற்பட்டால் மக்கள் நாடற்றவர்களாக ஆகிவிடுவார்களா?

விடுதலை பெற்று 75 ஆண்டுகள் ஆன பின்பும், யார் இந்திய ஒன்றியத்தின் குடிமக்களென ஆட்சியாளர்களுக்கு இன்னும் தெரியவில்லையென்பதும், அதனை உறுதிசெய்ய குடிமக்களுக்கு நெருக்கடி கொடுக்க முயல்வதுமான போக்கு கடந்து செல்ல முடியாத பேரவலமாகும். இக்குடியுரிமைச் சட்டத் திருத்தமும், தேசிய மக்கள்தொகைப் பதிவேடும், தேசியக் குடிமக்கள் பதிவேடும் ஒன்றாகக் கொண்டுவரப்படுவது நாட்டை மதத்தால் பிளந்து, இசுலாமியர்களின் குடியுரிமையைப் பறிக்கும் சூழ்ச்சியே என்பதால், இதனை நாம் தமிழர் கட்சி வன்மையாக எதிர்க்கின்றது. இச்சட்டத்திருத்தங்களைத் திரும்பப் பெற நாம் தமிழர் கட்சி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.




## தேசியப் புலனாய்வு முகமைத் (NIA) திருத்தச் சட்டம்

இயற்கை நீதிக் கோட்பாட்டினைப் பின்பற்றாமல், 'தேசப் பாதுகாப்பு' எனும் பெயரில் ஆய்வு, தடுப்புக் காவல் மற்றும் தளைப்படுத்தும் (கைது) நடவடிக்கைகள் என அனைத்து வகையிலும் வரம்பற்ற அதிகாரங்களைக் கொண்டிருக்கும் தேசியப் புலனாய்வு முகமைத் (NIA) திருத்தச் சட்டம் அடிப்படை மனித உரிமைகளுக்கே எதிரானது. தேசியப் புலனாய்வு முகமைதான் (NIA) சிறப்பாக விசாரணை நடத்தும் என்றால் நடுவண் புலனாய்வுச் செயலகம் (CBI) எதற்கு? அதைக் கலைத்துவிட வேண்டியதுதானே? அதுபோல, அமலாக்கத்துறைதான் சிறப்பாக சோதனை மற்றும் விசாரணை மேற்கொள்ளும் என்றால், வருமான வரித்துறை எதற்கு? ஒரு மாநில அரசின் ஒப்புதலோ, முன் அனுமதியோ இல்லாமல் அம்மாநிலத்திற்குள் புகுந்து எவரையும் கைது செய்யலாம் எனும் மாநிலத்தின் தன்னாட்சி உரிமைக்கெதிரான அதிகாரங்களைக்

**'தேசப் பாதுகாப்பு' எனும் பெயரில் ஆய்வு, தடுப்புக்காவல் மற்றும் தளைப்படுத்தும் (கைது) நடவடிக்கைகள் என அனைத்து வகையிலும் வரம்பற்ற அதிகாரங்களைக் கொண்டிருக்கும் தேசியப் புலனாய்வு முகமைத் (NIA) திருத்தச் சட்டம் அடிப்படை மனித உரிமைகளுக்கே எதிரானது.**

**இந்திய நாட்டின் குடிமக்கள் யாவருக்கும் குற்றவியல் சட்டமென்பது ஒரே மாதிரியாக இருந்தாலும், உரிமையியல் சட்டமென்பது சார்ந்திருக்கிற மதத்தினைப் பொறுத்து மாறுபடுகின்றது.**

கொண்டிருக்கும் தேசியப் புலனாய்வு முகமையை எதிர்ப்பதோடு, அதனைக் கலைக்கவும் நாம் தமிழர் கட்சி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## முத்தலாக் தடைச் சட்டம்

இசுலாமிய ஆண்கள் பெண்களை மணமுறிவு செய்யக் கூறப்படும் ‘தலாக்’ முறையில் தலையிடும் வகையில், மதவாத நோக்கத்தோடு இச்சட்டத்தைக் கொண்டு வந்தது ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசு. வெவ்வேறு கால இடைவெளிகளிலும், பேச்சுவார்த்தைகளுக்கு நடுவேயும் கூறப்படும், ‘தலாக்’ என்பதனை ஒரே முறையில் மூன்று தடவை கூறப்படுவதே ‘முத்தலாக்’ எனப்படுகின்றது. அந்த முத்தலாக் முறை சரீஅத் சட்டங்களில் இல்லை; அதனை இசுலாம் ஏற்கவே இல்லையெனும் பொழுதும், முத்தலாக் கூறுவதைக் குற்றமென அறிவித்து, சட்டம் கொண்டு வந்திருக்கின்றது பாஜக அரசு. இது இசுலாமியர்களின் மத நடவடிக்கைகளில் தலையிடும் வண்ணம், உள்நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டதாகும். இதனை நாம் தமிழர் கட்சி வன்மையாக எதிர்ப்பதோடு, திரும்பப்பெறுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.



# பொது உரிமையியல் சட்டம் (Uniform Civil Code)




இந்திய நாட்டின் குடிமக்கள் யாவருக்கும் குற்றவியல் சட்டமென்பது ஒரே மாதிரியாக இருந்தாலும், உரிமையியல் சட்டமென்பது சார்ந்திருக்கிற மதத்தினைப் பொறுத்து மாறுபடுகின்றது. இதன் அடிப்படையில், திருமணம், மணமுறிவு, தத்து எடுத்தல், வாரிசுரிமை, பிரிமனைப்படி (ஜீவனாம்சம்) உள்ளிட்டவை ஒருவர் சார்ந்திருக்கும் மதத்தைப் பொறுத்து மாறுபடுகின்றன. இதனைக் குலைக்கவும், இசுலாமியர்களின் சமய நம்பிக்கைகளில் தலையீடு செய்யவுமாக ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசு கொண்டுவர முனையும் பொது உரிமையியல் சட்டத்தை நாம் தமிழர் கட்சி வன்மையாக எதிர்க்கின்றது.

# பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான இடஒதுக்கீடு (EWS)

நகர்ப்புறப் பகுதிகளில் ஒரு மாதத்திற்கு உருபாய் 1286க்கு மேலும், ஊரகப் பகுதிகளில் உருபாய் 1059க்கு மேலும் சம்பாதிக்கும் இந்திய ஒன்றியக் குடிமக்களை வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ளவர்களாகக் குறிப்பிடுகின்றது நிதி ஆயோக் (NITI Aayog). ஆனால், சமூக நிலையில் முன்னேறிய வகுப்பினர் என்று வகைப்படுத்தப்பட்டுள்ள சாதியினருக்கு மட்டும் ஆண்டுக்கு 8 இலட்சம் உருபாய் வரை வருவாய் ஈட்டுபவர்களைப் ‘பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்’ என்று அறிவித்து, அவர்களுக்குத் தனியே 10 விழுக்காடு இடஒதுக்கீட்டை வழங்குவது முறையான சமூகநீதிக் கோட்பாடாகாது.

பிறப்பின் வழியே உயர்வு தாழ்வைக் கற்பிக்கும் சாதியின் அடிப்படையில் பன்னெடுங்காலமாக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை மீட்பு முயற்சியாகத் தோன்றியதே சமூகநீதி அடிப்படையிலான இடஒதுக்கீடு. எதன் அடிப்படையில் ஒடுக்கப்படுகிறார்களோ, அதன் அடிப்படையில் அவர்களை மீட்பதே சரியான சமூகநீதியாகும். பொருளாதார நிலை மாறிக் கொள்ளக் கூடியது. பிறப்பின் வழி தோன்றும் சாதி, மாறிக் கொள்ள முடியாத இழிநிலையாகத் தொடர்கின்றது.

**பிறப்பின் வழியே உயர்வு தாழ்வைக் கற்பிக்கும் சாதியின் அடிப்படையில் பன்னெடுங்காலமாக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை மீட்பு முயற்சியாகத் தோன்றியதே சமூகநீதி அடிப்படையிலான இடஒதுக்கீடு.**







சமூக நிலையில் முன்னேறிய வகுப்பினர் என்று வகைப்படுத்தப்பட்டுள்ள சாதியினருக்குப் பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்றால், அவர்களைப் பிற்படுத்தப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பில் இணைத்து இடஒதுக்கீடு வழங்காதது ஏன்?

எனவே, இடஒதுக்கீடு சாதியின் அடிப்படையில் தான் இருக்க வேண்டுமே தவிர, பொருளாதார நிலையின் அடிப்படையில் இருத்தல் கூடாது என்பது நாம் தமிழர் கட்சியின் கொள்கை நிலைப்பாடு.

## வேளாண் சட்டங்கள்

வேளாண்மையை முழுதாகத் தனிப்பெரு முதலாளிகளின் வசமாக்கி, தரகு முதலாளிகள் ஆதாயமீட்டும் வகையில் 2020ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மூன்று வேளாண் சட்டங்களும், நாடு தழுவிய வேளாண் பெருங்குடி மக்களின் பெரும் போராட்டத்திற்குப் பிறகு, 2021ஆம் ஆண்டு திரும்பப்பெறப்பட்டுவிட்டாலும், வேளாண் பெருங்குடி மக்கள் இன்றளவும் இழிநிலையிலேயே இருக்கின்றார்கள். அந்நிலையை மாற்றி அவர்களது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தவும், அவர்களது குறைந்தளவு ஆதார விலை உள்ளிட்ட பலதரப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றவும் செயலாற்றுவதோடு, அவர்களுக்கு ஆதரவாகக் கொள்கை முடிவுகளை மாற்ற நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

## கடலோர ஒழுங்குமுறை மண்டல (CRZ) விதிமுறை

கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிமுறையில் தொடர்ந்து ஏற்படுத்திய திருத்தங்கள் வழியே, சூழலியல் முதன்மைத்துவம் வாய்ந்த கடற்கரைப் பகுதியான கடலோர ஒழுங்குமுறை மண்டலம் CRZ-I வகைப்பாட்டுப் பகுதியில் மீன்பிடிசாராத் தொழில்களுக்கு ஒன்றிய அரசு இசைவளிக்கின்றது. தேசியப் பாதுகாப்பு, இயற்கைச் சுற்றுலா மேம்பாடு, கட்டுமானங்களுக்கான ஒப்புதல் போன்ற காரணங்களைக் கொண்டு கடற்சூழலியலைச் சீரழிக்கும் வகையிலும் மீனவர்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்தும் வகையில் ஒன்றிய அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தங்களை நாம் தமிழர் கட்சி வன்மையாக எதிர்க்கின்றது. அவற்றைத் திரும்பப் பெற நாம் தமிழர் கட்சி தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

# நாம் தமிழர் கட்சி எதிர்க்கும் திட்டங்கள்


## தேர்தல் நன்கொடைத் தளை (Electoral Bonds)




பெருநிறுவனங்களிடம் இருந்து பெருந்தொகையைப் பெற வழிவகை செய்ய, 2017ஆம் ஆண்டு ஆளும் பாஜக அரசால் கொண்டுவரப்பட்ட திட்டம்தான் தேர்தல் நன்கொடைத் தளை. இந்த முறைமை, அரசியல் கட்சிகள் பெருநிறுவனங்களிடம் வரம்பற்ற தொகையைப் பெற்றிடவும், தேர்தல் நன்கொடைத் தளை மூலம் அளிக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட தொகை குறித்த தகவல்கள் பொதுவெளியில் வெளியிடாமல் இருப்பதற்கும் வழிவகை செய்தது. இது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக்கே எதிரானது என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினை நாம் தமிழர் கட்சி வரவேற்கின்றது.

வரம்பற்ற நிதிப் பங்களிப்பை அரசியல் கட்சிகளுக்கு நிறுவனங்கள் வழங்குவதன் மூலம், ஆட்சி நடவடிக்கைகளில் பெரு முதலாளிகளின் தலையீடு இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றது. ஆட்சி அதிகாரத்தின் வழி மக்கள் நலன் முன்னிறுத்தப்படாமல், நிறுவனங்களின் நலன் முன்னிறுத்தப்படுவதற்கான வழிவகையை இது உருவாக்குகின்றது. இதன் வழியே மறைமுகமாகப் பல்லாயிரக்கணக்கான கோடிகள் பெருநிறுவனங்களால் வழங்கப்பட்டதும், அரசியல் கட்சிகளால் பெறப்பட்டதும் தற்போது வெளிவந்துள்ளது.

ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி, வருமானவரித்துறை மற்றும் அமலாக்கத்துறையின் மூலம் சோதனை மேற்கொண்டு, அந்நிறுவனங்களை மிரட்டி, பெருந்தொகையை ஆளும் கட்சிகள் பெற்றுள்ளதாகக் கேள்விகள் எழுந்துள்ளன. வெளிவந்துள்ள செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, உச்சநீதிமன்றமே ஒரு குழு அமைத்து முழுமையாக ஆராய்ந்து, நடைபெற்றிருக்கும் முறைகேடுகளை முழுமையாக வெளிக்கொணர வேண்டும். இந்த முறைகேட்டில் ஈடுபட்ட நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த முறைகேட்டில் ஈடுபட்ட அரசியல் கட்சிகள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுத்து, அந்தக்கட்சிகளைத் தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது.




# முதன்மை அமைச்சர் பேரிடர்க்கால நிதி (PM CARES Fund)

கொரோனா பேரிடர்க் காலத்தின் பொழுது, இந்திய ஒன்றிய முதன்மை அமைச்சர் மோடி அவர்களால் அறிவிக்கப்பட்ட நிதி கோரல் திட்டம்தான் முதன்மை அமைச்சர் பேரிடர்க்கால நிதி (PM CARES Fund). அவர் படம் பொருந்திய விளம்பரங்கள் செய்யப்பட்டு, அரசின் அதிகார நிலை இணையப் பின்னொற்றான gov.inஐக் கொண்டு, முதன்மை அமைச்சர் மோடியின் பெயர், படம் பொறித்த வலைத்தளம் மூலம் பெறப்பட்ட நிதிதான் முதன்மை அமைச்சர் பேரிடர்க்கால நிதி (PM CARES Fund). பின்னர், இந்த நிதி பற்றிய கேள்விகள் எழுப்பப்பட்ட பொழுது, இது அரசு நிறுவனம் இல்லையென்றும், தனியார் தொண்டு நிறுவனம் என்றும், நிதிநிலை அறிக்கையின் வழியே கொண்டுவரப்படவில்லை என்றும் அறிவித்தது இந்திய ஒன்றிய அரசு. எனவே, இதன் கணக்குகளுக்குத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் (CAG) ஆய்விலிருந்தும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் இருந்தும் விலக்கு கோரியது. முதன்மை அமைச்சரின் பெயரையும், படத்தையும் பயன்படுத்தி அரசின் வலைத்தளம் போலத் தொடங்கிப் பெறப்பட்ட நிதியின் மீதான இந்திய ஒன்றிய அரசின் இந்நிலைப்பாடு பெரும் ஏமாற்றாகும்.

முதன்மை அமைச்சர் பேரிடர்க்கால நிதியில் (PM CARES Fund) *2019-20*ஆம் நிதியாண்டில் உருபாய் *3,076.6* கோடியும், *2020-21*ஆம் நிதியாண்டில் உருபாய் *10,990.2* கோடியும், *2021-22*ஆம் நிதியாண்டில் உருபாய் *9,131.9* கோடியும் பெறப்பட்டுள்ளது. ஆனால் முதன்மை அமைச்சர் பேரிடர்க்கால நிதியிலிருந்து (PM CARES Fund) *2019-20*ல் உருபாய் *2,049* கோடி மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. இது *2020-21*ஆம் நிதியாண்டில் உருபாய் *3,976.2* கோடியாகவும், *2021-22*ஆம் நிதியாண்டில் உருபாய் *3,716.3* கோடியாகவும் உள்ளது. சட்டத்தின்படி இந்தச் செலவுகள் குறித்தக் கணக்குகளை வெளியிட வேண்டிய தேவையில்லை என்று உச்சநீதிமன்றம் சொல்லியிருந்தாலும், முதன்மை அமைச்சரின் பெயரால் பெறப்பட்ட இந்நிதியைப் பற்றிய செய்தியில் வெளிப்படைத்தன்மையுடன் நடந்து கொள்வது இந்திய ஒன்றிய அரசின் கடமையாகும். அதனை விடுத்துப் பல்லாயிரக்கணக்கான கோடிகள் குறித்தான செய்தியில் வெளிப்படைத்தன்மையின்றி இருப்பதை நாம் தமிழர் கட்சி கடுமையாக எதிர்க்கின்றது.

**இந்திய நாட்டின் குடிமக்கள் யாவருக்கும் குற்றவியல் சட்டமென்பது ஒரே மாதிரியாக இருந்தாலும், உரிமையியல் சட்டமென்பது சார்ந்திருக்கிற மதத்தினைப் பொறுத்து மாறுபடுகின்றது.**

இந்தச் செலவுகள் குறித்த தகவல்களைப் பொதுவெளியில் வெளிக்கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை நாம் தமிழர் கட்சி முன்னெடுக்கும். மேலும் பொது மக்களின் இப்பணம் தவறான வழியில் கையாளப்பட்டிருப்பது தெரியவரும் நிலையில், அதில் தொடர்புடைய அனைவர் மீதும் நாம் தமிழர் கட்சி உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## அக்னிபாத் (Agnipath)

இராணுவ வீரர்கள் தேர்வில் பழைய முறையை முற்றிலும் மாற்றும் புதிய அக்னிபாத் திட்டத்தினை நாம் தமிழர் கட்சி கடுமையாக எதிர்க்கின்றது. இத்திட்டத்தின்கீழ், ஒருவர் 4 ஆண்டுகளுக்கு மட்டுமே பணியமர்த்தப்படுகிறார். புதிதாகப் பணியமர்த்தப்பட்டவர்கள் அனைவரும் 4 ஆண்டுகள் செயல்திறன் மதிப்பீட்டில் இருப்பார்கள் என்பதே இதன் பொருள்.

இந்தத் திட்டம் வீரர்களுக்குப் பணிக்கொடை மற்றும் ஓய்வூதியப் பலன்களையும் வழங்காது, மேலும், உருபாய் 48 லட்சம் ஆயுள் காப்பீடு எனப்படுவதும் சேவையின் பொழுது மட்டுமே கிடைக்கப்பெறும். இதுபோன்ற கூறுகள் ஒன்றிய அரசு அவ்வீரர்களுக்கு எவ்வகைப் பொறுப்பேற்கவும் அணியமாக இல்லை என்பதையே காட்டுகின்றது.


வேலையில்லாத் திண்டாட்டம் பரவலாக நிலவும் நிலையில், இந்திய ஒன்றிய அரசு வேலைகள் மீது, குறிப்பாக ஆயுதப்படைகள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை முற்றுமாக இழக்கச் செய்யும் இத்திட்டத்தை உடனடியாகத் தடை செய்ய அனைத்துத் தேசிய இனக்கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

**வேலையில்லாத் திண்டாட்டம் பரவலாக நிலவும் நிலையில், இந்திய ஒன்றிய அரசு வேலைகள் மீது, குறிப்பாக ஆய்தப்படைகள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை முற்றுமாக இழக்கச் செய்யும் இத்திட்டத்தை உடனடியாகத் தடை செய்ய அனைத்துத் தேசிய இனக்கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.**





# பணமதிப்பு நீக்கம் என்ற மோசடி




*2016ஆம் ஆண்டு இந்திய ஒன்றியத்தை ஆண்ட பாஜக அரசால் 500, 1000 உருபாய்த் தாள்களை மதிப்பிழக்கச் செய்யும் பணமதிப்பு நீக்க நடவடிக்கை முன்னறிவிப்பின்றி நடைமுறைப்படுத்தப்பட்டது. இது நாட்டு மக்கள் மீது தொடுக்கப்பட்ட பொருளியல் போர் என்றே கருதப்படுகின்றது. கருப்புப்பண ஒழிப்பு, கள்ளப்பண ஒழிப்பு, தீவிரவாத ஒழிப்பு, இணையவழி பணப்பரிமாற்றமெனப் பல்வேறு காரணங்கள் கற்பிக்கப்பட்ட இத்திட்டம், எதுவொன்றையும் சாதிக்காது மிகப்பெரும் தோல்வியை அடைந்தது. இந்நாட்டின் ஒட்டுமொத்தக் குடிமக்களும் நேரடியாகப் பாதிப்படைந்து, தெருக்களில் வரிசையில் நிறுத்தப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்ட உயிர்கள் போயின. பல்லாயிரக்கணக்கான திருமணங்கள் நின்றுபோயின. கோடிக்கணக்கானோரின் மருத்துவம் பாதிக்கப்பட்டது. சிறு, குறு தொழில்கள் முடங்கின. வேலைவாய்ப்பின்மை பெருகியது. இந்த நடவடிக்கையின் விளைவாக இந்தியாவின் பொருளாதாரம் பெருமளவு சரிந்தது.*

**தனியார்மய, தாராளமய, உலகமயப் பொருளாதாரக் கொள்கையினைக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில் வெறும் பணமதிப்பு நீக்கத்தினால் மட்டுமே தனி முதலாளிகளிடம் கருப்புப் பணம் குவிவதை எப்படித் தடுப்பீர்கள்?**

**– செந்தமிழன் சீமான்**

*இவ்வளவு பெரிய பொருளாதாரப் பேரழிவை ஏற்படுத்திய இத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய பொழுது “50 நாள்கள் வலியைப் பொறுத்துக் கொள்ளுங்கள், பிறகு இது பிழையென்று உணர்ந்தால் என்னைத் தண்டியுங்கள்” என்றார் முதன்மை அமைச்சர் மோடி. ஆனால், 2500 நாள்கள் கடந்தும் இன்றுவரை சிறுவருத்தம்கூட தெரிவிக்கவில்லை.*

*இத்திட்டம் மோசடித்தனமெனக் கூறி, தொடக்கம் முதலே எதிர்த்தது நாம் தமிழர் கட்சி. எனவே, பணமதிப்பு நீக்கத்தை இனியொரு முறை கொண்டு வர வேண்டுமென்றால், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஒப்புதலைப் பெற வேண்டுமெனச் சட்டத்திருத்தத்தை நாம் தமிழர் கட்சி வலியுறுத்திக்கின்றது.*

# சரக்கு மற்றும் சேவை வரி

**வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு** – தமிழ்மறை 552

மாநிலத்தின் இயற்கை மற்றும் மனித வளங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தும் உற்பத்தியில் துளியும் பங்கெடுக்காத ஒன்றிய அரசானது, அந்த உற்பத்தியிலிருந்து கிடைக்கும் வரியில் சரிபாதியைப் பறித்துக் கொள்வது ஏற்புடையதல்ல. பேரிடர்க் காலங்களில் கூட ஒன்றிய அரசிடம் நிதிக்காகக் கையேந்தி நிற்கும் நிலையே மாநில அரசுகளுக்கு உள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரியாகப் பெறப்படும் 1 உருபாய்க்கு, தமிழ்நாட்டிற்கு 0.26 உருபாயும், கர்நாடகாவிற்கு 0.16 உருபாயும், தெலுங்கானாவிற்கு 0.40 உருபாயும், ஆந்திராவிற்கு 0.50 உருபாயும், கேரளாவிற்கு 0.60 உருபாயும் திருப்பிக் கொடுக்கின்றது ஒன்றிய அரசு. அதே நேரம் உத்திர பிரதேசத்திற்கு 2.2 உருபாயும், பீகாருக்கு 7.06 உருபாயும், மத்திய பிரதேசத்திற்கு 1.70 உருபாயும், இராச்சசுத்தானிற்கு 1.14 உருபாயும் கொடுக்கின்றது. இந்தச் சமமற்ற வரிப்பங்கீட்டு முறை இந்தி பேசாத பிற தேசிய இனங்களுக்குக் குறிப்பாகத் தென்னிந்திய மாநிலங்களுக்கு முற்றிலும் எதிராக அமைந்துள்ளது.

ஒன்றிய அரசு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு வரி வருமானத்தைப் பங்கிடுவது முறையற்றதாகும். மாநிலத்தின் வரி உற்பத்திக்கேற்ப பங்கீடு செய்ய நாம் தமிழர் கட்சி பிற தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து முயற்சிகள் மேற்கொள்வதோடு, சரக்கு மற்றும் சேவை வரியினைத் திரும்பப் பெற்று, மாற்று வரிக்கொள்கையை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபடும்.

**சரக்கு மற்றும் சேவை வரி வருவதற்கு முன்னர் கடைகளில் பொருள்கள் விற்பனைக்கு இருந்தன, இந்த வரி வந்த பிறகு கடையே விற்பனைக்கு வந்துவிட்டது.**

**- செந்தமிழன் சீமான்**



# தனியார்மயம் தாராளமயம் உலகமயம்

"அரசினால் செய்ய முடியாததைத் தனியாரால் சிறப்பாகச் செய்ய முடியும் என்று அரசே சொல்வது மாபெரும் அவலம்"
- செந்தமிழன் சீமான்

வானூர்தி, தொலைத்தொடர்பு, உட்கட்டமைப்பு, எரியாற்றல் (Oil & Gas), கல்வி, மருத்துவம், உணவு உற்பத்தி போன்ற அடிப்படைத் துறைகளில் அரசின் முதலீட்டை விலக்குதல் மற்றும் பங்கு விற்பனையின் மூலம் தனியார் மயமாக்கலை இந்திய ஒன்றிய அரசு முதன்மை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

பொது - தனியார் கூட்டுடைமை (PPPs) போன்ற பல்வேறு மாதிரிகள் ஊக்குவிக்கப்பட்டு, அரசின் அடிப்படைப் பணிகள் தனியாரிடம் ஒப்படைக்கப்படுகின்றன. மக்களுக்குச் சென்றடைய வேண்டிய அரசின் வருவாய் தனியாருக்கு மடைமாற்றப்படுகின்றது. இதனால் அரசியல் அதிகாரத்தில் தனியார் நிறுவனங்களின் தலையீடு அதிகரித்துள்ளது. நாட்டின் நாடி நரம்பு போலுள்ள துறைகளில், முதன்மையான அரசு நிறுவனங்கள் பெரும்பாலானவை தனியாரிடம் ஒப்படைக்கப்படுவது அரசின் அதிகாரத்தையே கேள்விக்கு உள்ளாக்குகின்றது. அனைத்தையும் தனியார்மயமாக்கி, வரிகளை மட்டுமே குடிமக்களிடம் பெறுவது எதற்கு என்கின்ற கேள்வி எழுகின்றது. அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் பொது நிறுவனங்கள் மக்களின் நலனையும் தொழிலாளர் நலனையும் அடிப்படையாகக் கொண்டு இயங்கும். மாறாகத் தனியார் நிறுவனங்கள் ஆதாயத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு இயங்கும்.

அரசின் சேவைகள் பொதுமக்கள் அனைவருக்கும் சமமாகக் கிடைக்கப்பெற வேண்டும் என்பதே நாம் தமிழர் கட்சியின் கொள்கை. பன்னாட்டு நிறுவனங்களின் ஆதாய வேட்டைக்காகப் பொதுச் சேவைகள் தனியார் மயமாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி, அரசே முற்றிலுமாக எடுத்து நடத்தும் நிலையை உருவாக்க நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும். அதன் வாயிலாகத் தனியார்மயப் பொருளாதாரக் கொள்கையினைக் கைவிட்டு, தற்சார்புப் பொருளாதாரக் கொள்கையை ஏற்று மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் திட்டங்களை மாற்றியமைக்க அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

அனைத்துமே தனியார் என்றால் அரசின் வேலை என்ன?
- செந்தமிழன் சீமான்

# பாதுகாப்புத்துறையில் தனியார் மற்றும் அயலக முதலீடு




நாட்டின் உச்சநிலைக் கமுக்கமாக (ரகசியமாக), கவனத்தோடு கையாளப்பட வேண்டிய பாதுகாப்புத் துறையில் தனியார் மற்றும் அயலக நிறுவனங்களின் முதலீட்டினை அனுமதிப்பது நாட்டின் பாதுகாப்பிற்கே ஊறு விளைவிக்கும் செயலாகும்.

பொருளீட்டும் முனைப்புடன் இருக்கும் தனியார் மற்றும் அயலக நிறுவனங்களுக்கு இராணுவக் கமுக்கங்கள் தெரியவந்தால் அந்நிறுவனம் தகவல்களைத் தவறாகப் பயன்படுத்தக்கூடும். சிறிய வகைத் துமுக்கி (துப்பாக்கி) தொடங்கி, வான்படை ஊர்திகள் வரையில் தனியார் அல்லது அயலக நிறுவனங்கள் தலையிடுவது அரசின் இருப்பினையே கேள்விக்குள்ளாக்குகின்றது. வரக்கூடிய ஆண்டுகளில் இராணுவக் கருவிகள் உருவாக்கத்தில் தனியாரின் பங்கு 22 விழுக்காடு அளவிலிருக்கும் எனும் நிலை இந்திய ஆட்சி அமைப்பின் தோல்வியாகும்.

பாதுகாப்புத் துறையில் தனியாரின் முதலீடுகளை முழுவதுமாக விடுவித்து, அரசின் கட்டுப்பாட்டிலேயே கொண்டுவர வேண்டும். அயல்நாட்டுத் தொழில்நுட்பப் பயன்பாடுகளைக் குறைத்து, இயன்றவரை பாதுகாப்புத் துறையில் உள்நாட்டுத் தொழில்நுட்பங்களையே பயன்படுத்த வேண்டும் என்பது நாம் தமிழர் கட்சியின் கொள்கை. வெளியுறவுக் கொள்கையினைச் சீர்செய்வதன் மூலம் இராணுவச் செலவீடுகளைக் குறைக்க அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

# தற்சார்புப் பசுமைத் தாய்மைப் பொருளாதாரம்

**வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை**
**ஆராய்வான் செய்க வினை** – தமிழ்மறை 512














நாட்டின் பெரும்பாலான மக்கள் வாழக்கூடிய கிராமங்களை மேம்படுத்தாமல் அந்நாட்டின் பொருளாதாரத்தைச் சீராக வளர்த்தெடுக்க முடியாது. ஊரகப் பகுதிகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொள்ளாமல், நகரங்களை நோக்கி மக்களை நகர்த்தும் திட்டங்களைத்தான் தொடர்ச்சியாக இந்திய ஒன்றிய அரசுகளும், மாநில அரசுகளும் செயற்படுத்தி வருகின்றன. இந்தப் போக்கினை நாம் தமிழர் கட்சி ஏற்கவில்லை. சிற்றூர்களின் பொருளாதார வளர்ச்சியையும் நகர்ப்புறப் பொருளாதார வளர்ச்சியையும் சம அளவில் வளர்த்தெடுக்கும் திட்டங்களை முன்னெடுக்க நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது.

காந்தியப் பொருளாதார மேதை சோ.செ.குமரப்பா முன்வைத்த தற்சார்புப் பசுமைத் தாய்மைப் பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது. மக்களின் வாழ்விடங்களில் இருக்கின்ற வளங்களைக் கொண்டு வேலைவாய்ப்பைப் பெருக்கி சிற்றூர்களின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில் கவனம் செலுத்தும் வகையில் நாட்டின் பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைக்க அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி செயல்படும்.

## பொருளாதாரக் குற்றங்கள்

2023ஆம் ஆண்டு நிலைப்படி இந்திய ஒன்றிய அரசின் கடன் நிலுவை 155.6 இலட்சம் கோடியாக உள்ளது. கடந்த 75 ஆண்டுக்கால ஆட்சிகளில் நடந்தேறிய நிருவாகச் சீர்கேடுகளாலும், ஊழல்களாலும் இந்தப் பேரவலமான கடன் நிலை ஏற்பட்டுள்ளது. கடன் நிலையை எதிர்கொள்ள

முடியாத அரசு, பொது மக்களுக்கான நிதியில் தொடங்கி அரசு ஊழியர்களின் வருங்கால வைப்புத் தொகை வரை முறைகேடு செய்கின்றது. சிறு கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த முடியாத எளிய மக்கள் மீது நடவடிக்கையெடுக்கும் அரசு, 5000 கோடி, 17000 கோடி என்று கடன் வாங்கும் பெருமுதலாளிகளின் கடன்களைத் தள்ளுபடி செய்வதும், கடனைத் திருப்பிச் செலுத்தாத பொருளாதாரக் குற்றவாளிகளைத் தப்பிக்க விடுவதும் திறனற்ற ஆட்சிமுறையாகும். இது அரசின் மீதான நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகின்றது.

பொருளாதாரக் குற்றங்கள் குறித்த உறுதியான வகைப்படுத்துதல் சட்டத்தில் இல்லை. பொருளாதாரக் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், தனிச் சிறப்பு நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாயங்களை நிறுவி, சிறப்புச் சட்டங்களை இயற்றுவதன் மூலம், ஏற்கெனவே நீதிமன்றங்களில் குவிந்து கிடக்கும் வழக்குகளில் தீர்வினையெட்ட அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முன்னெடுப்புகளை மேற்கொள்ளும்.

**பெருமுதலாளிகளின் கடன்களைத் தள்ளுபடி செய்வதும், கடனைத் திருப்பிச் செலுத்தாத பொருளாதாரக் குற்றவாளிகளைத் தப்பிக்க விடுவதும் திறனற்ற ஆட்சிமுறையாகும். இது அரசின் மீதான நம்பகத்தன்மையைக் கேள்விக்கு உள்ளாக்குகின்றது.**

## பொருளாதாரக் குற்றங்களுக்கான தீர்வுகள்:

- பொருளாதாரக் குற்றங்களைத் தடுக்கும் பொருட்டும் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தும் பொருட்டும் விரைந்து நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆய்வுக்குழு அமைக்கப்பட வேண்டும்.
- ஆய்வுக்குழுவில் காவல்துறை அதிகாரிகள் மட்டுமல்லாது பொருளாதாரப் புலனாய்வு வல்லுநர்களும் வழக்குரைஞர்களும் அமர்த்தப்பட வேண்டும்.
- இக்குழு ஆய்வை 6 மாத காலத்தில் முடிப்பதுடன் முழு அறிக்கையை ஒப்படைக்க வேண்டும்.
- பொருளாதாரக் குற்றங்கள் குறித்த அனைத்து வழக்குகளும் குறைந்தளவு 2 ஆண்டுகளுக்குள் முடித்து வைக்கப்பட்டு, அரசின் பணம் மீட்கப்பட வேண்டும்.
- குற்றச்செயலில் ஈடுபடுபவர்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கப்பட வேண்டும்.

இதற்கான முறைமையை ஏற்படுத்த அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.





# நீர்வளப் பெருக்கம்

பெய்யும் மழைநீரைச் சேமித்து வைக்காமல் கடலில் கலக்க விட்டுவிட்டு கடல்நீரைச் சுத்திகரிக்கப் பல்லாயிரக்கணக்கான கோடிகள் செலவழிப்பது முட்டாள்தனம்.
– செந்தமிழன் சீமான்




ஆற்றுநீர் வழித்தடங்களை முழுமையாகக் கண்டறிந்து, அவை கடலில் கலக்கும் கழிமுகப் பகுதிகள் உட்பட அனைத்தையும் சீரமைக்க வேண்டும். அதன் கரைகள் வலுப்படுத்தப்பட்டு சீரான முறையில் நீர் சேமிக்கப்படும்.

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும் வான்இன்று அமையாது ஒழுக்கு" – தமிழ்மறை 20

ஆண்டுக்கு 96 சென்டிமீட்டர் மழைபொழியும் தமிழ்நாட்டில் நீர்ப் பற்றாக்குறை நிலவுவதற்கு முதன்மைக் காரணம் முறையான நீர்ச்சேமிப்பின்மையாகும். நீரைச் சரியாகச் சேமித்து வைக்க தவறுவதால் அண்டை மாநிலங்களிடம் நீர்த் தேவைக்காகக் கையேந்தும் நிலை ஏற்படுகின்றது. அண்டை மாநிலங்களிடம் கேட்பது நமது மரபுரிமைதான் என்றாலும், அளப்பெரும் மழைப்பொழிவு இருந்தும் நீர்த் தேவையில் நாம் தன்னிறைவை அடையத் தவறுகின்றோம்.

ஆற்றுநீர் வழித்தடங்களை முழுமையாகக் கண்டறிந்து, அவை கடலில் கலக்கும் கழிமுகப் பகுதிகள் உட்பட அனைத்தையும் சீரமைக்க வேண்டும். நீராதாரங்கள் வலுப்படுத்தப்பட்டு சீரான முறையில் நீர் சேமிக்கப்பட வேண்டும். குளம், குட்டை, கண்மாய், ஏரி என்று அனைத்து நீர்நிலைகளும் தூர்வாரப்பட்டு ஆழப்படுத்தப்பட வேண்டும். இந்தப் புனரமைப்புப் பணிகள் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆற்றுநீரைக் கடைக்கோடி நீர் நிலைகள் வரைக் கொண்டு செல்வதற்கான



திட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். இவற்றின் மூலம் நீர்த் தேவையில் தன்னிறைவடைய வேண்டும் என்பதே நாம் தமிழர் கட்சி முன்வைக்கும் செயல்திட்டமாகும்.

## நீர்ப் பங்கீட்டுக்கான தீர்வுகள்

காவிரி, முல்லைப்பேரியாறு, பாலாறு என்று தமிழ்நாட்டைச் சுற்றி இருக்கும் மூன்று மாநிலங்களுடனும் நீர்ப் பங்கீட்டுச் சிக்கல்கள் பன்னெடுங்காலமாகத் தொடர்ந்து வருகின்றன. தமிழர் நிலத்தில் எடுக்கப்படும் நீரகக்கரிமம் (Hydrocarbon), நிலக்கரி போன்ற இயற்கை வளங்களும், பேரழிவை உண்டாக்கக்கூடிய அணுமின் நிலையத்தில் உருவாக்கப்படும் மின்சாரம் போன்ற அனைத்தும் பிற மாநிலங்களுக்குப் பகிர்ந்துக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் ஆற்றுநீர்ப் பங்கீட்டில் மட்டும் அவரவர் நீர் வளம் அவரவருக்கே உரியது என்பது அறமற்றது.

இதனால், ஒவ்வொரு முறையும் காவிரி நீர்ச்சிக்கல் வருகையில் கர்நாடகாவில் இருக்கக்கூடிய தமிழர்கள் தாக்கப்படுகின்றார்கள். முல்லைப்பேரியாற்று நீர்ச்சிக்கல் எழும்பொழுது கேரள எல்லையோரங்களிலும் கேரளாவிலும் வாழும் தமிழர்கள் தாக்கப்படுகின்றார்கள். இத்தகைய சூழலில், ஆற்றுநீரினால் எழும் சிக்கலுக்குத் தீர்வு கண்டு, வன்முறையாளர்களிடமிருந்து தமிழர்களைக் காக்க வேண்டிய ஒன்றிய அரசு செயலாற்றாமல்

**தமிழர் நிலத்தில் எடுக்கப்படும் எரிபொருள், நிலக்கரி போன்ற இயற்கை வளங்களும், பேரழிவை உண்டாக்கக் கூடிய அணுமின் நிலையத்தில் உருவாக்கப்படும் மின்சாரம் போன்ற அனைத்தும் பிற மாநிலங்களுக்குப் பகிர்ந்துக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் ஆற்றுநீர்ப் பங்கீட்டில் மட்டும் அவரவர் நீர் வளம் அவரவருக்கே உரியது என்பது அறமற்றது.**



இருப்பது இந்திய ஒன்றிய ஒறுமைப்பாட்டுக்கு எதிரானது. எனவே, நீர்த் தேவையில் தன்னிறைவடைய வேண்டும் என்கின்ற கொள்கையை நோக்கிப் பயணிக்கும் பொழுதிலும், தமிழ்நாட்டில் பாயும் ஆறுகளில் இருக்கக்கூடிய உரிமையைப் பாதுகாப்பது இன்றியமையாதது.

காவிரியின் வழித்தடமான மேகதாட்டில் புதிய அணையைக் கட்ட முயலும் கர்நாடக அரசின் முயற்சிகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப் பிடிப்பை 152 அடியாக உயர்த்த வேண்டும். காவிரி, முல்லைப்பேரியாறு, பாலாற்று நீர்ப் பங்கீட்டுச் சிக்கல்களில் பன்னாட்டுக் கோட்பாடுகளைப் பின்பற்றி, தமிழ்நாட்டின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில், இந்திய ஒன்றியத்தின் நீர்க் கொள்கையினை மாற்றி அமைக்க அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சிகள் மேற்கொள்ளும்

## நீர் என்பது பொதுவுடைமை

அனைவருக்கும் தூய்மையான தரமான கட்டணமில்லாக் குடிநீரை அரசே வழங்க வேண்டும் என்பது நாம் தமிழர் கட்சியின் கொள்கை. பன்னாட்டுப் பெருநிறுவனங்களிடம் நாட்டு மக்களுக்கு நீர் வழங்கும் பணியை ஒப்படைக்கும் நிலை உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும். குறிப்பாக சூயசு (SUEZ) போன்ற வெளிநாட்டுத் தனியார் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ‘குடிநீர் வழங்கும் உரிமம்‘ தடை செய்யப்பட வேண்டும். தூய குடிநீரைப் பெறுவது நாட்டு மக்களின் அடிப்படை உரிமை என்று தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்

# மீனவர்கள் நலன்



ஆண்டுக்குச் சற்றொப்ப 6,000 கோடியை அயல்நாட்டுச் (அன்னியச்) செலாவணியாக ஈட்டித்தரும் தமிழ்நாட்டு மீனவர்கள் கேட்பாரற்று இருக்கிறார்கள். அவர்களின் கோரிக்கைகள் ஏற்கப்படாமலேயே பன்னெடுங்காலமாகக் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன. அது மட்டுமின்றித் தமிழ் நாட்டு மீனவர்கள் அண்டை நாட்டுக் கடற்படையால் தளை (கைது) செய்யப்படுவதும், படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இவ்வாறு கடற்கரைப் பரப்பில் ஆளுகை, மீனவர் பாதுகாப்பில் முடிவெடுக்கும் அதிகாரம் என்று தங்கள் வாழ்க்கை முறையைச் சீர்படுத்த மீனவர்களிடத்தில் அதிகாரம் இல்லை. இவற்றைக் கவனத்தில் கொண்டு, கடலோரத் தொகுதிகளைக் கணக்கிட்டு, மீனவர்களுக்கென்று தனிச் சட்டமன்ற, நாடாளுமன்றத் தொகுதிகளை ஒதுக்கவும், இந்திய ஒன்றிய அரசில் மீனவர்களுக்கான தனி அமைச்சகத்தை உருவாக்கவும் அரசமைப்புச் சட்டத்திருத்தம் செய்ய அனைத்துத் தேசிய இன கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

**தமிழ்நாட்டு மீனவர்கள் அண்டை நாட்டுக் கடற்படையால் தளை (கைது) செய்யப்படுவதும், படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்தவண்ணம் உள்ளன.**



கடலும் கடல்சார் நெய்தல் நிலங்களும் மீனவர்களுக்குச் சொந்தம். அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தும் எந்தத் திட்டங்களுக்கும் எந்தக் காலத்திலும் அனுமதியில்லாத கொள்கை நிலையைச் சட்டத்திருத்தம் மூலம் உறுதி செய்ய வேண்டும்.

- அண்டை நாட்டுக் கடற்படை நமது மீனவர்கள் மீது கட்டவிழ்த்துவிடும் வன்முறைத் தாக்குதல்களை முறியடிக்க ‘நெய்தல் படை’ அமைக்க வேண்டும்.
- கடற்படையில் மீனவர்களுக்கு முன்னுரிமை அளித்து, அவர்களைக் கடலோரப் பாதுகாப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- மீனவர்களுக்கென்று தனி வைப்பகம் தொடங்க வேண்டும்.
- அரசே நடத்தும் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மீனவர்களுக்கான மீன்பிடிக் கலன்கள் குறைந்த வாடகையில் வழங்க வேண்டும்.
- கடலும் கடல்சார் நெய்தல் நிலங்களும் மீனவர்களுக்குச் சொந்தம். அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தும் எந்தத் திட்டங்களுக்கும் எந்தக் காலத்திலும் அனுமதியில்லை என கொள்கை நிலையைச் சட்டத் திருத்தம் மூலம் உறுதி செய்ய வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தீர்வுகளை நடைமுறைப்படுத்த அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

# வேளாண்துறையில் புரட்சி




**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை – தமிழ்மறை 1031**

**“வேளாண்மைதான் இந்திய ஒன்றியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு” என்கிறார் அண்ணல் காந்தி.**

“வேளாண்மைதான் இந்திய ஒன்றியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு” என்றார் அண்ணல் காந்தி. ஆனால், இந்திய ஒன்றியம் முழுமைக்கும் கோடிக்கணக்கான உழவர்கள் இன்றளவும் பல இன்னல்களுக்குள்ளாகி, ஏழ்மை வறுமையினாலும் கடன் தொல்லைகளாலும் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

வேளாண் துறைக்கு ஒன்றிய அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் 4.77 இலட்சம் கோடியும், குறிப்பாக 2023ஆம் ஆண்டு மட்டும் 1.18 இலட்சம் கோடியும் நிதியாக ஒதுக்கியுள்ளது. இவ்வளவு பெருந்தொகையினை வேளாண்மைக்கு ஒதுக்கியும் அதன் பலன் முழுமையாக எளிய வேளாண்குடி மக்களைச் சென்றடையவில்லை. இதற்குக் காரணம் ஊழல் முறைகேடுகள். இடையாளர்களின் (Intermediaries) தலையீடுகள் குறைக்கப்பட்டு, நேரடியாக மக்களே இந்த உரிமைகளைப்

**வேளாண் துறைக்கு ஒன்றிய அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் 4.77 இலட்சம் கோடியும், குறிப்பாக 2023ஆம் ஆண்டு மட்டும் 1.18 இலட்சம் கோடியும் நிதியாக ஒதுக்கியுள்ளது. இவ்வளவு பெருந்தொகையினை வேளாண்மைக்கு ஒதுக்கியும் அதன் பலன் முழுமையாக எளிய வேளாண்குடி மக்களைச் சென்றடையவில்லை.**

**மண்ணைச் சீரழிக்கும் செயற்கைப் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தும் வேளாண் முறையை ஊக்குவிக்கக் கூடாது.**





பெறக்கூடிய வகையில் அமைப்பு மாற்றங்கள் கொண்டுவர முயற்சிகள் எடுக்க வேண்டும். வேளாண்துறைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கை உருவாக்கி, வேளாண்துறைக்கு என்று ஒதுக்கப்படும் நிதியை வேளாண்குடி மக்களுக்கு நேரடியாக வழங்குவதன் மூலம் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் செய்யும் தொழிலான வேளாண்மையும் மொத்த ஒன்றியத்தின் பொருளாதாரமும் மேம்படும்.

- வேளாண் தொழில் சார்ந்த வேலைகள் அனைத்தையுமே அரசு வேலையாக அறிவிக்க தனிச் சட்டம் இயற்ற வேண்டும்.
- வேளாண் கடன்கள் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.
- வேளாண் தொழிலில் ஈடுபடுவோரின் தரவுகள் சேகரிக்கப்பட்டு, மாதந்தோறும் அடிப்படை வருமானமும் அகவை (வயது) மூப்பின் போது ஓய்வூதிய வருமானமும் வழங்க வேண்டும்.
- தற்போது நடப்பில் உள்ள வேளாண்குடிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு, மொத்தமாக முறைப்படுத்த வேண்டும்.
- வேளாண் துறைக்கு ஒதுக்கும் நிதியிலிருந்து விதைகள், உரம், சொட்டுநீர்ப் பாசனக் கருவி, தெளிப்பான் முதலிய வேளாண்மை உழவுக் கருவிகளை மானிய விலையில் கொடுப்பதை முறைப்படுத்த வேண்டும்.
- மண்ணைச் சீரழிக்கும் செயற்கைப் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தும் வேளாண் முறையை ஊக்குவிக்கக் கூடாது.
- தற்போதுள்ள வேளாண் சார்ந்த கல்விமுறைகள் மாற்றம் செய்யப்பட வேண்டும். இயற்கை மற்றும் மரபு வேளாண் கல்விமுறை பாடத் திட்டமாகச் சேர்க்க வேண்டும்.
- நாடு முழுமைக்கும் உள்ள வேளாண் பல்கலைக்கழகங்களில் இயற்கை வேளாண் பாடங்கள் கற்பிக்கப்பட சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- சிறப்பு முன்னுரிமையோடு, மரபு நெல் வகைகளைப் பாதுகாத்து வைக்க உயர் பாதுகாப்புப் பெட்டகங்கள் உருவாக்க வேண்டும்.

- மரபு நெல் வகைகளுக்கு உலகக் காப்புரிமைக் குறியீடு பெறுவதற்கான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால், இந்திய ஒன்றியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பான வேளாண்மையை மீட்டெடுக்க முடியாது. இதற்கான நடவடிக்கைகளைத் தமிழ்நாட்டில் நாம் தமிழர் கட்சி அரசு அமைந்தவுடன் விரைந்து முன்னெடுக்கும். அதுவரை, மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை இந்திய ஒன்றிய அளவில் அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முன்னெடுக்கும்.

## கால்நடை வளர்ப்பு

நாம் தமிழர் கட்சி முன் வைக்கக்கூடிய தற்சார்புப் பொருளாதாரத்தின் நீட்சியாக, உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில் கால்நடை வளர்ப்பிற்கும் கூட்டுப் பண்ணைத் திட்டங்களுக்கும் முதன்மைத்துவம் வழங்கப்பட வேண்டும். அரசின் உரிமைகள் கிடைக்கப்பெறும் வகையிலும், அடிப்படை வருவாயினை ஈட்டும் வகையிலும் ஆடு மாடு வளர்த்தல் அரசுப் பணியாக்கப்பட வேண்டும்.

மரபு சார்ந்த கால்நடை மேலாண்மைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வேளாண் உற்பத்தியுடன் இணைப்பதற்கான முன்னெடுப்புகளை நாம் தமிழர் கட்சி ஊக்குவிக்கும். இதற்கான ஒன்றிய அளவிலான நிதிப் பங்கீட்டினை உறுதி செய்யவும் நாம் தமிழர் கட்சி நடவடிக்கை மேற்கொள்ளும்.



# அறிவை வளர்க்கும் கல்வி



கல்வி என்பது **மானுட உரிமை.** அதைக் கொடுக்க வேண்டியது **அரசின் கடமை.** கொடுக்க மறுப்பது **மாபெரும் கொடுமை.**

– செந்தமிழன் **சீமான்**

அனைவருக்கும் அடிப்படைக் கல்வியைத் தரமான முறையில் அரசே வழங்காததால், கடன் வாங்கிப் படிக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்படுகின்றார்கள். அறிவை வளர்க்கும் கல்வி, உயிரைக் காக்கும் மருத்துவம், உலக உயிர்களின் உயிர்த் தேவையாக இருக்கக்கூடிய நீர் ஆகிய அணைத்தும் விற்பனைக்கு வந்துவிட்ட ஒரு நாடு மக்களியக் கோட்பாட்டில் தோல்வி அடைகின்றது. மக்களுக்கு அரசுப் பள்ளிகளின்மேல் நம்பிக்கைக்கூடும் வகையில் ஆட்சியாளர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் குழந்தைகள் கட்டாயம் அரசுப் பள்ளிகளிலேயே படிக்க வேண்டும் என்று சட்டம் இயற்ற வேண்டும். படித்தவர்கள், படிக்காதவர்கள் அனைவருக்கும் அரசு வேலை. இனிப் படிக்காதவர்களே இல்லை என்ற நிலையை உருவாக்குவதே நாம் தமிழர் கட்சியின் நிலைப்பாடு.

## கல்விமுறை மாற்றம்

ஆங்கிலேயர் ஆட்சியில் மெக்காலே அறிமுகப்படுத்திய ‘அடிமைக் கல்வி முறையை’ ஒழித்து, “அறத்தைக் கற்பிக்கும், அறிவை வளர்க்கும்” கல்விமுறையை நடைமுறைப்படுத்த வேண்டும். சமூகத்தோடு இணைந்து மாணவர்களின் வாழ்வை மாற்றும் கல்வியான ‘தனித்திறன் கல்வி’க்கு முன்னுரிமை வழங்க வேண்டும். தமிழர்களின் கலை, இலக்கியம், வரலாறு, வேளாண்மை, பண்பாடு என்று அனைத்தும் கல்வித் திட்டத்தில் ஒவ்வொரு வகுப்புப் பாடத்திலும் சேர்க்கப்பட வேண்டும். கல்வியில் முன்னேறிய நாடுகளான தென்கொரியா, சப்பான், சிங்கப்பூர், ஆங்காங் (Hong Kong), பின்லாந்து போன்ற நாடுகளில் உள்ள கல்வி முறையைப் பின்பற்றி, உலகத்தரமான கல்வியை அனைவருக்கும் சமமாக வழங்க வேண்டும் என்பதே நாம் தமிழர் கட்சியின் கொள்கை.

**சமூகத்தோடு இணைந்து மாணவர்களின் வாழ்வை மாற்றும் கல்வியான ‘தனித்திறன் கல்வி’க்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.**

## கல்வி - மாநில உரிமை

இந்திய ஒன்றியத்தின் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தனித்துவமான மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, வரலாறு, வாழ்வியல் என மாறுபட்ட விழுமியங்கள் இருக்கும் நிலையில், கல்விமுறை மட்டும் இந்திய ஒன்றியம் முழுமைக்கும் ஒன்று என்பது பொருத்தமற்றது. அந்தந்த மாநிலத்திற்கான கல்வியை அந்தந்த மாநிலத்தின் அரசே தீர்மானிக்கும் நிலை இங்கில்லை. இந்த நிலையை மாற்றியமைத்து, கல்வியை மாநிலப் பட்டியலில் நிலைபெறச்செய்து, மாநில உரிமையை மீட்டெடுக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளை அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும்.

இந்திய ஒன்றியம் முழுமைக்கும் ஒரே மாதிரியான கற்றல் வாய்ப்புகள் இல்லாத நிலையில், ஒரே மாதிரியான நுழைவு மற்றும் தகுதித்தேர்வு என்பது சாத்தியமில்லை. காங்கிரசு ஆட்சியில் கொண்டுவரப்பட்டு, பாஜகவின் ஆட்சியில் வீரியமாகச் செயல்படுத்தப்படும் தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) மற்றும் தேசியத் தகுதித் தேர்வு (NET) போன்ற தேர்வு முறைகள் முற்றிலுமாக நீக்கப்பட வேண்டும். இத்தேர்வு முறைகள் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாது, எந்தவொரு மாநிலத்திற்கும் தேவையில்லை என்பதுதான் நாம் தமிழர் கட்சியின் நிலைப்பாடாகும். இத்தேர்வு முறைகளால்






**தமிழ்நாட்டின் அனைத்துப் பல்கலைக் கழங்கங்களுக்கும் வேந்தராகத் தமிழ்நாட்டின் முதல்வரே பொறுப்பேற்கும் நிலையை ஏற்படுத்த சட்டமுறையில் மாற்றம் செய்ய வேண்டும். துணை வேந்தர்களாகத் தமிழர்கள் மட்டுமே அமர்த்தப்பட வேண்டும்.**

எண்ணற்ற பிள்ளைகளின் மருத்துவ மற்றும் உயர்கல்விக் கனவு கருகி, அனிதா உள்ளிட்ட பல பிஞ்சுகளைப் பறிகொடுக்கும் நிலை ஏற்பட்டது. எனவே, இந்தத் தகுதித்தேர்வு முறைகளை முற்றிலுமாக நீக்குவதற்குரிய முன்னெடுப்புகளை நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும்.

## நுழைவுத்தேர்வு முறை ஒழிப்பு

இந்திய ஒன்றியம் முழுமைக்கும் ஒரே மாதிரியான கற்றல் வாய்ப்புகள் இல்லாத நிலையில், ஒரே மாதிரியான நுழைவு மற்றும் தகுதித்தேர்வு என்பது பொருத்தமற்றது. காங்கிரசு ஆட்சியில் கொண்டுவரப்பட்டு, பாஜகவின் ஆட்சியில் வீரியமாகச் செயல்படுத்தப்படும் தேசியத் தகுதி மற்றும் நுழைவுத்தேர்வு (NEET) மற்றும் தேசியத் தகுதித்தேர்வு (NET) போன்ற தேர்வு முறைகள் முற்றிலுமாக நீக்கப்பட வேண்டும். தேசியத் தகுதி மற்றும் நுழைவுத்தேர்வு (NEET) என்பது ஒரு வடிகட்டிதான். கல்விமுறையை மாற்றாமல் வெறும் வடிகட்டியான தேர்வு முறையில் மாற்றம் கொண்டு வருவதால் மருத்துவர்களின் தரம் உயரும் என்பது அடிப்படையற்றது.

மருத்துவர் ஆவதற்கு நுழைவுத்தேர்வு எழுதச் சொல்லும் ஆட்சியாளர்கள், அடிப்படை அரசியல், புவியியல், வரலாறு, மொழி அறிவு போன்ற பாடங்களில் தாங்கள் நுழைவுத்தேர்வு




எழுதுவார்களா? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, ஆட்சியாளர்களும் இந்தப் பாடத்திட்டத்தில் தேர்வு எழுதட்டும். அப்படி அந்தத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுபவர்கள் முதன்மை அமைச்சராகவும், அடுத்தநிலையில் உள்ளவர்கள் அமைச்சர்களாகவும் இருக்கட்டும். மற்றவர்கள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடரட்டும். இம்முறை நடைமுறைப்படுத்தப்பட்டால் நாட்டை அறிவார்ந்த தலைவர்கள் ஆள்வார்கள்.

நாட்டின் மருத்துவக் கட்டமைப்பைப் பெருமையாக கூறும் ஆட்சியாளர்கள், அந்தப் பெருமைக்குரிய தற்போதைய மருத்துவர்கள் தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) முறையில் படிக்காதவர்கள் என்பதை உணர்ந்தார்களா?

பன்னிரண்டாம் வகுப்பில் 1200க்கு 1199 மதிப்பெண் எடுப்பவர் தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் (NEET) தேர்ச்சி பெற முடியவில்லை என்றால் அவர் தகுதியற்றவராக ஆகிவிடுகிறார். அதே பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் குறைந்த மதிப்பெண்களே பெற்று தேர்ச்சி பெறுபவர், தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்விலும் (NEET) தேர்ச்சி பெற்றால், அவர் தகுதி வாய்ந்தவர் ஆகிவிடுகிறார். தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் (NEET) தேர்ச்சி பெற்றால் மருத்துவராகும் தகுதி கிடைத்து விடுகிறது என்றால், பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளையே நீக்கி விடலாமே.

இந்த நுழைவுத்தேர்வு முறைகள் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாது, எந்தவொரு மாநிலத்திற்கும் தேவையில்லை என்பதுதான் நாம் தமிழர் கட்சியின் நிலைப்பாடாகும். இத்தேர்வு முறைகளால்



எண்ணற்ற பிள்ளைகளின் மருத்துவ மற்றும் உயர்கல்விக் கனவு கருகி, அனிதா உள்ளிட்ட பல பிஞ்சுகளைப் பறிகொடுக்கும் நிலை ஏற்பட்டது. எனவே, இந்தத் தகுதித்தேர்வு முறைகளை முற்றிலுமாக நீக்குவதற்குரிய முன்னெடுப்புகளை நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும்.

## ஆளுநர் வேந்தரன்று

ஆளுநர் பதவியே தேவையில்லை என்பதுதான் நாம் தமிழர் கட்சியின் கொள்கை முடிவு. ஆளுநர் பொறுப்பேற்று வரும் பல்கலைக்கழங்கங்களின் வேந்தர் பதவியை இனி தமிழ்நாட்டின் முதல்வரே பொறுப்பேற்கும் வகையில் மாற்றியமைக்க வேண்டும். தமிழ்நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழங்கங்களுக்கும் வேந்தராகத் தமிழ்நாட்டின் முதல்வரே பொறுப்பேற்கும் நிலையை ஏற்படுத்த சட்டமுறையில் மாற்றம் செய்ய வேண்டும். தமிழகத்தின் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் துணை வேந்தர்களாகத் தமிழர்கள் மட்டுமே அமர்த்தப்பட வேண்டும். இம்மாற்றங்களுக்கான சிறப்புச் சட்டத் திருத்தம் செய்ய அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முற்சிகளை மேற்கொள்ளும்.

**இந்திய ஒன்றியம் முழுமைக்கும் வல்லபாய் பட்டேல் வரலாற்றைக் கற்பிக்கும். வ.உ.சிதம்பரனார் வரலாற்றைத் தமிழ்நாட்டு மாணவர்களுக்குக் கற்பிக்குமா? சான்சி இராணி எனும் இலட்சுமிபாய் வரலாற்றைக் கற்பிக்கும். வீரமங்கை வேலு நாச்சியார் வரலாற்றைக் கற்பிக்குமா?**

## தேசியக் கல்விக் கொள்கை

கல்வியில் மாநில உரிமையைச் சிதைத்து, ஆளும் பாஜகவின் இந்துத்துவக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு முன்மொழியப்பட்டதே தேசியக் கல்விக் கொள்கை-2020 ஆகும். எனவே, தேசியக் கல்விக் கொள்கையை நாம் தமிழர் கட்சி எதிர்க்கின்றது.

இன்றைய சூழலில் 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் தோல்வியுறும் மாணவ மாணவிகளே அதைத் தாங்கிகொள்ள இயலாது தங்களை மாய்த்துக் கொள்கின்றார்கள். 5 மற்றும் 8ஆம் வகுப்புகளுக்கு இதுபோன்ற பொதுத் தேர்வு கொண்டுவந்தால் அது மாணவர்களுக்குத் தேவையற்ற மன அழுத்தத்தை ஏற்படுத்தும். இந்தத் திட்டம் முன்மொழியும் 5ஆம் வகுப்பு மற்றும் 8ஆம் வகுப்பிற்கான பொதுத் தேர்வை நாம் தமிழர் கட்சி எதிர்க்கின்றது.

தேசியக் கல்விக் கொள்கை, இந்திய ஒன்றியம் முழுமைக்கும் வல்லபாய் பட்டேல் வரலாற்றைக் கற்பிக்கும். வ.உ.சிதம்பரனார் வரலாற்றைத் தமிழ்நாட்டு மாணவர்களுக்குக் கற்பிக்குமா? சான்சி இராணி எனும் இலட்சுமிபாய் வரலாற்றைக் கற்பிக்கும்.





*வீரமங்கை வேலு நாச்சியார் வரலாற்றைக் கற்பிக்குமா? வீரம் என்றாலே மராட்டிய மன்னர்தான். இராசராசன் எனும் அருண்மொழிச்சோழன் வரலாறு இதுவரையிலும் கற்பிக்கப்படவில்லை. தேசியக் கல்விக் கொள்கையிலும் கற்பிக்கப்படுவதற்கான உறுதி காணப்படவில்லை.*

*தாய்மொழி கற்பிக்கப்படுமா? தாய்மொழி சார்ந்த இலக்கியங்கள் கற்பிக்கப்படுமா? அனைத்துப் பாடங்களும் தாய்மொழியிலேயே கற்பிக்கப்படுமா? பள்ளிக்கல்வி மட்டுமல்லாது உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கல்வி வரை தாய்மொழியில்தான் அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்பட வேண்டும் என்பது நாம் தமிழர் கட்சியின் கொள்கை.*

*தேசியக் கல்விக் கொள்கையில் தேசிய இனங்களின் வரலாறு மறைக்கப்பட்டு இந்திய ஒன்றிய அரசு நினைக்கும் வரலாறு மட்டுமே கற்பிக்கப்படும். தாய்மொழிக் கல்விக்கான முதன்மைத்துவம் மறுக்கப்படும். இந்தி மற்றும் சமற்கிருதத்தைத் திணித்து, வடஇந்திய வரலாற்றை முதன்மைப்படுத்தும் நோக்கில் கொண்டு வரப்பட்டுள்ள தேசியக் கல்விக் கொள்கையில் தமிழரின் வரலாறு முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படும் பெருங்கேடு உள்ளது.*

*எனவே தேசியக் கல்விக் கொள்கை - 2020யை முழுமையாகத் திரும்பப் பெற்று, கல்வியைப் பொதுப்பட்டியலிலிருந்து முழுமையாக மாநிலப்பட்டியலுக்கு மாற்றம் செய்யும் நடவடிக்கைகளை அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும்.*

## ஒன்றிய அரசு கல்விக்கு ஒதுக்கும் நிதி

*இந்திய ஒன்றிய அரசு மொத்த வருவாயில் 6 விழுக்காட்டு நிதியை மட்டுமே கல்விக்காக ஒதுக்குவதாக நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கின்றது. அறிவித்த 6 விழுக்காட்டுத் தொகையைக்கூட இன்றளவும் ஒதுக்கி முழுமையாகப் பயன்படுத்தாத நிலையே தொடர்கின்றது. முதலில் 6 விழுக்காடு நிதியைக் கல்விக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்பது 1964ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கோத்தாரி கல்விக்குழுவின் பரிந்துரைகளில் ஒன்றாகும். ஆகவே, 6 விழுக்காட்டுப் பயன்பாட்டை எட்டும் நிலையை முதலில் ஏற்படுத்த வேண்டும். பின்னர், அதைக் குறைந்தளவு 10 விழுக்காடாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதை உறுதி செய்ய நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.*

# மருத்துவத்துறையில் புரட்சி

**நாட்டின் முதல் குடிமகனுக்குக் கிடைக்கும் மருத்துவம் அனைத்துக் குடிமக்களுக்கும் கிடைக்கச் செய்வதே உண்மையான மக்களாட்சியாக இருக்க முடியும்.**

**நாட்டில் வசதி படைத்த ஒருவருக்குக் கிடைக்கும் மருத்துவம், ஏழை எளிய மக்களுக்கும் அரசினால் கொடுக்கப்படுகின்றதா?**

அனைவருக்கும் கட்டணமில்லா மருத்துவம் என்பது பெயரளவில் இருந்தாலும் நடைமுறையில் அதன் தரம் குறித்துப் பல கேள்விகள் உள்ளன. அனைவருக்கும் சரியான, சமமான, தரமான மருத்துவத்தைக் கட்டணமில்லாமல் அளிக்க வேண்டுமென்பதே நாம் தமிழர் கட்சியின் பெருங்கனவாகும். நாட்டின் முதல் குடிமகனுக்குக் கிடைக்கும் மருத்துவம் அனைத்துக் குடிமக்களுக்கும் கிடைக்கச் செய்வதே உண்மையான மக்களாட்சியாக இருக்க முடியும். ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் அரசு மருத்துவமனையைப் பயன்படுத்தத் தொடங்கினால்தான், மக்களுக்கும் அரசு மருத்துவமனையின் மீது நம்பிக்கைக் கூடும். மேலும் முறைகேடுகள் நடப்பதற்கான வாய்ப்புகளும் குறையும். எனவே ஆட்சியாளர்கள், அரசு ஊழியர்கள் கட்டாயம் அரசு மருத்துவமனைகளில்தான் மருத்துவம் பெற வேண்டும் என்று சட்டமியற்ற நாம் தமிழர் கட்சி நடவடிக்கை மேற்கொள்ளும்.



## மரபு மருத்துவ முறைகள்

**உற்றான் அளவும் பிணியளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல். – தமிழ்மறை 949**



அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் ஆங்கில மருத்துவம் 50 விழுக்காடும், தமிழ் மரபு மருத்துவம் 50 விழுக்காடுமாகச் செயல்படுத்தப்பட வேண்டும். நேரடி அறுவை மருத்துவம் மற்றும் உடனடி உடற்காய மருத்துவம் தவிர்த்து, இதய நோய், சர்க்கரை நோய், குருதி அழுத்த நோய் உள்ளிட்ட உள்ளுறுப்புகள் சார்ந்த நோய்கள் வாழ்வியல் முறை மாற்றத்தாலும், உணவு முறை மாற்றத்தாலும் ஏற்படுகின்றன. எனவே நோய் வந்த பிறகு ஆங்கில மருத்துவத்தை மட்டுமே நம்பியில்லாமல் வரும்முன் காக்கவும், வந்தபின் கட்டுப்படுத்தவும் நோய்களுக்குத் தமிழர் மரபு மருத்துவ

முறையான சித்த மருத்துவ முறையில் மருத்துவம் வழங்க வேண்டும். சித்த மருத்துவர்களின் நீண்ட காலக் கோரிக்கையான சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டு, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சித்த மருத்துவத்தைப் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய ஒன்றிய அரசின் ஆயுசு (AYUSH) அமைச்சகத்தில் சமற்கிருதத்தை அடிப்படையாகக் கொண்ட ஆயுர்வேத மருத்துவ முறைக்குக் கொடுக்கப்படும் முன்னுரிமை தமிழ் மருத்துவமான சித்த மருத்துவத்திற்குக் கொடுக்கப்படுவதில்லை. எனவே, இவற்றைச் சீர் செய்ய இந்திய ஒன்றியத்தில் சித்த மருத்துவத்திற்கெனத் தனி அமைச்சகம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இந்திய ஒன்றியத்தில் வாழும் மண்ணின் மைந்தர்களான மலைவாழ் மக்களின் மரபு வழி மருத்துவ அறிவை அனைத்து மக்களுக்கும் பயன்படும்படி, மீட்டுருவாக்கம் செய்து ஆவணப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.





## சிற்றூர்களின் மருத்துவக் கட்டமைப்பு

இன்றைய மருத்துவக் கட்டமைப்பில், நாட்டின் அனைத்து மக்களும் சிறப்பு மற்றும் உயர்தர மருத்துவத்திற்காகத் தலைநகரங்களையோ, பெருநகரங்களையோ நோக்கி, குறிப்பாகத் தமிழ்நாட்டில் சென்னையை நோக்கியே வரவேண்டிய தேவை எழுகின்றது. அவ்வாறான நிலையில், அனைவருக்கும் சமமான மருத்துவம் என்கின்ற கோட்பாடே தோல்வியடைகின்றது. சிற்றூர்களிலும் அதனருகிலிருக்கும் சிறு நகரங்களிலும் தரமான மருத்துவம் கிடைக்கும் வகையில் சென்னைக்கு இணையான பல்நோக்குச் சிறப்பு மருத்துவமனைகள் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்த அனைத்துத் தேசிய இனக்கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சியை மேற்கொள்ளும்.

**சிறப்பு மற்றும் உயர்தர மருத்துவத்திற்காகத் தமிழ்நாட்டில் சென்னையை நோக்கியே வரவேண்டிய தேவை எழுகின்றது. அவ்வாறான நிலையில், அனைவருக்கும் சமமான மருத்துவம் என்கின்ற கோட்பாடே தோல்வியடைகின்றது.**

## மருத்துவக் கழிவு மேலாண்மை

தமிழ்நாட்டின் மருத்துவக் கழிவுகளை முறையாகப் பிரித்து நோய் நுண்ணுயிர்களை மக்கவைத்து, சிதைத்து அழிக்க வேண்டும். அதற்கான உட்கட்டமைப்புகள் உருவாக்க வேண்டும். இவற்றைக் கண்காணித்து, தணிக்கை செய்து, முறையாகக் கையாளாதவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.



> **இக்குற்றச் செயலுக்கு மாநில அரசுகளும் கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை. ஒருமைப்பாட்டைப் பேசும் இந்திய ஒன்றிய அரசும் எவ்வகை நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது அவர்களின், தமிழர் மீதுள்ள பகைமைப் போக்கினையே தெளிவுபடுத்துகின்றது.**

அயல் மாநிலங்களின் மருத்துவக் கழிவுகளைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து கொட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். குறிப்பாகக் கேரளாவின் மருத்துவக் கழிவுகள் தமிழ்நாட்டின் எல்லையோர மாவட்டங்களில் பெருமளவில் கொட்டப்படுகின்றன. இது அப்பகுதிகளில் வாழும் தமிழர்களுக்குப் பல்வேறு நோய்களை ஏற்படுத்துகின்றது. தொடர்ச்சியாக மாநிலம் தாண்டிச் செய்யப்படும் இக்குற்றச் செயலுக்கு மாநில அரசுகளும் கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை. ஒருமைப்பாட்டைப் பேசும் இந்திய ஒன்றிய அரசும் எவ்வகை நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது அவர்களின், தமிழர் மீதுள்ள பகைமைப் போக்கினையே தெளிவுபடுத்துகின்றது.

வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்குள் கொண்டுவரப்படும் அனைத்து மருத்துவக் கழிவுகளையும் தடுத்து நிறுத்த வேண்டும். இக்குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்து, தகுந்த தண்டனையும், தண்டமும் விதிக்க அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

# போக்குவரத்துத்துறையில் மாற்றம்

## சுங்கவரி நீக்கம்

ஊர்திகள் வாங்கும் பொழுதே உரிய சாலை வரியினைச் செலுத்தும் ஒருவரிடம் தொடர்ச்சியாக ஒவ்வொரு முறையும் சுங்கவரிக் கட்டணம் பெறப்படுவது முறையற்றதாகும். சுங்கவரி குறித்த தெளிவான ஒளிவு மறைவில்லாத முறைமை பின்பற்றப்படுவதில்லை. திட்டச் செலவைத் திரும்பப் பெற்றவுடன், பொது நிதியுதவி பெறும் சுங்கச்சாவடிகளில் பயணக் கட்டணம் 40 விழுக்காடாகக் குறைக்கப்படும் என்று இந்திய ஒன்றியத்தின் சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் அறிவித்தது. ஆனால், அவ்வறிவிப்பு செயற்பாட்டில் இல்லை என்பதே உண்மை நிலை. தமிழ்நாட்டளவில் மட்டும் விக்கிரவாண்டி, ஓமலூர், தருமபுரி, சமயபுரம் உள்ளிட்ட 28 சுங்கச்சாவடிகளில் அண்மையில் சுங்கக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. சுங்கச் சாவடி ஒப்பந்தம் முடிந்த பிறகும்கூட இன்று வரை தொடர்ந்து சுங்கவரி பெறும் நிறுவனங்களும் பல உள்ளன.

- அனைத்துச் சுங்கச்சாவடி நிறுவங்களின் கணக்குகள் தணிக்கை செய்ய வேண்டும்.
- நடப்பு ஒப்பந்தங்கள் அனைத்தும் சட்டத்தின் வழியில் உடனடியாக நீக்கம் செய்ய வேண்டும்.
- சுங்கச்சாவடி ஒப்பந்தம் முடிந்த பிறகும் இன்று வரை தொடர்ந்து விதிகளுக்குப் புறம்பாகச் சுங்கவரி பெறும் நிறுவனங்கள் மீதும், அதன் தாளாளர்கள் மீதும் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களிடம் இருந்து வட்டியுடன் தண்டத் தொகையைப் பெற வேண்டும்.

இம்மாற்றங்களை நடைமுறைப்படுத்த அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து தனிச் சட்டமியற்ற நாம் தமிழர் கட்சி நாடாளுமன்றத்தில் முயற்சி மேற்கொள்ளும்.

**ஊர்திகள் வாங்கும் பொழுதே உரிய சாலை வரியினைச் செலுத்தும் ஒருவரிடம் தொடர்ச்சியாக ஒவ்வொரு முறையும் சுங்கவரிக் கட்டணம் பெறப்படுவது முறையற்றதாகும்.**





**தென்னகத் தொடர்வண்டித் துறையில் தமிழகத்தின் அனைத்துக் காலிப் பணியிடங்களிலும் தமிழர்களுக்கு 90 விழுக்காடு முன்னுரிமை வழங்க நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.**

# தமிழர்களுக்கே முன்னுரிமை

எளிய மக்கள் அதிக அளவில் பயணிக்கக் கூடிய தொடர் வண்டிப் பணிகளில் மாற்று மொழியினர், குறிப்பாக இந்தி மட்டும் பேசக்கூடியவர்கள் பணியமர்த்தப்படுவதனால் சேவைகள் பெறுவது தொடர்பான வழிமுறைகள் சிக்கலாகின்றன. எனவே,

- தென்னகத் தொடர்வண்டித் துறையில் தமிழகத்தின் அனைத்துக் காலிப் பணியிடங்களிலும் தமிழர்களுக்கு 90 விழுக்காடு முன்னுரிமை வழங்க நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.
- தொடர்வண்டிப் பெட்டி உருவாக்க நிறுவனமான ஐ.சி.எப். வேலைகளிலும் தமிழர்களுக்கான இடஒதுக்கீடுகளை உரிய முறையில் பெறவும் நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

# நெய்தல் பாதுகாப்பு

ஒவ்வொரு பேரிடர்க் காலத்தின் பொழுதும் ஒன்றிய அரசு உரிய நேரத்தில் மீட்புப் பணிகளையும் மேற்கொள்வதில்லை, பேரிடர் மீட்பு நிதியையும் வழங்குவதில்லை. 2017ஆம் ஆண்டு ஒக்கி புயல் நெருங்கி வருவதைப் பற்றித் தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளுக்கு இந்திய வானிலை ஆய்வு மையம் உரிய நேரத்தில் தகவல் தெரிவிக்காததால், மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தடுக்கவும், எச்சரிக்கவும் முடியாமல் போனது. இதனைத் தொடர்ந்து, ஒக்கி புயலினால் கடலுக்குள் சென்ற மீனவர்கள் பாதிப்படைந்த நேரத்தில் உரிய மீட்பு நடவடிக்கைகளிலும் ஒன்றிய அரசு ஈடுபடவில்லை. மாநில அரசுகள் கோரிய மீட்பு உதவிகளையும் மதித்துச் செயற்படுத்தவில்லை.

அரசுக் கணக்கீட்டின்படி, ஒக்கி புயலால் தமிழ்நாட்டில் 27 பேர் இறந்துள்ளனர் (உடல்கள் கிடைத்தன) மற்றும் 177 பேர் காணாமல் போயினர் (உடல்கள் கிடைக்கவில்லை). கேரளாவில் 52 பேர் இறந்ததாகவும், 91 காணாமல் போனதாகவும் அறிவிக்கப்பட்டது.

எனவே, நெய்தல் பாதுகாப்புப் பணியில் அம்மாநிலத்தின் மக்களே குறிப்பாக மீனவர்கள் பணியமர்த்தப்பட வேண்டும்.

2017ஆம் ஆண்டு ஒக்கி புயல் நெருங்கி வருவதைப் பற்றித் தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளுக்கு இந்திய வானிலை ஆய்வு மையம் உரிய நேரத்தில் தகவல் தெரிவிக்காததால், மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தடுக்கவும், எச்சரிக்கவும் முடியாமல் போனது.

# துறைமுகம் மற்றும் வானூர்தித் துறையில் மாநில அரசுகள்

தனக்கென இருந்த “ஏர் இந்தியா” (Air India) வானூர்திப் போக்குவரத்துச் சேவையையும் தனியாரிடம் விற்றது மட்டுமன்றிப் பல்வேறு துறைமுகங்களையும் தனியார் வசம் கொடுத்துவிட்டது ஒன்றிய அரசு. எனவே, பாதுகாப்புத் துறை சார்ந்த வானூர்தி மற்றும் கப்பல் பயன்பாட்டை மட்டும் இந்திய ஒன்றிய அரசு அதிகாரத்தில் வைத்துக்கொண்டு, மக்கள் பயன்படுத்தும் வானூர்தி மற்றும் கப்பல் பொதுப் போக்குவரத்துத் தொடர்பான தளங்களில் மாநில அரசே முதலீடு செய்து, நடத்துவதற்கான அமைப்பு மாற்றங்களை அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முன்னெடுக்கும்.



# மாற்று மின் பெருக்கம்



**காற்றாலை, கதிர் ஒளி, கடல் அலை, மக்கும் கழிவுகள் போன்ற தீரா வளங்களைக் கொண்டு மின்சாரத்தை உருவாக்கும் முறைக்கு அரசு மாற வேண்டும்.**

பூமியின் வெப்பம் தற்போதைய நிலையிலிருந்து 1.5°Cக்கு மேல் சென்றால் பூமியை மீட்டுருவாக்கம் செய்ய முடியாமல், வாழ்வதற்குத் தகுதியற்ற நிலைக்குச் சென்றுவிடும் என்கின்றனர் காலநிலை ஆய்வாளர்கள். இந்நிலையைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க, 2040ஆம் ஆண்டிற்குள் மின்சார உருவாக்கத்துக்கு நிலக்கரிப் பயன்பாட்டை நிறுத்த வேண்டும் என்று பன்னாட்டு ஆற்றல் முகமை (International Energy Agency) எச்சரித்துள்ளது. இது குறித்தான சி.ஓ.பி. (COP) எனப்படும் பன்னாட்டு ஒன்றுகூடலும் நிலக்கரிப் பயன்பாட்டினைத் தடை செய்ய வலியுறுத்துகின்றது. இதை அனைத்து நாடுகளும் அரசுகளும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தீர்ந்துவிடக்கூடிய வளங்களை அடிப்படையாகக் கொண்டு, இயற்கைக்குக் கேடு விளைவிக்கின்ற, காற்று மாசினை ஏற்படுத்துகின்ற, சுற்றுச்சூழலைச் சீரழிக்கின்ற அனல்மின் நிலையம் மற்றும் அணு உலை போன்ற திட்டங்களே அரசினால் அதிகம் பின்பற்றப்படுகின்றன. காற்றாலை, கதிர் ஒளி, கடல் அலை, மக்கும் கழிவுகள் போன்ற தீரா வளங்களைக் கொண்டு மின்சாரத்தை உருவாக்கும் முறைக்கு அரசு மாற வேண்டும்.

கெடுவாய்ப்பாக நாட்டைச் சீரழிக்கும் அனல் மின் நிலையம் மற்றும் அணு உலை போன்ற நச்சுத் திட்டங்களை அரசு நடத்துவதும், சூழலியலுக்குக் கேடு விளைவிக்காத காற்றாலை மின்சாரம், கதிர் ஒளி மின்சாரம் ஆகியவற்றைத் தனியாரிடம்



ஒப்படைத்து விடுவதும் இந்திய ஒன்றியத்தின் கேடான ஆட்சிமுறையாக உள்ளது. அணு உலைகள் முழுவதுமாக மூடப்பட்டு, அனல்மின் நிலையங்களின் பயன்பாடும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு மாற்று மின் பெருக்கத்தினை அரசே முழுமையாக முன்னெடுக்கும் வகையில் விதிமுறைகளை மாற்றியமைக்க வேண்டும்.

ஊராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி மட்டத்தில் பசுமைக் கழிவுகளில் இருந்தும், கதிர் ஒளி, காற்றாலை, கடலலை ஆகியவற்றைக் கொண்டும் மாற்று மின் உருவாக்கம் மூலம் தேவையான மின் உருவாக்கத்தைப் பெருக்கிக்கொள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். மாற்று மின் பெருக்கத்தில் தன்னிறைவடையும் வரையில் மாற்று மின்சாரம் உருவாக்கத் தேவைப்படும் மூலப் பொருள்கள் அரசிடமே இருக்கும் வகையில் தற்காலிகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும்.

மின் உருவாக்கத்தை மாற்று முறைகளினால் பெருக்குவதன் வழியே ஓர் அலகு (Unit) மின்சாரம் ஒரு உருபாய்க்கு அளிக்க வாய்ப்புள்ளது. மேலும் வேளாண் மக்களுக்கு நாள் முழுவதும் கட்டணமில்லா மின்சாரம் அளிக்க வாய்ப்புள்ளது. இதற்குத் தேவையான திட்ட மாற்றங்களை இந்திய ஒன்றியம் முழுமைக்கும் நடைமுறைப்படுத்த அனைத்துத் தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

**அணு உலைகள் முழுவதுமாக மூடப்பட்டு, அனல்மின் நிலையங்களின் பயன்பாடும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு மாற்று மின் பெருக்கத்தினை அரசே முழுமையாக முன்னெடுக்கும் வகையில் விதிமுறைகளை மாற்றியமைக்க வேண்டும்.**

# பேரழிவுத் திட்டங்கள்



**கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சட்டத்திருத்தங்கள் மற்றும் திட்டங்கள் இயற்கை வளங்களின் அழிவுக்கு வித்திடும் வகையிலேயே அமைந்துள்ளன.**

இன்றுவரை இந்திய ஒன்றியத்தில் நிலைபெற்ற அரசுகள் அனைத்தும் தனியார்மயத்தை ஆதரித்து, இந்நாட்டின் வளங்களைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கையளிக்கும் வகையில் கொள்கை முடிவுகளை எடுத்துள்ளன. குறிப்பாகக் கடந்த பத்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தங்கள் மற்றும் திட்டங்களில் பெரும்பாலானவை இயற்கை வளங்களின் அழிவுக்கு வித்திடும் வகையிலேயே அமைந்துள்ளன.

சூழலியல் பாதுகாப்பிற்கு எதிராக அமைந்துள்ள சட்டத் திருத்தங்கள் மற்றும் திட்ட முன்னெடுப்புகள் அனைத்தையும் திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கைகளை நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும். அரசின் கொள்கை முடிவுகளில் மாற்றம் கொண்டுவரப்பட்டு, சூழலியல் பாதுகாப்புச் சட்டங்கள் மேலும் செழுமை பெறும் வகையில் மாற்றங்கள் கொண்டுவரவும், இயற்கை சார்ந்த திட்டங்களை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒன்றிய அரசினால் வலிந்து தமிழ்நாட்டின் மீது திணிக்கப்படும் பேரழிவுத் திட்டங்கள் அனைத்தும் திரும்பப் பெறுவதற்கான முயற்சிகளை நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும்.

## நீரகக்கரிமத் (Hydrocarbon) திட்டம்

வேளாண் நிலங்களைப் பாதிக்கும் வகையிலான எரிபொருள் எடுக்கும் திட்டங்கள் தமிழ்நாட்டைக் குறிவைத்து முன்னெடுக்கப்படுகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை, முதுகுளத்தூர், பரமக்குடி, கீழக்கரை, கடலாடி போன்ற பகுதிகளில் நீரகக்கரிமம் (Hydrocarbon) எடுக்கும் திட்டம் நிலத்தின் தன்மையையே அடியோடு சீரழிக்குமென்பதால் நாம் தமிழர் கட்சி இத்திட்டத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும். மேலும், கெயில் எரிகாற்றுக் குழாய் பதிக்கும் திட்டம், இந்திய எண்ணெய்க் கழகத்தின் (IOC) குழாய் பதிக்கும் திட்டம், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவளிக் கழகத்தின் (ONGC) எரிவளிக் குழாய் பதிக்கும் திட்டம் ஆகியவை முற்றிலும் தடுக்கப்படும்.





## நரிமணம் எண்ணெய் தூய்மையாக்கல் (சுத்திகரிப்பு) நிலையம்

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாகச் சட்டத்தின் வழியே காவிரிப் படுகைப் பகுதி அறிவிக்கப்பட்ட பிறகும், எரிபொருள் தூய்மையாக்கல் நிலையம் எனும் பெயரில் புதிய திட்டங்கள் தொடங்கப்படுவது வேளாண் பாதுகாப்பில் எவ்வகையிலும் உதவாது. எனவே, நாகை மாவட்டம் நரிமணத்தில் 1300க்கும் அதிகமான ஏக்கரில் 90 இலட்சம் மெட்ரிக் டன் அளவிலான எண்ணெய் தூய்மையாக்கல் (பெட்ரோலிய சுத்திகரிப்பு) நிலையம் அமைப்பது தடுக்கப்படும்.



## பரந்தூர் வானூர்தி நிலையம்

ஆயிரக்கணக்கான ஏக்கர் அளவில் ஈர நிலங்கள் மற்றும் வேளாண் பகுதிகளைக் கையகப்படுத்தி பரந்தூர் பகுதியில் சென்னைக்கான இரண்டாவது பன்னாட்டு வானூர்தி நிலையம் அமைப்பது சென்னைப் புறநகர்ப் பகுதியின் நீரியல் அமைப்பைப் பாதிப்பதோடு, வெள்ளக் காலங்களில் சென்னை பெருநகரம் எதிர்காலங்களில் சந்திக்கவிருக்கும் பேரழிவுகளுக்கான அடித்தளமாகவும் அமையும். எனவே, இத்திட்டத்தை எதிர்க்கும் மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுத் திட்டம் தடுக்கப்படும்.
















## அதானி துறைமுக விரிவாக்கம்

6000 ஏக்கருக்கும் மேலான கடற்பரப்பு, நீர் நிலைகள், வேளாண் நிலங்களை வலியக் கைப்பற்றித் திட்டமிடப்பட்டுள்ள அதானி நிறுவனத்தின் காட்டுப்பள்ளித் துறைமுக விரிவாக்கத்திற்கு ஒப்புதல் வழங்கப்படாது. வடசென்னை, திருவள்ளூர் பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை அடியோடு புரட்டிப்போடும் இத்திட்டம் எவ்வகையிலும் மக்களுக்கான திட்டமில்லை என்பதில் நாம் தமிழர் கட்சி உறுதியோடு இருக்கின்றது, துறைமுகங்களின் செயல்பாட்டில் தனியாருக்கான தேவை இல்லையென்பதால், தமிழ்நாட்டில் துறைமுகங்கள் அரசின் கட்டுபாட்டில் மட்டுமே செயல்படும்.

## சாகர்மாலா திட்டம்

உள்நாட்டிலுள்ள இயற்கை வளங்களைக் கொள்ளையடித்து, எளிதாக ஏற்றுமதி செய்வதற்கு பல்வேறு காரணங்களைக் கூறி கொண்டுவரப்படும் சாகர்மாலா திட்டத்தினை நாம் தமிழர் கட்சி கடுமையாக எதிர்க்கின்றது. பாதுகாப்புக் காரணங்களைக் கூறி கடலோரப் பகுதி மக்களை வெளியேற்றும் சாகர்மாலா திட்டம் நிறைவேறாமல் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் நாம் தமிழர் கட்சியினால் எடுக்கப்படும்.

## கூடங்குளம் அணுமின்நிலையம்

கூடங்குளத்தில் இருக்கின்ற அணு உலைகளைச் சீராக மூடவும் கூடுதலாக அணு உலைகளோ அணுக்கழிவு மையமோ அமைக்கப்படுவதை உடனடியாகக் கைவிடவும் உரிய நடவடிக்கையை நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும். அணு உலைகளைக் கண்டுபிடித்த நாடுகளே அவற்றின் ஆபத்தறிந்து பயன்பாட்டினை முற்றிலுமாகக் கைவிட்ட நிலையில், இந்தியா இந்த முறைமையைப் பின்பற்றுவது எவ்வகையிலும் சரியல்ல. குறிப்பாக இந்த அழிவுத் திட்டத்தினைத் தமிழர்களின் மீது சுமத்துவதை நாம் தமிழர் கட்சி எதிர்த்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

## கல்பாக்கம் ஈனுலை

பாதுகாப்பற்ற நீர்ம சோடியத்தைக் குளிர்விப்பானாகக் கொண்ட ஈனுலைகள் பேரழிவை ஏற்படுத்தக்கூடியது. இருக்கக்கூடிய அணு உலைகளையே மூடவேண்டிய நிலையில்

இது தொடர்பான புதிய திட்டங்களை நாம் தமிழர் கட்சி ஒருபோதும் ஏற்காது. எனவே, சென்னை கல்பாக்கத்திலுள்ள அணுவுலை வளாகத்தில் புதிதாகத் திறக்கப்பட்ட 500 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மாதிரி அதிவேக ஈனுலையைத் தடை செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும்.



## எண்ணூர் அனல்மின்நிலையம்

எண்ணூர் பகுதியைச் சுற்றி இரண்டு பெரும் அனல் மின் நிலையங்கள், எண்ணெய் தூய்மையாக்கல் (சுத்திகரிப்பு) நிலையங்கள் என 38க்கும் மேற்பட்ட ஆபத்தான தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்நிலையில் எண்ணூரில் 3ஆம் கட்ட ஆலைக்கான பணிகள் நடைபெற்றுவந்த வண்ணம் உள்ளன. முதல் 2 கட்ட ஆலைகள் வெளியிடும் சாம்பல் கழிவுகளால் ஏற்கெனவே மக்கள் அதிகம் பாதிக்கப்பட்ட நிலையில் இனி எவ்வகைத் திட்டங்களும் இப்பகுதியில் வராதவாறு தடுப்பதற்கும், இதுவரை தெரியவந்துள்ள விதிகளை மீறிய ஆலைகளை மூடுவதற்கும் நடவடிக்கைகளை நாம் தமிழர் கட்சி எடுக்கும்.



## கேரள மருத்துவக் கழிவு

சென்ற பத்து ஆண்டுகளுக்கு மேலாக, கேரளாவில் இருந்து கடும் ஊறுவிளைவிக்கும் மருத்துவக் கழிவுகள் தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிகளில் கொட்டப்படுகின்றன. மருத்துவக் கழிவுகள் திறந்தவெளியில் கொட்டப்படுவது பல்வேறு நோய்களையும் உடல் நலக் குறைவுகளையும் ஏற்படுத்தும். எனவே இச்சிக்கல் குறித்த நிரந்தர தீர்வு எட்டப்படும். இக்கழிவுகள் உருவாகும் இடத்திலேயே கையாளப்படுவதற்கான நடவடிக்கைகளை நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும்.




## கனிம வளக்கொள்ளை

கேரளாவில் கட்டப்பட்டு வரும் விழிஞ்ஞும் துறைமுகத்திற்காகக் கன்னியாகுமரியிலிருந்து மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் பெயர்க்கப்பட்டு விதிகளுக்குப் புறம்பாகக் கனிம வளங்கள் கடத்தப்படுகின்றது. மாநிலங்களுக்கு இடையேயான வணிக நடவடிக்கை எனும் அளவில் இதற்குத் தடை இல்லை என்று கேரள அரசின் தரப்பில் கூறப்படுகின்றது.







தன்னுடைய மாநிலத்தின் வளங்களைப் பேணிப் பாதுகாக்கும் கேரள அரசு தமிழ்நாட்டின் வளங்களைக் கொண்டு செல்வது ஏற்புடையதல்ல. எனவே மேற்குத் தொடர்ச்சி மலைகள் உடைக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும்.

## சேலம் - சென்னை எட்டு வழிச்சாலை

சாலைகள் மக்கள் போக்குவரத்தின் தேவைக்காக அமைய வேண்டுமேயொழிய, பெருமுதலாளிகளின் வணிக நடவடிக்கைக்காக மக்களை இன்னல்களுக்கு ஆளாக்கும் வகையில் இருத்தல் கூடாது. சேலம் - சென்னைக்கான உரிய சாலைப் போக்குவரத்து நடைமுறையில் இருக்கும் நிலையில், வேளாண் நிலங்களை அழித்து வரவிருக்கும் எட்டுவழிச் சாலைத் திட்டம் மக்களுக்கு எதிரானது எனும் நிலைப்பாட்டில் நாம் தமிழர் கட்சி உறுதியாக இருக்கின்றது. சேலம் எட்டுவழிச் சாலைத் திட்டம் வேறு எந்த வடிவில் / பெயரில் வந்தாலும் அதனை எதிர்த்து நாம் தமிழர் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

**கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சட்டத்திருத்தங்கள் மற்றும் திட்டங்கள் இயற்கை வளங்களின் அழிவுக்கு வித்திடும் வகையிலேயே அமைந்துள்ளன.**

## இயற்கைப் பேரழிவுச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள்

வனப் பாதுகாப்பினைச் சீர்குலைக்கும் வனப்பாதுகாப்புத் திருத்தச் சட்டம் 2023, வன உயிர்ப் பாதுகாப்பினைச் சீர்குலைக்கும் வனவுயிர்ப் பாதுகாப்புப் திருத்தச் சட்டம் 2022, உயிர்பன்மயப் பாதுகாப்பிற்கான அதிகாரங்களைக் குறைக்கும் உயிர்பன்மயப் பாதுகாப்புத் திருத்தச் சட்டம் 2021, திட்டங்களுக்கான சுற்றுச்சூழல் ஒப்புதல் பெறுவது குறித்துத் தீர்மானிக்கும் விதியை நீர்த்துப்போகச் செய்யும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை 2020, இவ்வாறு சூழலியல் நலனுக்கு எதிராக ஒன்றிய பாஜக அரசு கடந்த 10 ஆண்டுகளில் கொண்டுவந்த அனைத்துச் சட்ட விதிமுறைகளையும் நாம் தமிழர் கட்சி முழுமையாக எதிர்க்கின்றது. இந்தச் சட்டம் / சட்டத் திருத்தங்களை உடனடியாகத் திரும்பப் பெறுவதோடு ஏற்கெனவே இருந்த பிரிவுகளை மேலும் சூழலியல் நலன் தொடர்பாக மாற்றி அமைக்க நாம் தமிழர் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

# காலநிலை மாற்றம்




மனித செயல்பாடுகளின் காரணமாகக் கரியீருயிரக (கரியமிலக்காற்று - Carbon dioxide) வெளியேற்றம் அதிகரித்து, புவியின் வெப்பநிலை குறிப்பிட்ட அளவைவிடக் கூடி வருகின்றது. இதனால் துருவப் பகுதிகளிலுள்ள பனிப்பாறைகள் உருகுதல் போன்ற மோசமான இயற்கை விளைவுகள் ஏற்படுகின்றன. இன்னும் சில ஆண்டுகளில் புவி வெப்பநிலை 1.5° செல்சியசு அளவிற்கு உயரும் நிலையில் தவிர்க்க முடியாத வேகத்தில் கடும் காலநிலைப் பேரிடர்களும், பாதிப்புகளும் அதிகரிக்கும் என்று அண்மையில் வெளியான காலநிலை மாற்றத்திற்கான பன்னாட்டுக் குழுவின் (IPCC) அறிக்கை கூறுகின்றது.

இவ்வாறு, பருவநிலை மாற்றம் காரணமாக உலகளவில் ஏற்பட்டுள்ள பேரிடர் நிலையைக் கருத்தில் கொண்டு, அதன் தாக்கத்தைக் குறைக்கும் முயற்சிகளில் முதன்மைக் கவனம் செலுத்த வேண்டும். ஒன்றிய நாடுகளின் (United Nations) பருவநிலை மாற்ற அமைப்பு வலியுறுத்தும் தரநிலைகளைப் பின்பற்றி, பாரிசு பருவநிலை ஒப்பந்தம் உள்ளிட்ட உலகளாவிய பருவநிலை இலக்குகளை அடையத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள இந்திய ஒன்றிய அரசை நாம் தமிழர் கட்சி வலியுறுத்தும்.

**இன்னும் சில ஆண்டுகளில் புவி வெப்பநிலை 1.5° செல்சியசு அளவிற்கு உயரும் நிலையில் தவிர்க்க முடியாத வேகத்தில் கடும் காலநிலைப் பேரிடர்களும், பாதிப்புகளும் அதிகரிக்கும் என்று அண்மையில் வெளியான காலநிலை மாற்றத்திற்கான பன்னாட்டுக் குழுவின் (IPCC) அறிக்கை கூறுகின்றது.**





# ஈழம் எங்கள் இனத்தின் தேசம்



நிலமிழந்து போனால்,
பலமிழந்து போகும்
பலமிழந்து போனால்,
இனம் அழிந்து போகும்.
ஆதலால் மானுடனே
தாய்நிலத்தைக் காதலிக்கக்
கற்றுக்கொள்!

– புதுவை இரத்தினதுரை






தமிழீழம் என்பது உலகமெங்கும் பரவி வாழும் தமிழர்களுக்கான தேசம்; தமிழ்த்தேசிய இனத்தின் மூச்சு; பெருங்கனவு! ஒரு தேசிய இனம் தனக்கென என்றைக்கு ஒரு தேசத்தை அடைகின்றதோ, அன்றைக்குத்தான் முழுமையான விடுதலை அடையும். தமிழ்த்தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கட்டியெழுப்பிய தமிழீழத் தேசத்தை இந்தியாவை ஆண்ட காங்கிரசு அரசின் துணையோடும், உலக நாடுகளின் உதவியோடும் சிங்கள இனவெறி அரசு முழுமையாக அழித்தொழித்தது. இதன் விளைவாக, ஒன்றே முக்கால் இலட்சத்திற்கும் மேலான தமிழின மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். அந்நிலத்தில் திட்டமிடப்பட்ட ஓர் இனப்படுகொலை நிகழ்த்தி முடிக்கப்பட்டது. இனப்படுகொலை நடந்து முடிந்து 15 ஆண்டுகளாகியும் பன்னாட்டு சமூகம் இன்றளவும் அதற்குரிய நீதியைப் பெற்றுத்தரவில்லை; இனவெறிக் கொலையாளிகளைத் தண்டிக்கவுமில்லை; தீர்வையும் அளிக்கவில்லை. தனித்தமிழீழம் ஒன்றே ஈழத்தமிழ்ச் சொந்தங்களுக்கான ஒற்றைத்தீர்வென உறுதியாக முன்வைக்கின்றது நாம் தமிழர் கட்சி. எனவே, ஈழத்தில் நடந்தேறிய திட்டமிட்ட இனப்படுகொலைக்குப் பன்னாட்டுப் போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும், ஈழ மண்ணிலும், புலம் பெயர்ந்து வாழும் ஈழச்சொந்தங்களிடமும் தனி நாடு அமைப்பதற்குரிய பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமெனவும் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றது.

இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கை மாற்றப்பட்டு, ஆசிய நாடுகளிடையே ஈழத்திற்கு ஆதரவான அணி சேர்க்கை நிகழ்த்தப்பட்டு, இந்தியாவில் வாழும் பல்வேறு மொழி வழித்தேசிய இனங்களின் நிகராளர்கள், பல்வேறு மாநிலங்களின் முதல்வர்கள் என அனைவரின் ஒருமித்த ஆதரவோடும், கிழக்கு பாகிசுதானை வங்கதேசமாகப் பிரித்துக் கொடுத்த இந்திய ஒன்றியத்தின் செயல்பாட்டு நீட்சியாகத் தமிழீழத்தை அமைப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி, தமிழர்களுக்கென ஒரு தேசம் படைக்க நாம் தமிழர் கட்சி அரும்பாடாற்றும்!

# விடுதலைப் புலிகள் - தடை நீக்கம்



இகிலாந்து, அயர்லாந்து, கனடா போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் அந்நாடுகளின் சார்பாகப் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறுகின்றனர். திபெத், மியான்மர் போன்ற நாடுகளிலிருந்து ஏதிலிகளாய் வந்தவர்கள் இந்தியாவில் குடியுரிமை பெற முடிகிறது; சொத்துகள் வாங்க முடிகிறது; உயர்கல்வி கற்க முடிகிறது. ஆனால், ஈழத் தமிழர்களுக்கு அந்த வாய்ப்பு முழுவதுமாக மறுக்கப்படுகின்றது. இத்தோடு, இந்தியாவிற்கு ஏதிலிகளாக வந்த பெரும்பான்மையான ஈழத்தமிழ்ச்சொந்தங்கள் முகாம்களில் பல்லாண்டுகளாக அடைக்கப்பட்டுள்ளனர். இவற்றிற்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையே முதன்மைக் காரணமாகப் பார்க்கப்படுகின்றது.

பல நாடுகள் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி வருகின்றன. ஈழ விடுதலைக்காகப் போராடிய விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒழித்துவிட்டோம் என்று இலங்கை அரசே அறிவித்துவிட்ட நிலையில், இந்திய ஒன்றியம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீட்டிப்பது முறையன்று; தடையை நீக்க வேண்டும் என்பதே நாம் தமிழர் கட்சியின் கோரிக்கை.

**திபெத், மியான்மர் போன்ற நாடுகளிலிருந்து ஏதிலிகளாய் வந்தவர்கள் இந்தியாவில் குடியுரிமை பெற முடிகிறது; சொத்துகள் வாங்க முடிகிறது; உயர்கல்வி கற்க முடிகிறது. ஆனால், ஈழத் தமிழர்களுக்கு அந்த வாய்ப்பு முழுவதுமாக மறுக்கப்படுகின்றது.**

# எழுவருக்கான முழு விடுதலை

பேரறிவாளன் சாந்தன் முருகன்



நளினி இராபர்ட் பயாஸ் ஜெயக்குமார் இரவிச்சந்திரன்

**'எழுவர் விடுதலையே இனத்தின் விடுதலை'** எனும் கொள்கை முழக்கத்தை முன்வைத்து, பல ஆண்டுகளாகப் போராடியது நாம் தமிழர் கட்சி. இன்றைக்கு ஏழு பேரும் சட்டத்தின் பிடியிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால், அதில் ஈழச்சொந்தங்களான இராபர்ட் பயசு, முருகன், சாந்தன், ஜெயக்குமார் ஆகியோர் சிறப்பு முகாம் எனும் சித்தரவதைக்கூடத்தில் அடைக்கப்பட்டதால், இன்றளவும் அவர்கள் விடுதலை பெற்று வாழமுடியவில்லை. அதில் சாந்தன் உடல்நலக்குறைபாடு ஏற்பட்டு அண்மையில் மறைவெய்தினார். விரும்பிய நாட்டுக்குச் செல்ல ஒப்புதல் தராத ஒன்றிய அரசும், அடிப்படை வசதிகள் கூட அற்ற நிலையில் அவர்களைச் சிறப்பு முகாமிலே அடைத்த மாநில அரசுமே அம்மரணத்திற்குப் பொறுப்பேற்க வேண்டுமெனக் கூறி, இரு அரசுகளையும் நாம் தமிழர் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

இத்தோடு, முருகன், ஜெயக்குமார் ஆகிய இருவரையும் அவர்கள் குடும்பத்தோடு தமிழ்நாட்டிலேயே வாழச் செய்வதற்குரிய ஏற்பாட்டையும், இராபர்ட் பயசை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதற்குரிய ஏற்பாட்டையும் உடனடியாக முன்னெடுக்க வேண்டுமென்று நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது. மேலும், ஈழத்தமிழ்ச் சொந்தங்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் சிறப்பு முகாம் எனும் வதை முகாம்கள் நிரந்தரமாக மூடப்பட்டு, ஈழச்சொந்தங்களின் வழக்குகளுக்குத் தீர்வு காணப்படும்; அவர்களின் கருத்து மற்றும் விருப்பத்திற்கேற்ப, சட்டமுறையில் குடியுரிமை வழங்குவதற்கும், இலங்கை அல்லது பிற நாடுகளுக்குச் செல்வதற்கான நடவடிக்கையை நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும்.



தேசியத் தலைவர்

மேதகு வே.பிரபாகரன்

வென்றாக வேண்டும் தமிழ்! ஒன்றாக வேண்டும் தமிழர்!



அதிகாரம் வலிமையானது!
எங்கள் அதிகாரம் எம் மக்களுக்கானது!

அதிகாரம் வலிமையானது!
அதை அடைந்துவிட்டால்
அனைத்தும் எளிமையானது!

புரட்சி எப்போதும் வெல்லும்!
இது மாற்றத்திற்கான எளிய மக்களின் புரட்சி!

www.naamtamilar.org

எண்.8, மருத்துவமனைச் சாலை, செந்தில்நகர், சின்ன போரூர், சென்னை - 600 116.
044 - 43804084 naamtamilar@gmail.com Naamtamilarorg naamthamizharkatchi www.makkalarasu.in